Registered as a Newspaper in Srilanka

வெள்ளிக் கிழமைகளில்
உங்கள் கரங்களில்...
வார இதழாக
மக்கள்
கருத்துக்களுடன்

# முஸ்லிம் குரல்

Muslim Kural

மக்கள் முஸ்லிம் குரல்

தருகை - 20 ரூபா

05 டிசம்பர் 2003 வெள்ளிக்கிழமை | 11 ஷவ்வால், 1424 | சுவடு- 26

## ஈராக்கிற்கான புஷ்ஷின் பயணம் ஒரு கோழையின் செயலைப் போன்றாகும்!



ஆக்கிரமிக்கப்பட்ட ஈராக்கிற்கு அமெரிக்க ஜனாதிபதி புஷ் கள்ளப் பூனையைப்போல் சென்று நள்ளிரவில் திரும்பி வந்துவிட்டார்! ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் மனோநிலையை வீரத்தை நோக்கித் திரும்புவற்காக, ஒரு கோழையின் பயணத்தை புஷ் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் வெளிப்பாடு மட்டுமே போதும் ஈராக்கில் அமெரிக்கா எதிர்கொண்டுவரும் தோல்வியை நிருபணம் செய்வதற்கு.

தொடரான தாக்குதல்களால் நிலை குலைந்து போயுள்ள கூட்டுப்படைகளின் மனோநிலையை புஷ்ஷின் திடீர் விஜயம் தடுத்து நிறுத்துமென அமெரிக்கா காணும் கனவு ஹொலிவூட் திரைப்படங்களுக்கே பொருந்தும். நிஜத்தில் அது கூட்டுப்படைகளின் மனோநிலையை ஒருபோதும் வீரமிக்கதாக்காது என்பதை மீளவும் வரலாறு அமெரிக்காவுக்கு ஈராக்கில் புரிய வைக்கும்.

# தொடரும் முஸ்லிம்கள் மீதான அடாவடித்தனம்!

# கிண்ணியா;







கடந்த நவம்பர் 28ஆந் திகதி கிண்ணியாவைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் விவசாயிகள் தங்கள் வயல் வெளிகளில் வெட்டிக் கொல்லப்பட்டனர். இவர்களின் உடலங்களின் படத்தையே காண்கின்றீர்கள்.

## நமது மக்களை யார் பாதுகாப்பது?

(கிண்ணியாவிலிருந்து முஸ்லிம் குரல் ஆசிரியர் குழுவினர்)

கிண்ணியா முஸ்லிம் பிரதேசம் மிக நெருக்கடியான அயுத அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ளது. புலிகளின் தொடரும் இராணுவ பொருளாதார முற்றுகை-நவம்பர் மாதத்திலிருந்து இப் பிரதேசத்தில் நிலை கொண்டு முஸ்லிம் மக்களின் இயல்பு வாழ்வை சூறையாடி வருகின்றது. புலிகளின் தொடரும் காட்டுத்தர்பாரை தமிழ் ஊடகங்களும், தமிழ் ஆதிக்கத்தரப்பும் மூடி மறைத்து 'மூன்றாவது சக்தி" என்ற வழமையான மாய வித்தைப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை வேறு திசைக்கு வழமையான பாணியில் திசை திருப்பப்பார்க்கின்றனர் என்கின்றனர் பாதிக்கப்பட்ட கிண்ணியா வாழ் முஸ்லிம் மக்கள்.

மிகத்தெளிவாகவும் திட்டவட்டமாகவும் நாம் கிண்ணியாவில் சந்தித்த ஊர்ப்பிரமுகர்கள், மக்கள் இச்சம்பவத்தின் பின்னால் புலிகள் தரப்பு செயற்படுவதை முற்று முழுதாக ஊர்ஜிதம் செய்தனர். உண்மை நிலைமை இவ்வாறு இருக்க, அரசாங்கமும், ஆளும் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் கிண்ணியாவாழ் முஸ்லிம்களின் பாதுகாப்பையும், உயிர் வாழ்வையும் உத்தரவாதம் செய்யும் பூரணமான நடவடிக்கைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை எனவும் இப்பிரதேச முஸ்லிம்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அடுத்த கணம் எதுவுமே நடக்கலாம் என்ற அச்சம் தரும் சூழல் திருமலை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்கள் அனைத்திலும் நிலை கொண்டுள்ள இக்கால கட்டத்தில், 'எலிக்கு மரணம் பூனைக்கு விளையாட்டு" என்ற வாழ்வின் சூழல் முஸ்லிம் மக்கள் மீது படரவிடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு முழுவதுமாகவுள்ள முஸ்லிம் கிராமங்கள், என்றுமில்லாத வகையில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்ட கணத்திலிருந்து அச்சம் தரும் வாழ்வை எதிர் கொண்டு வருகின்றன.

கிண்ணியாவில் இரண்டு வாரங்களுக்குள் ஏழு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்தழிப்புகள் ஏற்பட்டுள்ளன. விவசாயத்தையும், மீன்பிடியையும் நம்பி வாழும் இம் மக்கள் மிக மோசமான பொருளாதார முற்றுகைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும், இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் செய்கை பண்ணப்பட்ட ஆயிரக்கணக்கான நெல் செய்கைகளை கைவிட வேண்டிய நிலைக்கு முஸ்லிம் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மீன்பிடிப்பதற்கு கடலுக்குச் செல்ல முடியாத நிலையையும், எதிர்கொள்கின்றனர். கிண்ணியா மக்களின் வாழ்வு இன்றைய நாளில் அச்சம் சூழ்ந்ததாகவும் கண்ணீர் நிறைந்ததாகவும் ஆதிக்கத் தரப்பால் மாற்றப்பட்டுள்ளது. நமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்குள்ளது.

(பிரதம ஆசிரியர்)

## மு.கா. மீண்டும் பிளவுபடும் ஆபத்து?



மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மறைவுடன் முதல் தடவையாக பிளவுண்ட முஸ்லிம் காங்கிரஸ், மீளவும் ஒருமுறை பிளவுண்டது. இப்போது மு.கா ஹக்கீம், பேரியல், அதாவுல்லா தரப்பாக இயங்கி வருகிறது. மீளவும் இம் மூன்று அணிகளும் பல்வேறு வகைகளில் பிரிவுண்டு போவதற்கும், இவ் அணிகளுக்குள் உள்ள பலர் அணி மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாகத் தெரியவருகிறது. ஹக்கீம் தலைமையிலான ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் - ஹக்கீம் அணியை விட்டு தனித்த ஒரு வழியில் செல்லவுள்ளதாக தெரியவருகிறது. அத்துடன் அதாவுல்லா தரப்பிலுள்ள அஸீஸ் வேறொரு அணிக்கு மாறுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது. பேரியல் தலைமையிலான ஹிஸ்புல்லாஹ் நேரடியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சங்கமமாக தயாராகி விட்டதாகவும் தெரிய வருகிறது. பாராளுமன்றக் கலைப்பு அறிவிப்பு வந்தவுடன் அனைவரின் நிலைப்பாடுகளும் தெரியவந்துவிடும்.

## சந்திரிக்கா - ரணில் மோதல் நீடிக்கிறது தேசிய அரசாங்கம் சாத்தியமில்லை!



ஏட்டிக்குப் போட்டியான அரசியல் சூழல் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் அதிகரித்து வருகிறது. சந்திரிகா. ரணிலுக்கிடையிலான சுமுகமான அரசியல் சமரசத்திற்கான வாய்ப்புகள் நாளுக்கு நாள் குறைந்தே வருகின்றன. மலிக் - தித்தாவல குழுவினர்களுக்கிடையிலான பேச்சுகள் எதிர்பார்த்த எந்த வெற்றியையும் தரவில்லை. காலத்தைக் கடத்தும் யுக்தியாவே இருதரப்பு பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து வருகின்றன.

சந்திரிகாவின் தேசிய நல்லிணக்க அரசாங்கம் அமைக்கும் யோசனையை ரணில் தரப்பு ஏலவே நிராகரித்து விட்டது. தேசியக் கொள்கை வகுக்கும் விடயம் பற்றி மட்டுமே அரசாங்கத் தரப்பு பேசத்தயாராக உள்ளதாகத் தெரிகிறது. இவ்விரு முரண்பாடுகளுக்குமிடையில் ஒரு இணக்கத்தைக் காண்பது என்பது 'கல்லில் நாருரிப்பது" போல்தான் என்கின்றனர் கொழும்பு அரசியல் விமர்சகர்கள்.

இருக்கும் அனைத்து மாற்று வழிகளையும் பரிசீலித்தாகிவிட்டது. பொதுத்தேர்தலுக்குச் செல்வதைத்தவிர. இப்போது பொதுத்தேர்தல் ஒன்றேதான் தென்னிலங்கை அரசியல் நெருக்கடிக்கான தற்காலிக மாற்றீடாக உள்ளது. இந்த உண்மை இரு ஆளும் தரப்புக்கும் நன்கு தெரிந்த விடயம்தான். இவ்விருதரப்பும் பொதுத்தேர்தலை நோக்கியே தங்களை உள்ளார்ந்து தயார்படுத்தி வருகின்றன.

மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரித்தவர்கள் இவ் எதிர்பாராத சூழ்நிலையால் மக்களிடம் மீளவும் வரத்தொடங்கிவிட்டனர். இன்றைய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 40 சதவீதமான பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய பாரளுமன்றத்திற்கு தெளிவாவதற்கான வாய்ப்புகள் இல்லை என அண்மைய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பல முஸ்லிம் பா.உக்கள் அடுத்த தேர்தலில் தெரிவாவதற்கான வாய்ப்புகள் குறைந்தளவிலேயே காணப்படுகிறது.

டிசம்பர் மாதம் 19ம் திகதிக்குப் பின் எந்த நேரத்திலும் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற செய்தி கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெருமளவு உறுதி செய்யப்பட்டுவிட்டது. சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்தால், சந்திரிகாவின் தேசிய அரசாங்கம் அமைக்கும் முயற்சி படுதோல்வி அடைந்துவிட்டது என்பதை அது நிருபணம் செய்யும். சந்திரிகா, ஜே.வி.பி. க் கூட்டு புதிய பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக் ... நீங்கள் வாங்கிப் படியுங்கள், வழங்குங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமியர்களுக்கு நடமாடும் தொலைபேசி மூலம் தொழுகையில் ஈடுபட வசதிகள்

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் நடமாடும் தொலைபேசிகள் உடைய இஸ்லாமியர்களுக்கு தங்களுடைய நடமாடும் தொலைபேசிகள் மூலம் அன்றாட தொழுகை நேரங்களில் பாங்கு சொல்வதற்கான சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அரபுலகில் அதிகளவில் நடமாடும் தொலைபேசிப் பாவனையாளர்களைக் கொண்ட ஐ.அ.எ. இராஜ்ஜியத்தில் அரசாங்கத்திற்குரிய 'இடிஸிலாட்' (Etisalat) எனும் தொலைபேசி பரிவர்தனை நிறுவனம் இதனை அறிமுகப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்புதிய சேவையானது அந்நாட்டு இஸ்லாமிய வியாபாரிகள் மத்தியில் மிகவும் புகழ் பெறும் என கூறப்படுகின்றது. எமிரேட்ஸ் இராஜ்ஜியத்தில் 75 சதவீதமானவர்களிடம் நடமாடும் தொலைபேசிகள் புழங்குகின்றன.

நடமாடும் தொலைபேசிகள் சமய அநுட்டானங்களில் பயன்படுத்துவதானது புதிய தொழில் நுட்பத்தை சமய விவகாரங்களில் கலப்பதாக எமிரேட்ஸிலுள்ள சில செய்திப் பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தன. நான்கு அமெரிக்க டொலர்களுக்கு இச்சேவையைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதால் அதான் ஒலி கேட்காத தூரத்தில் இருப்பவர்களுக்கு இது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

எது எப்படியிருப்பினும். குறிப்பிட்ட சேவையைப் பெற்றுத் கொண்டவர் வேறு நாட்டுக்குச் செல்ல நேர்ந்தால் அந்நாட்டின் தொழுகை நேரங்களை அறிவித்து விட வேண்டும். இப்புதிய சேவையை உலகம் பூராவிலுமுள்ள இஸ்லாமியர்களுக்கு விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொண்டு வரும் 'செலெயுகொம்' எனும் நிறுவனம் ஐந்து வருடங்களுக்குள் உலகம் பூராவிலும் அமைந்துள்ள இஸ்லாமிய நிலையங்களிலிருந்து அந்தந்த நாட்டில் அதான் கூறும் நேரங்களை திரட்ட நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது. தற்போது குவைட் வரைக்கும் இச் சேவை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



மஞ்சந்தொடுவாயில் அமைந்துள்ள காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரின் பழக்கடை அமைந்துள்ள இடத்தை உரிமை கொண்டாடி அவரை அங்கிருந்து அப்புறப்படுத்த ஆதிக்கத்தரப்பினர் அக்கடையை எரித்துள்ளனர். எரிந்த கடையையும் உரிமையாளரையும் படத்தில் காணலாம்.

## திவுளானை - கதுருவெல வயல் வெளிப்பாதை மீண்டும் திருத்தப்படுமா?

பொலன்னறுவை மாவட்டத்தில் தமன்கடுவைப் பிரதேச சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட மேற்படி பாதை மீண்டும் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதாக இப்பிரதேச வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர். மேற்படி இப்பாதை மீண்டும் வெகு விரைவில் திருத்தப்படுமா? என்ற கேள்விக்குறியும் எழுந்துள்ளது. இப்பாதையானது மறு சீரமைத்து ஒரு மாத காலப்பகுதியினுல் சிதைவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(திவுளானை நபீல்)

## பஸ் ஆசனம் பதிவில் மோசடி

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு வழியாக கொழும்பு செல்லும் பஸ் ஆசனப் பதிவில் மோசடி இடம் பெற்று வருகிறது. இங்கு ஆசனப்பதிவு செய்யும் அதிகாரி காலை 8.00 மணிக்குத்தான் வேலைக்கு சமூகம் தருவார். ஆனால் ஆசனப் பதிவு காலை 8.30 மணிக்கு இடம் பெறும்.

எனவே இங்கு ஆசனங்கள் 30 வரை இருந்தால் இங்கு 8ம் இலக்கத்துக்குப் பிறகு தான் ஆசனப் பதிவு இடம்பெறும். ஆனால் இவை எப்படி இடம்பெறுகிறது என்பது புரியாத புதிராகவுள்ளது. இங்கு ஆசனப்பதிவுக்காக வரும் பிரயாணிகள் தூர இடங்களில் இருந்து வந்து கொண்டு தங்களது ஆசனப்பதிவிற்காக 'டோக்கன்" எடுக்க வேண்டும். ஆனால் அப்படி இருந்தும் இங்கு மோசடி இடம் பெறுவது இங்கு வரும் பிரயாணிகளுக்கு செய்யும் துரோகம் எனலாம்.

அத்தோடு இவ் ஆசனப்பதிவினை கல்முனை பஸ்தரிப்பிடத்தில் அல்லது கல்முனைசாலையின் ஒரு பிரிவில் நேர்மையான முறையில் செய்து தர கல்முனை சாலை முகாமையாளர். நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் தலைவர் கவனத்திற் கொண்டு பொது மக்களின் பிரயாணத்திற்கு இடையூறு இல்லாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டி நிற்கின்றனர்.

- தகவல் - ஏ.ஆர். பரீத் சவளக்கடை - கல்முனை




## கண்டி மாவட்ட அஷ்ரஃப் நினைவு மன்றத்தினரின் கவனத்திற்கு!

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃபின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு கண்டி மாவட்ட அஷ்ரஃப் நினைவு மன்றம் தேசிய ரீதியில் திறந்த. பாடசாலை மட்டங்களில் கவிதை. கட்டுரை போட்டிகளை நடாத்தியது. இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில் 2002.10.26ஆம் திகதி கண்டி கலாசார மண்டபத்தில் நடாத்தப்பட்டு அவர்களுக்கான பரிசில்களாக வெற்றிக்கிண்ணமும். பதக்கமும் மட்டுமே வழங்கப்பட்டதுடன் பணப்பரிசில்களும். சான்றிதழ்களும் காலக் கிரமத்தில் அனுப்பி வைப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் ஒரு வருடத்தை கடந்து மூன்றாவது நினைவு தினத்தை சந்தித்த போதும் இவை வெற்றியீட்டியவர்களின் கரங்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை.

கண்டி மாவட்ட அஷ்ரஃப் நினைவு மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி எம். பஸ்லின் வாஹிட் அவர்களுடன் பல தடவை தொடர்பு கொண்டு கேட்ட போதும் அனுப்பி வைக்கின்றோம்' அனுப்பி வைக்கின்றோம்! என்று கதை சொல்லி. நழுவியே காலத்தை கடத்துகின்றார். மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரஃபிற்கு பெருமையை ஏற்படுத்த எண்ணியவர்கள் சிறுமைக்கு சிம்மாசனத்தை கொடுத்துள்ளனர். இவை கண்டி மாவட்ட அஷ்ரஃப் நினைவு மன்றத்தின் மீது நம்பிக்கையின்மையை மக்கள் மத்தியில் வலுவூட்டுவதற்கு ஏதுவாக இருக்கின்றதுடன். போட்டியாளர்கள் மத்தியில் விரக்தியையும். பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர்கள் மத்தியில் விசனத்தையும் தோற்றுவித்துள்ளது. மேற்படி போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பணப் பரிசினையும். சான்றிதழையும் விரைவாக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யூ . எல். எம். அஸ்மின். மத்திய வீதி . பொத்துவில்.

## முஸ்லிம்குரல் நமது அரசியலுக்கு பெறும் பெறுமதியானது!

குறுகிய காலத்தினுள் பல ஆயிரக் கணக்கானோர் மனதில் இடம்பிடித்த முஸ்லிம் குரல் தாங்கி வருகின்ற அனைத்துச் செய்திகளும் தற்கால இலங்கையில் சூடுபிடித்து வரும் அரசியல் சிக்கல்களுக்கு மத்தியில் பெரும் பெறுமதியானது.




இலங்கையில் முஸ்லிம்கள் முகவரி இல்லாத நிலைமைக்கு ஆக்கப்படக்கூடிய சூழலை அந்நிய சக்திகள் முயற்சிக்கும் வேளையில் முஸ்லிம்களின் தலைமைத்துவம் தாமே. தாமே என்ற உளறக்கூடியவர்களும் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் முஸ்லிம் குரல் துணிந்து சொல்ல வந்ததை என்னைப் போன்ற எத்தனையோ ஆயிரக் கணக்கானோர் அக மகிழ்ந்தனர். ஆனால் 'முஸ்லிம் குரல்' அவ்வப்போது மறைவதும். நிற்பதும் மட்டுமல்லாமல். சுவடு 25 தன்னையே சுருக்கிக் கொண்டதை கண்டு மிக மிக சஞ்சலம் அடைந்தேன்.

றிபாய் எம். சம்சுதீன் - 130.
உப தபாலக வீதி. நிந்தவூர் - 07.

### இந்தக் குரல் ஓய்ந்து விடக் கூடாது!

முஸ்லிம்களின் உரிமைகள் உணர்வுகள் அபிலாசைகள் என்பனவற்றினை பாதுகாக்க குரல் கொடுக்கும் முஸ்லிம் குரலே உன் வருகை எமது சமுதாயத்திற்கு அளப்பெரிய சேவை. முஸ்லிம் குரல் வாசகி என்ற வகையில் நான் கேட்பது இந்தக் குரல் ஓய்ந்து விடக்கூடாது தொடர்ந்து ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதே! அதற்காய் என் போன்ற பல்லாயிரம் முஸ்லிம்களின் தூய பிராத்தனைகள் துணை நிற்கும். வாழ்த்துக்கள்.

செல்வி ஷாமிலா செரீப் .
செம்மண்ணோடை

### இறைவன் துணை இருக்கும்

முஸ்லிம் குரலின் துணிவை நான் மிகவும் பாராட்டுவதில் மன நிறைவடைகின்றேன். இதற்கு நிச்சயமாக இறைவன் துணை நிற்பான் என்பதில் என் மனம் உறுதியாக இருக்கின்றது.

இத்தொழிலுக்கு விளம்பரம் பெரியதொரு மூலதனமாகும். இப்பத்திரிகை முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதிகளெங்கும் விற்பனையாக வேண்டும். பத்திரிகை விற்பனையாளர்கள் அதன் உயிராக தொழிற்பட ல் வேண்டும்.

இப்பத்திரிகை நமது சமூகத்தின் தினசரிப் பத்திரிகையாக வளர்ச்சி பெற்று இந்நாட்டு மொழிகளாகிய சிங்களம். ஆங்கிலம் என்பனவற்றிலும் பந்நூறு வருடங்கள் வாழ்ந்திட ஏக நாயகன் அருள் இருக்கும்.

எம். ஏ. ஆதம்லெப்பை
பிரசித்த நொத்தாரிசு - அக்கரைப்பற்று

## ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உணர்ச்சிக் குரல்

அரசியல் போட்டிகளும் அதிகார உணர்வுகளும் சுயநல மனோபாவமும் குடிகொண்ட எந்த ஒரு சமுதாயமும் தன்னில் நிமிர்ந்து நிற்கும் தன்மையை இழந்து விடும் என்பதற்கு கடந்த கால வரலாறுகள் எம் முன் கடலாய் விரிந்து கிடக்கின்றன.

ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட நிலையில் உள்ள ஒரு சமூகத்தின் தேவைகளை நாடி பிடித்து பாமர மக்கள் வரை கொண்டு சென்று விழிப்புறச் செய்யும் பாங்கு அலாதியானவை. தமிழ் மொழிப் பத்திரிகைகள் என்றவைகளெல்லாம் இன்று தமிழர்கள் பத்திரிகைகளாகி விட்ட நிலையில். எமக்கென்றொரு பத்திரியையாக பொருளாதார நெருக்கடிக்குள்ளும் எம்மைத் தேடி வருகிறது. நாம் அதனுடைய முழு வாசகனாகி எமது ஒற்றுமைக்கான முதல் அடியை வைப்பதுடன் பிரதேசவாதத்தையும் இனத்துவேசத்தையும் ஒழிப்போம்.

அத்துடன் எமது குரல்களும் உலகத்தின் செவிகளுக்கு கலப்படம் இன்றி ஓங்கி ஒலிப்பதற்கும். எமது சமூகத்தை கூறுபோட்டு வைத்திருக்கும் பொது எதிரியான ஊடகத் துறையை செயல் இழக்கச் செய்வதற்கும் 'முஸ்லிம் குரல்' நாளேடாக பவனி வர வேண்டும். ஆகக் குறைந்தது ஒவ்வொருவரும் ஒரு பத்திரிகையை வாங்கியாவது பங்களிப்புச் செய்யும்போது எண்ணிக்கை அதிகரித்து வளர்ச்சி பெறும் வாய்ப்பு உள்ளது என்பதே யதார்த்தமாகும்.

சொல்லன்பன் நசிறுதீன். ஒலுவில்



### ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்று வேண்டும்!

ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் இவ் வைத்தியசாலைக்கு தினமும் சிகிச்சைக்காக வருகின்றனர்.

ஆபத்தான நோயாளர்களை மட்டக்களப்பு. பொலநறுவை ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்வதற்கு ஒரு அம்புலன்ஸ் வண்டி அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. முன்பு இருந்த அம்புலன்ஸ் வண்டி பாவனைக்குட்படுத்த முடியாததாக உள்ளது. அத்தியாவசிமான இத்தேவையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா?



### வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை!

அடுத்த பட்ஜெட்டும் வந்து விட்டது. ஆனால் அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவு செய்யப்படவில்லை. கடந்த காலத்தில் இப்பாலம் புனர்நிர்மாணம் செய்யப்பட 4.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாம். மூதூர் மார்க்கட் வீதியின் நிலையையே நீங்கள் காண்கிறீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாக முஸ்லிம்கள் மீதான கொலைகள். அச்சுறுத்தல்கள் கிழக்கில் குறைந்தபாடில்லை. இது நம் அனைவருக்கும் தெரிந்த வேதனை தரும் உண்மையாகவுள்ளது. ஆனாலும், சந்திரிக்கா பாதுகாப்பு அமைச்சை மீளப் பொறுப்பெடுத்ததன் பின், கிண்ணியாவில், ஏறாவூரில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்து முள்ளனர். ஆகவே சந்திரிகாவும் முஸ்லிம்களை பாதுகாக்க தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டை இப்போது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதற்கு சமமாக உள்ளது.

இக் குற்றச்சாட்டை சந்திரிகா மீது சுமத்தும் ஆளும் தரப்பு முஸ்லிம் அரசியல் தலைமைகள் தாங்கள் செய்த வரலாற்றுத் துரோகத்தை சந்திரிகாவின் சேலைக்குள் புகுந்து மறைத்துக் கொள்ள முயல்கின்றனர். ஒன்றில் இப்படியான குற்றச்சாட்டுக்களைச் சந்திரிகாவை நோக்கிச் சொல்வது. அல்லது சந்திரிகாவுடன் மீளவும் சென்று சேர்ந்து கொள்வது மீறுவதற்கு சந்திரிகா ஒருவேளை முஸ்லிம்களை பயன்படுத்தக் கூடும். அப்படியான வாய்ப்புகள் இலங்கை அரசியல் அரங்கில் படிப்படியாக மேலோங்கி வருகிறது. சந்திரிகாவும் இப்படித்தான் வியூகமமைத்து திட்டமிட்டுள்ளார் போலத்தெரிகிறது. அவரின் செயற்பாடுகளும் பேச்சுக்களும் இதனையே உறுதிப்படுத்துகின்றன.

இப்படி முஸ்லிம்களின் விடயத்தைப் பாவித்து சந்திரிகா புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீற முடியுமென்றால் இது

# முஸ்லிம்களைக் காரணம் காட்டி சந்திரிக்கா புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறக்கூடும்?




வசதியாக ஆளும் கட்சியினர் சொல்லத்தொடங்கிவிட்டனர். இவர்களின் இக்குற்றச்சாட்டுகள் மேலேழுந்தவாரியாக உண்மையாகத் தென்படினும் இதில் இவர்கள் மிகமோசமான அரசியல் பிரச்சாரத்தையே மேற்கொள்வதுடன், உண்மைக்கு மற்றான தோற்றப்பாட்டினையும் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்த முனைகின்றனர். நடைபெற்று வருகின்ற முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள். அதற்கான ஏதுவான சூழல்கள் ரணிலுக்கும் புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) மோசமான பின் விளைவுகளாலேயே ஏற்படுத்தப் படுகிறது என்பதே உண்மையாகும்.

ஸ்ரீலங்காவின் முப்படைகளையும் புலிகளுக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபடுவதை இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் தடை செய்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை காரணம் காட்டியே புலிகள் முஸ்லிம் பிரதேசங்களுக்குள் சுதந்திரமாக ஊடுறுவுவதும் முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதலில் ஈடுபடும்போது படைகள் கைதட்டி பார்த்துக் கொண்டிருப்பதும் நடந்து வருகின்றன. அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாய் தற்காலிகமாக படைகள் புலிகளுக்கிடையில் புதுவித உறவும் புரிதலும் நிலவுகிறது. இந்த யதார்த்தத்தை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் புலிகளால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும். இடத்திலும் கண்டு வந்திருக்கிறோம். வாழைச்சேனை, மூதூர். சாய்ந்தமருது. அக்கரைப்பற்று, சம்மாந்துறை, இன்று கிண்ணியாவில் இதுதான் உண்மையாகியும் உள்ளது. சாதாரண முஸ்லிம்களைப் பொறுத்தவரை படையினரின் இவ்விதமான நிலை அதிக அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளதை முஸ்லிம் மக்களிடம் கானக்கூடியடிதாக உள்ளது. ஆனால் உண்மையில் அமுலில் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புரிந்தவர்களுக்கு படையினரின் இந்நிலை ஆச்சரியம் தரக் கூடிய ஒன்றல்ல.

சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை கையேற்றாலும் புலிகள் ரணிலுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமே அமுலில் உள்ளது. படைகளால். அரசாங்கத்தால் புலிகளை இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட விடயங்களுக்கு வெளியில் கட்டுப்படுத்தவே முடியாது. இதனை சரியான வாய்ப்பாக புலிகள், அரசாங்கத் தரப்பு பயன்படுத்திவரும் சூழலில், இந்த முக்கிய உடன்பாட்டை (MOU) மூடிமறைத்து விட்டு. முஸ்லிம்களைப் பாதுகாக்க சந்திரிகா தவறிவிட்டார் என்பது என. ஆனால் இவர்களிடம் முஸ்லிம் மக்கள் கேட்க வேண்டிய கேள்விகள் பல இருக்கின்றன.

ஒன்று இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை யாரின் ஆதரவுடன் ஆட்சி அமைத்த அரசாங்கம் செய்தது? யார் கடந்த காலத்தில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (பலர் கூட்டிக்காட்டியபோதும்) புகழ்ந்துரைத்து நின்றார்கள் என்கிற



வினாக்களைக் கேட்கின்றனர். இவைதான் இச் சூழ் நிலையில் முஸ்லிம் அரசியலின் பிரதான கேள்விகளாக உள்ளன. அத்துடன் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (மீள எழுத வேண்டுமென) முஸ்லிம்கள் விடயத்தில் திருத்தப்பட வேண்டுமென முஸ்லிம் அரசியல் தலைமைகளால் ஏன் ரணிலின் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியாமல் இருந்தது? இருக்கிறது?

இப்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) அமுலில் இருக்கும் வரை சந்திரிகா முற்றுமுழுதாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினாலும்கூட புலிகளால் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அழித்தொழிப்பை தடுத்து நிறுத்திவிட முடியாது. இதுதான் உண்மையாகும். ஆகவே முதலில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மீள் பரிசீலனைக்குட்படுத்தப்படல் வேண்டும் அல்லது நடைமுறை ஏற்பாட்டிலிருந்து இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அகற்றுதல் வேண்டும். அப்படி நடைபெற்றால்தான் புலிகளை கட்டுப்படுத்த முடியும்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முஸ்லிம்களுக்குப் பெருத்த நஷ்டத்தையே கொண்டுவரும். ஏனெனில் சிங்கள ஆளும் குழுமத்திற்கும் புலிகளுக்கு மிடையில் பெரும் முரண்பாடுகள் நிலவுகின்றபோதும். அவற்றை மூடிமறைத்து விட்டு. முஸ்லிம்கள் புலிகள் முரண்பாட்டை சிங்கள ஆளும் குழுமம் தனது அரசியலுக்கு பயன்படுத்தும் அதிக அபாயம் உள்ளது.

இந்நிலை ஏற்பட்டால் புலிகள் தங்களின் மோசமான அச்சுறுத்தல்களை முஸ்லிம்கள் மீது மேற்கொள்ள அதிக வாய்ப்பையும் நியாயத்தையும் சந்திரிகா வழங்கியவர் ஆகிவிடுவார். சந்திரிகா இந்த முடிவை எடுப்பதற்கு புலிகள்-சிங்கள ஆளும் குழும பிரதான முரண்பாடுகள் மட்டுமன்றி. முஸ்லிம் அரசியல் தலைமைகளை நெருக்கடிக்குள் தள்ளுதல். அந் நெருக்கடியின் ஊடாக தனக்குச் சார்பாக அவர்களை வளைத்துப் போடுதல் என்கிற முக்கியமான அரசியலும் அதன் தேவையும் சந்திரிக்காவுக்கு இன்று உள்ளது.

பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா எடுத்தும் முஸ்லிம்களை சந்திரிகாவால் பாதுகாக்க முடியவில்லை என்கிற ஆளும் முஸ்லிம் தலைமையின் குற்றச் சாட்டை சந்திரிகா மறுத்து. முஸ்லிம்களை பாதுகாப்பதற்கான ஒரேயொரு மார்க்கமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தனது அரசியலுக்கு பாவித்தால். முஸ்லிம்களுக்காகவே சந்திரிகா புலிகளுடன் முரண்பாட்டிற்குச் சென்றார் என்கிற மயக்கமான அர்த்தமும் (பிரதான உண்மை அதுவல்ல) முஸ்லிம் மக்கள் மத்தியில் மேலாங்கி விடும். பின்னரான அழிவுகள் அனைத்திற்கும் ரணிலே கரணமாகிவிடுவார்! அப்போது இன்று ரணிலை ஆதரிக்கும் எந்த முஸ்லிம் அரசியல் தலைமையும் அச்செய்கைக்கான நியாயத்தை முஸ்லிம் மக்கள் மத்தியில் முன்வைக்க முடியாது போய்விடும்.

மக்களாகிய நாம் நிலவும் முரண்பாடுகளையும். ஆபத்தான சூழலையும். நமது அரசியல் தலைமைகளின் ஏமாற்றுத் தனத்தையும் உணர்ந்தும். புரிந்தும் கொள்ளுதல் வேண்டும். உண்மையாக நமது அரசியல் தலைமைகள் எப்போது நமது மக்களுக்காகப் போராடப் போகிறார்கள்? ●

## உற்றுப் பார்வைக்கு... இவர்களை எம்.பியாக்கியவர்கள் கிண்ணியா மக்கள்தானே!

கிண்ணியா சம்பவம் தொடர்பாக முஸ்லிம் எம்.பி க்கள் பலர் ஜனாதிபதியை சந்தித்தபோது. கிண்ணியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று எம்.பி க்களும் செல்லவில்லையாம்! இதற்கு பிரதான காரணம் தலைவர் இல்லாதபோது ஜனாதிபதியை நீங்கள் (மு. காங்கிரசை பிரதிநிதித்துவப்படுத்தும் இருவரும்) சந்திக்க செல்ல முடியாது என்றாராம் பசீர் சேகுதாவூத். மற்றவர் ஐ.தே. கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்றபடியால் அவரும்செல்லவில்லையாம்! இதைக் கேள்விப்பட்ட கிண்ணியா மக்களுக்கு அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியாம். கட்சி அரசியல் செய்வதற்கு இதுதானா நேரம் எனக் கேட்கின்றனர்.




சந்திரிகா-ரணில் இருதரப்பினரிடையே யார் ஆட்சி அமைப்பது என்ற போட்டி நிலவுகிறது. சிறபான்மைக் கட்சிகளின் ஆதரவை இரு தரப்பினரும் வேண்டி நிற்கின்றனர்.

## கிண்ணியா சம்பவங்கள் விசனத்திற்கும், கண்டனத்திற்குமுரியவை!

தேசிய பொதுச் செயலாளர் - அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

கடந்த சில தினங்களாக கிண்ணியாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் முஸ்லிம்களை படுகொலை செய்யும் சம்பவங்களை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா ஆதங்கத்தோடு நோக்குவதுடன். தனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. கொலை செய்யப்பட்டவர்களுக்காக இறைவனை இறைஞ்சும் அதேவேளை அவர்களின் குடும்பத்தவர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது. இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தேசிய பொதுச் செயலாளர் அஷ்-ஷைக் எச். அப்துல் நாசர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:- மனிதாபிமானமற்ற இவ் அசம்பாவிதங்கள் நன்கு திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றமை வெள்ளிடை மலை. மனித நேயமுள்ள எவராலும் சகித்துக் கொள்ளமுடியாதவை. ஒரு குறிப்பிட்ட சமூகத்தை முழுமையாக அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு நீசத்தனமான எத்தனிப்பு. நிரந்தர சமாதானத்தை எய்துவதற்கு தடையானவை. இதன் பின்னணியில் யார் இருப்பினும் அதற்கான கிரயத்தை இன்றில்லாவிடினும் நாளையாவது செலுத்தியே தீர வேண்டும். ஒரு புறத்தில் சமாதானத்திற்கான குரல் ஓங்கி ஒலிக்க, மறு புறத்தில் சமாதானம் குரல்வளை நெரித்துக் கொல்லப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையே இத்தகைய நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.



இலங்கை வாழ் முஸ்லிம்கள் எங்கும், எப்போதும் பிற மத சகோதரர்களுடன் ஐக்கியமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்ந்தும் வருகின்றனர். 'படைப்புக்கள் அனைவரும் அல்லாஹ் வின் குடும்பத் தினராவர். அவர்களில் அல்லாஹ் வுக்கு மிகவும் விருப்ப மானவர் அவர்களில் அவனது குடும்பத் தினருக்கு மிகவும் பயன்கொடுப்பவராவார்" எனும் நபி மொழியை தாரக மந்திரமாகக் கொண்டு. இஸ்லாம் வழியுறுத்திச் செல்லும் மனித சமத்துவம். மனித சகோதரத்துவம். கருத்துச் சுதந்திரம் ஆகிய கோட்பாடுகளுக்கிணங்கி வாழ்பவர்கள். இத்தகைய சமாதான விரும்பிகளான முஸ்லிம்களை சீண்டி விட்டு. அதன் விளைவுகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தவும். சர்வதே மட்டத்தில் முஸ்லிம்கள் பற்றி தப்பபிப்பிராயம் ஏற்படுத்தவும் முனைப்போடு தொழிற்படுகின்ற சமாதானத்திற்கெதிரான நெறிகெட்ட சக்தியொன்றின் கை வரிசையே கிண்ணியா படுகொலைகளாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலேயே இத்தகைய அசம்பாவிதங்கள் தொடர்கின்றமையும்; இனந் தெரியாதோர் அல்லது மூன்றாம் தரப்பினர் இவற்றைச் செய்கின்றனர் என பொறுப்புவாய்ந்தோர் பதில் கூறித் தப்பிக்கொள்வதும் நகைப்புக்கிடமாகவுள்ளது. எனவே, நாட்டின் தலைவி என்ற வகையிலும், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி ஜம்இய்யா கேட்டுக்கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரிமை இழப்புக்குப் பொறுப்பு

## நம்அரசியல் வாதிகளல்ல! நம் தேசத்து மக்களே!

மைமுனா அக்கரைப்பற்று

இன்று சமூக அரங்கில் இருக்கும் ஒவ்வொரு மகனும் நாளைய வரலாற்றின் இன்றைய உயிர்ப்பான கருவிகள். வரலாறு திடீரென உருவாகி "தாதா" வாகி உருவெடுப்பதொன்றல்ல. மாறாக தன் அடிப்படை ஆக்க அம்சங்களை முறையாய் செம்மைப்படுத்தி சூழலின் பூரண தாக்கத்திற்குட்பட்டு உருக்கி வளர்க்கப்படும் கடந்த காலப் புத்தகம்.

ஒரு சமூகக் கட்டுமானம் அக புறச் சூழலின் இடைவெளியில் லாத நெருக்கமான தொடர்ச்சி, நிர்ப்பந்திக்கப்படாவிட்டாலும் கூட அதன் உண்மையான இயங்குதிறன் காரணமாக வெற்றிடங்கள் நிரப்பப்பட்டே வந்தது, வருகிறது, வரும்.

இன்றைய சமூக விஞ்ஞானம், உரிமையை வரலாற்றோடு மிக இறுக்கமாகப் பின்னிப் பிணைத்தே நோக்குகிறது. எவ்வளவுதான் வல்லமை பொருந்திய சமூகமாக இருந்த போதிலும் போதுமான வரலாறு அங்கு சமர்ப்பிக்கப் படாதவிடத்து, அந்தச் சமூகத்தின் இருப்பு உட்பட அனைத்தும் தூரத்துப் பார்வைக்கு அப்பாலாயினும் அச்சுறுத்தலுக் குள்ளான தொன்றாகவே இனங் காணப் படுகிறது.

உரிமைக்கும் வரலாற்றுக்குமான தொடர்பும், வரலாற்றின் உருவாக்கமும் சரியான முறையில் விளங்கப்படுமிடத்து அது தனி மனிதனை அல்லது குறித்துச் சுட்டும் அரசியல் வாதியை அல்லது அக்காலத்து தலைவனை மாத்திரம் கருத்தில் கொள்ளாது மாறாக ஒட்டு மொத்தமான அச்சமூகத்தின் பிரஞ்சையாகவே வெளிப்படும்.

நம் முஸ்லிம் அரசியல் வாதிகளும், தலைவர்களும் பிழைக்குமேல் பிழை, முட்டாள்தனம் செய்கிறார்கள் என்பது சொல்லித்தான் விளங்க வேண்டி இல்லை. ஆனால் நான் இங்கு முனைப்பாகச் சொல்ல வருவது இன்றைய வரலாற்று ரீதியான துரோகங்களை வெறுமனே தனிமனிதனான ரவூப் ஹக்கீமிடமும், அதாவுல்லா விடமும், ஃபேரியலிடமும் கொடுத்து விட்டு சமூகமும், சுற்றமும், முஸ்லிம் தேசமும் தன்னைச் சுத்தவாளியாக மெத்தப் பத்தினியாக அடையாளம் காட்ட எத்தனித்தால் அந்த சமூகம், அந்த சுற்றம், அந்த தேசம் இந்தத் தலைவர்களை விட கோடி மடங்கு வரலாற்றுத் துரோகம் செய்கிறது என்பதே உண்மை.

'பச்சை இரும்பால் கத்தி செய்து விட்டு, முருங்கங்கம்பு வெட்டக் கூட கத்தி லாயக்கில்லை" என்றால் எப்படித் தகும். இது எதன் குற்றம் கத்தியினதா? இரும்பினதா? புதிய - மாற்றமான காலத்துக்கேற்ற சிந்தனை ஊற்றெடுத்துப் பாய வேண்டும் அல்லது பாய வைக்கவேண்டும். தவிர கசந்து போன பழைய பல்லவியைப் பாடி பாரங்களை அதாவுல்லாவினதும் ஹக்கீமினதும் பே[illegible]லினதும் தலையில் வை[illegible] [illegible]ப்படித் தகும். ஏன் இந்தப் பழமை வாதம். பாவம் நம் தலைவர்கள்.

எஃகு இதயம் கிஞ்சிற்றும் இல்லாத, கையாலாகாத நம் சமுதாயத்தை வழி நடத்த ரஊப் ஹக்கீம், அதாவுல்லா போன்ற தலைவர்களை விடவும் திராணியுள்ள தலைவர் வேண்டும் என்று கேட்பது அளவு கடந்த பேராசையே...... நம் சமூக மட்டத்திற்கு இவர்களே பெறுதற்கரிய வரப்பிரசாதம்.

உதாரணத்திற்கு 1990களிலிருந்து தான்தோன்றித்தனமாக முஸ்லிம்களின் உயிர் மலினப்படுத்தப்பட்டு பச்சை பச்சையாக, கதறக்கதற நிறைமாதக்கற்பிணி என்றும் பாராமல், வீட்டிலும், வெளியிலும், சுஜூதிலும் கொன்று குவிக்கப்பட்ட போதும் இடைநிறுத்தப்படாமல் அவ்வீனச் செயல் முஸ்லிம் தேசத்தில் சர்வசாதாரணமாக நடந்தேறிய போதும் துளி கூட உயிருக்கு உத்தரவாதம் அளிக்காத மு.கா. ஐயும் அதன் தலைமையையும் அதன் பிற்பாடு வந்த தேர்தல்களில் முஸ்லிம் தேசம் அங்கீகரித்திருந்த போது எவ்வாறு வரலாற்றுத் துரோகத்தை வெறுமனே றவூப் ஹகீமிடமும், அதாவுல் லாவிடமும், ஹிஸ்புல்லாவிடமும் சாற்றிவிட்டு; முஸ்லிம் தேசம் தப்பித்துக் கொள்ளமுடியும்.

ஏன் இன்றைய சூழலை எடுத்துப் பாருங்கள் இவர்களுக்கு வாக்களித்த முஸ்லிம் தேசம், ஆளும் ஐக்கிய முன்னணியில் இருந்து கொண்டு பொல்லுக் கொடுத்து அடிவாங்குகிறோம் என்பதை எப்போதாவது உணர்ந்து உடனடியாக ஐ.தே.முன்னணிக்கான ஆதரவை விலக்கு என்று கொடிப்பிடித்திருக்கிறதா, இறங்கி ஆர்ப்பாட்டங்கள் செய்திருக்கிறதா ஆகக், குறைந்தது பிரதேச வாரியாகவேனும் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டதா? இல்லை. இல்லவே இல்லை. அப்படியாயின் வரலாற்றுத் துரோகத்தை எவ்வாறு அந்தத் தலைவர்களிடம் மாத்திரம் ஒப்படைப்பது?

தொடர்ந்து தொந்தரவு செய்தால் கோழிகூட எதிர்த்துக்கொத்தவரும். முஸ்லிம் தேச இளைஞர்களில் பெரும் பாலோர் அரசாங்கப் பரீட்சை எழுதிய அறிவாளிகள். என்றாயினும் ஒரு நாள் நாம் பலிக்கடாவாக் கப்பட்ட இக்காலப் பகுதிக்குள் குறிச் சிக் கொருவனாவது இறங்கி கூடி நின்று இனியும் மு.கா. 'பாச்சா" பலிக் காது 'வாப்பா, உம்மா சகோதரத்தை இனியும் உயிரோட பாக்கிறதாக இருந்தால், நிம்மதியாக தூங்க வைப்பதாக இருந்தால், பயமில் லாமல் சிறுநீர் கழிப்பதாக இருந்தால் வழியை மாற்ற வேண்டும் என்று உரத்துச் சொல்லி இருக்கிறானா? வீரமெல்லாம் நெஞ்சோடு திரண்டு ஒவ்வொரு பள்ளியிலும் ஒலிவாங்கியைத் தன் கையில் எடுத்து ஊர் மக்கள் எல்லோரும் ஒரு நாள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவோம். நம்மை நாம் பாதுகாப்போம்; பாதுகாப்பை உறுதிப் படுத்தாத தலைமைத்துவங்களை நெருக்குவோம் என்று எப்போதாவது சொல்லி இருக்கின்றனவா? அப்படி அவன் சொல்லி, ஊரவர்கள் பாதையில் இறங்கி குதித்திருந்தால், இன்றைய நம் தலைவர்கள் இப்படி இருந்திருப்பார்களா? அல்லது இப்படித்தான் செய்திருப்பார்களா? பலஸ்தீன பாலகனுக்கு இருக்கும் தைரியம்கூட இல்லாத மண்ணாங்கட்டி மீசை வைத்திருக்கும் நம் முஸ்லிம் தேச இளைஞர்களை விட்டு விட்டு வரலாற்றுத்துரோகத்தை நம் தலைவர்கள் மேல் போடுதல் நியாயமோ?

எனவே அறிஞர்கள் என்று சொல்பவர்களும், அறிக்கைகள் எழுதும் ஜவான்களும் நாங்கள் அப்பாவி என்று சொல்லும் பொது மகனும், இளைஞனும், யுவதியும் முஸ்லிம் தேசத்திற்கு செய்யும் வரலாற்றுத் துரோகத்தை சுமக்க வேண்டுமே தவிர ஒன்றுமே அறியாத நம் முஸ்லிம் தலைவர்களிடம் பாரத்தை போடுவது நம் அறியாமையே!

## பரீட்சை காலங்களில் குத்பாக்களை நீட்ட வேண்டாம்! அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வேண்டுகோள்!

2003.12.01 முதல் 2003.12.12 வரை க.பொத (சாஃத) பரீட்சை நடைபெறுகின்றது. முஸ்லிம் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபங்களுக்கு உரிய நேரத்தில் செல்வதற்கு வசதியாக பரீட்சைக் காலப்பகுதியில் நடைபெறும் வெள்ளிக்கிழமை ஜும்ஆப் பிரசங்கங்களை சுருக்கமாக அமைத்துக் கொள்ளுமாறு கண்ணியமிக்க கதீப்மார்களை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தேசிய பொதுச் செயலாளர் அஷ் - ஷைக் எச். அப்துல் நாசர் வேண்டிக் கொள்கின்றார்.

மஸ்ஜித்களிலிருந்து பரீட்சை மண்டபங்களை சென்றடைவதற்கு பஸ்களில் பயணிக்க வேண்டிய நிலை பல பரீட்சார்த்திகளுக்குண்டு. எனவே, எதிர்கால சந்ததியினரின் கல்வியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாவண்ணம் இவ்விடயத்தில் மிகப்பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு சகல கதீப்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் நியாயத்துவம்?

முஸ்லிம் சமூகம் தனித்துவம் மிக்கதும், சுயநிர்ணய உரிமையைக் கொண்டதுமான ஒரு சமூகம் என்ற யதார்த்த நிலையைப் பொருட்படுத்தாமலும், இலங்கையின் இறைமைப் பண்புகளை மதிக்காத வகையிலும் இடைக்கால நிர்வாக யோசனைகள் புலிகளால் நிரல்படுத்தப்பட்டுள்ளதானது, இனமுரண்பாடுகளுக்கான தீர்வை நோக்கிய உண்மையான விருப்பு புலிகளிடம் இல்லை என்பதையே காட்டிநிற்கின்றது. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் ISGA சரத்துக்களை அவதானிக்கும்போது கோட்பாட்டு ரீதியாக இலங்கை தனிநாடாகவும், நடைமுறைரீதியாக அது இரு நாடுகளாகவும் வகுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

அரசு சமர்ப்பித்த வடக்கு கிழக்குக்கான மாகாண நிர்வாக சபையைப் புறக்கணித்து தனி ஈழம் என்ற கருப்பொருளை மறைவில் வைத்து இயற்றப்பட்டதே இடைக்கால ISGA இன் யதார்த்தங்களாகும். இலங்கை அரசின் எவ்வித நேரடித்தலையீடுமற்ற இவ்வதிகார சபையை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்வது தமிழ் சமூகத்திற்கு அடிமைப்பட்டு வாழ்வதற்கான நிலமைகளைத் தோற்றுவித்துவிடும்.

எம்.எப்.எம். இஹ்ஸான் - பேருவளை

புலிகளின் ஆயுதப்போரினால் தமிழ் சமூகம் சந்தித்த பாதகமான விளைவுகளை ஒன்று திரட்டி அவைகளை இடைக்கால நிர்வாகயோசனைக்கான சரத்துக்களை அமைப்பதற்கான நியாயமான முன்மொழிவுகளாகக் கட்டமைத்துள்ள சாணக்கியப் போக்கை அரசு எவ்வாறு நோக்கும். இந்நியாயத்துவங்களும், சரத்துக்களும் ஒரு நாட்டின் இறைமை எல்லைக்குள் நிறுவப்படும் அதிகார அலகொன்றிற்கானும் பண்பியல்புகளாக அல்லாமல் ஒரு தனித் தேசத்தின் கொள்கையைப் பறைசாற்றி நிற்கும் ஒழுங்கிலே தயார்படுத்தப்பட்டுள்ளது.

நிதி, கடன் வர்த்தகக் கொள்கையை அவதானிக்கும் போது நாளடைவில் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பொருளாதாரத்துறை, அறிவுத்துறை ஏற்றத்தாழ்வு நிகழ வழிவகுத்துவிடும். அத்தோடு யாழ் தமிழ் மக்களின் மனிதவள ஆளுமை ஒரு சமூகத்துக்கு மட்டுமே உரித்தான மூலவளமாக மாறிவிடும். இவ்வாறான நிலைமையின் பிரதிபலிப்பு காலப்போக்கில் தனிநாட்டுப் பிரிவினைக்கு வழிவகுத்துவிடும். இவ்வாறான மறைதரப் பண்பியல்புகளைக்கொண்டு மிளிரும் ISGA இன் யோசனைகள் எந்தளவுதூரம் நியாயத்துவம்மிக்கதாக அமையும்.

> "மதச்சார்பின்மை, பாகுபாட்டிற்கான தடை என்ற இவ்விரு சரத்துக்களும் முஸ்லிம்களின் அடிப்படை அபிலாசைகளை வேரறுத்துப்போடுகின்றது. தமிழ், முஸ்லிம் இரு இனங்களும் மொழியால் ஒன்றுபட்டிருந்தாலும் முஸ்லிம்களுக்கு அவர்களின் மதம் கொடுத்த அவர்களில் நின்றும் வித்தியாசமான வாழ்வியல் பண்புகளும், கலாசாரமும் அடிப்படையிலேயே முரண்பட்டு நிற்கின்றன"

ISGA இல் காணப்படும் முஸ்லிம்கள் சம்பந்தமான சரத்துக்கள் முஸ்லிம்கள் சுயநிர்ணய உரிமையுள்ள இனம் என்ற வகையில் நோக்கும்போது, அது ஒரு ஏமாற்றுவித்தையே. ஏனெனில் சோசலிச (லெனினிஸம்) கோட்பாட்டின்படி ஒரு அரசிலிருந்து பிரிந்து நின்று ஒரு அரசை வேண்டி அதில் முழுமையான அதிகாரத்தை ஒரு இனம் (புலிகள்) வகித்து, வில்சனின் அரசியல் கருத்துப்படி இன்னோர் சமூகத்திற்கு (முஸ்லிம்களுக்கு) பலமற்ற பிரதிநிதி முறைமையை வழங்கி இருப்பதை இந்நகலை ஆராயும்போது விளங்கலாம். அதாவது சமாதானத்தீர்வில் முஸ்லிம்கள் கோரிவந்த சமபலக் கோரிக்கையை இது தகர்த்தெறிந்துள்ளதை அவதானிக்கலாம்.

மதச்சார்பின்மை, பாகுபாட்டிற்கான தடை என்ற இவ்விரு சரத்துக்களும் முஸ்லிம்களின் அடிப்படை அபிலாசைகளை வேரறுத்துப்போடுகின்றது. தமிழ், முஸ்லிம் இரு இனங்களும் மொழியால் ஒன்றுபட்டிருந்தாலும் முஸ்லிம்களுக்கு அவர்களின் மதம் கொடுத்த அவர்களில் நின்றும் வித்தியாசமான வாழ்வியல் பண்புகளும், கலாசாரமும் அடிப்படையிலேயே முரண்பட்டு நிற்கின்றன. இவ்விரு சரத்துக்களும் இம்முரண்பாட்டை உடைத்தெறிந்து ஒரே இனம் என்ற கட்டுக்கோப்புக்குள் இயல்பாகவே முஸ்லிம்களை உள்வாங்கி விடுகின்றன. இவ்வுள்ளகத் தந்திரத்தை முஸ்லிம்கள் கவனமாக விளங்க வேண்டும். இலங்கை அரசியலில் முஸ்லிம்கள் பெற்று வாழும் மதச்சுதந்திரத்துக்கு அமைவான முஸ்லிம் தனியார் சட்டம், முஸ்லிம் கலாசார அமைச்சு என்பனவைகளை இழந்து மதச்சார்பற்ற அரசியலில் நுழைந்து தமது சுதந்திரத்தை இழக்க முஸ்லிம் சமூகம் விரும்பாது.

ஒரு அரசின் இறைமையைப் புறக்கணித்தும், அவ்வரசின் கீழ் வாழும் ஒரு இனத்தின் தனித்துவத்தையும், அபிலாசைகளையும் கண்டுகொள்ளாமலும் அந்நாட்டின் ஆள்புல எல்லைக்குள்ளேயே அவ்வரசைவிட்டு சகல வழிகளிலும் வேறு நின்று காட்டும் சரத்துக்களைக் கொண்ட இந்தகல்வளரவின் முழுமைத்தன்மையை அரசு ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்பதை அதைச் சமர்ப்பித்தவர்கள் அறியமாட்டார்களா? இந்தச் சாத்தியமற்ற இந்நகலுக்காக வேண்டியா இத்தனை வெளிநாட்டுப் பயணங்களை அவர்கள் செய்தார்கள். இந்தச் சமாதான சூழலும் இந்நகல் வரைவும் ஒரு நாடக மேடைக் காட்சிகளா? காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலுவில் துறைமுகத்திட்டம் அம்மக்களின் வாழ்வைச் சிதைக்கக் கூடியது!

தென் கிழக்கின் ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான பிரயத்தனங்கள் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களால் மேற்கொள்ளப் பட்டன. ஆனாலும். வெளிச்ச வீட்டின் வேலைகள் நடைபெற்ற வேகத்தில் துறைமுக அபிவிருத்தி வேலைகள். அமைச்சரின் மரணத் திற்குப் பின் நடைபெறவில்லை. இந்நிலையில். காலங்காலமாக ஒலுவில் பிரதேசத்தில் வசித்து வரும் முஸ்லிம்களுக்கு சொந்தமான 160 ஹெக்டயர் (450 ஏக்கர்) காணிகளை துறைமு கத்திற்காக சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை 23.10.1998இல் அரசு வெளியிட்டிருந்தது.

அப்போது. எதிர்ப்பைக் காட்டாத ஒலுவில் குடிமக்கள். பின்னர் நிகழ்ந்த செயற்பாடுகளில் விழிப்புணர்வு பெற்று மெல்ல மெல்ல இந்தக் காணி சுவீகரிப்பிற்கு பலத்த எதிர்ப்பை காட்டத் தொடங்கியுள்ளனர். இதனால் பாதிக்கப்படும் சுமார் 350 குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதில் நீண்டகாலமாக இழுபறி நிலை நிலவி வருகிறது. ஒலுவில் பிரதேச மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக நலன்விரும்பி ஏ.எல். ஜலால்தீன் மௌலவி அவர்களிடம். முஸ்லிம் குரலுக்காக இது பற்றிக் கேட்டோம்:



*துறைமுகத்திற்காக 450 ஏக்கர் காணி அரசினால் சுவீகரிக்கப்படுமாக இருந்தால். எந்த வகையில் அது ஒலுவில் மக்களை பாதிக்கும் என அவர்கள் கருதுகிறார்கள்?*

ஒலுவிலைப் பொறுத்தமட்டில். அதன் கிழக்குப்பக்கமாகவே மக்கள் செறிவும். தொழில் வளமும் காணப்படுகிறது. இவ்வாறு இருக்கும்போது 160 ஹெக்டயர் காணிகளை அரசு எடுக்குமாக இருந்தால் ஒலுவிலின் அரைவாசி வளம் பறிபோகும். இம்மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தலே. மாயாவலை. கரைவலை போன்றவழிகளில் மீன்பிடிக்கும் 1500 மீனவர்கள் இங்கு தொழில் செய்கின்றனர். அரசு காணிகளை தன்வசப்படுத்துமாக இருந்தால் மேற்படி மக்களின் குடியிருப்புகள் பாதிக்கப்படுவதுடன் அவர்களின் தொழிலிலும். தங்கி வாழ்வோரின் வயிற்றிலும் மண்விழும். மேலும்...

- Δ 450 ஏக்கரிலுமுள்ள 350ற்கும் அதிகமான குடியிருப்புகளை இழக்க நேரிடும். அல்லது. அளக்கப்பட்ட 223 ஏக்கர் காணிகளே சுவீகரிக்கப்படுமென்றால் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பாதிப்புறும்.
- Δ பன் புல் செய்கையில் ஈடுபடும் நூற்றுக்கணக்கான மக்கள் தொழில் ரீதியாக பாதிக்கப்படுவர்.
- Δ நூற்றுக் கணக்கான தென்னந்தோட்ட உரிமையாளர்களின் வருமானம். அதில் தொழில் புரிவோரின் தொழில் எல்லாம் பறிபோகும்.
- Δ பிரஸ்தாப இடத்தில் ஆடுமாடுகளை வளர்க்கும் முஸ்லிம்கள் மாற்று வழியி ன்றி திண்டா டுவார்கள்.
- Δ இதற்கு மேலதிகமாக கடற்றொழில் மூலம் கிடைக்கின்ற அதிகமான வருமானம், கடற்றொ ழிலாளர்களின் தொழில் என்பன முற்றாக இழக்கப்படும்.
- Δ மேற்படி தொழில்களில் தங்கி வாழும் ஓலை இழைப்போர். கிடுகு பின்னுவோர். பன்புல்லைக் கொண்டு தறிபோடுவோர். தேங்காய் வாங்கிவிற்போர். தும்பு அடித்து வியாபாரம் செய் வோர். தும்புத்தடி கட்டுவோர் எல்லோருமே தொழில் அனாதை ஆவார்கள்.
- Δ குடியிருப்புகள், உடமைகள். உரிமைகளை இழந்து. கிட்டத்தட்ட அகதி நிலைக்குத் தள்ளப் பட்டவர்கள் குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முற்படுவர்.
- Δ தொழில் வாய்ப்பு வழங்கும்போதும். விகிதாசார கொள்கையின் கீழ் நாம் நிச்சயமாக பாதிக்கப்படுவோம்.



இந்த இழப்பீடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய மாற்றுத் திட்டமொன்றை எந்த அதிகாரியோ. அரசியல்வாதியோ இதுவரை முன்வைக்கவில்லை. அரைகுறையாகவுள்ள ஒரு பள்ளிவாசல் உட்பட 03 பள்ளிவாசல்கள் மற்றும் ஒரு பாடசாலை என்பன பாதிக்கப்படும் (பெண்கள் அரபுக்கல்லூரியை சுவீகரிப்பதில்லை எனக் கூறப்பட்டுள்ளது) என்றும். வேலை நிமித்தம் வரும் பெரும்பான்மை சமூகத்தினரினால் இப்பிரதேசம் ஆதிக்கத்திற்குள்ளாகிவிடும் என்ற பயமும் மக்களிடமுண்டு. முஸ்லிம்கள் தனித்து செறிந்து வாழும் பிரதேசம் ஒன்றை இழந்து விடக்கூடிய கஷ்ட காலம் ஏற்படும்.

*இது சம்பந்தமான உங்களின் நிலைப்பாட்டை. வேண்டுகோளை உரிய அதிகாரிகளிடம். அமைச்சரிடம் முன் வைத்தீர்களா?*

நாம் இதுபற்றி அதிகாரிகளிடம் முறையிட்டபோது. அவர்கள் முரண்பட்ட கருத்துக்களை கொண்டிருந்தார்கள். துறைமுகம் என்பது அபிவிருத்திக்கானது அல்ல. கொந்தராத்துக்காரர்களின் உழைப்பிற்கானது என்ற நிலைப்பாடே மேலோங்கியிருந்தது. நாங்கள் உடனே. பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்களை அழைத்து வந்தோம். நடைமுறையில் எங்க ளுக்குள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறினோம். அவர் எவ்வித தீர்வையும் முன்வைக் கவில்லை தான். தலைவர் றஊப் ஹக்கீமை அழைத்து வருவதாக சொன்னார்.

அதற்கமைவாக. தலைவர் ஹக்கீம் வந்தார்! அவருக்கு இது தொடர்பான பூரண விளக்கம் தெரிந்திருக்க வில்லை. எங்களுக்கு ஏற்பட்டுள்ள நிக ழ்காலநடை முறைகள். எதிர் காலச் சிக்கல்கள் என்பவற்றை அவருக்கு தெளிவுப டுத்தினோம். அவரை. ஒலுவில் பிரதேசம் முழுக்க சுற்றிப் பார்க்கச் செய்தோம். ஒவ்வொரு பொதுமகனோடும் கலந்துரையாடச் செய்தோம். முன்னெப்போதுமில்லாத ஒரு சந்திப்பாக இது அமைந்ததால் அமைச்சர் இப்பிரச்சினையின் நியாயத்தை விளங்கிக் கொண்டு. எங்களால் முன்வைக்கப்பட்ட 09 கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாகவும் கூறினார். அத்துடன். ஒலுவிலின் மேற்குப்பகுதியில் எங்களுக்க பதில் காணிகளை வழங்குதல். தொழில் இழப்பவர்களுக்கு இழப்பீடு வழங்கல். இடம் பெயர்பவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கல். இரண்டு வருடங்களுக்கு மீனவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கல். மீன்பிடித்துறைமுகம் ஒன்றை அமைத்தல். சுவீகரிப்பதற்கான காணியின் அளவை முடிந் தளவு குறைத்தல். மற்றும் நியாயமான விலைமதிப்பீடுகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வ தாகவும். விசாரணைகளுக்காக 04 பேரைக் கொண்ட குழுவொன்றை அமைப்பதாகவும் அமைச்சர் எமக்கு வாக்குறுதியளித்தார். ஆனால் அவற்றுக்கான நம்பிக்கையை மக்கள் இழந்து வருகின்றனர்.

*தொடர்ந்தும் கப்பல் துறை அமைச்சராக ஒரு முஸ்லிம் இருப்பார் என்ற உத்தரவாதம் இல்லை. பெரும்பான்மை இனத்தவர் அமைச்சராக நியமிக் கப்படலாம். எனவே. இப்போ திருக்கின்ற வாய்ப்பை பயன்படுத்தி பிரச்சினையை தீர்த்துக்கொள்ள நீங்கள் முயற்சிக்கவில்லையா?*

எவ்வளவு வேகமாக இப்பிரச்சினையை தீர்த்து வைக்க முடியுமோ அவ்வளவு வேகமாக தீர்த்து வைக்குமாறு கேட்டுள்ளோம். காலக்கெடுகூட விதித்திருந்தோம். அதன் பிரகாரம் கடந்த ஓகஸ்ட் மாதத்திற் கிடையில் எங்களுக்கு தீர்வு தருவதாக கூறப்பட்டது. ஆனால், நாங்கள் விலை மதிப்பீட்டை நிராகரித்ததால். அது நடை பெறாது போய் விட்டது. இப்போது. டிசம்பர் மாதத் திற்கிடையில் அனைத்து சிக்கல்களையும் தீர்த்து வைப்பதாக மக்கள் மத்தியில் அமைச்சர் பகிரங்கமாக அறிவித்துள்ளார். *சாத்வீக ரீதியிலான உங்கள் முயற்சிகள் கைக்கூடாமல் போனால் உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்?*

எமது மக்களுக்கு இத்திட்டத்தினால் ஏற்படும் பின் விளைவுகள் விளங்கியதிலிருந்து. அவர்கள் இது குறித்து மிகவும் விழிப்பாக உள்ளனர். நாங்கள் விதித்துள்ள காலக்கெடுவான டிசம்பர் மாதத்தின் பின் மீண்டும் சாத்வீக ரீதியான போராட்டத்தையே தொடர உள்ளோம்.

இந்த நிலையைப் பயன்படுத்தி சிலர் அரசியல் நடாத்த எத்தனிக்கிறார்கள். வேறுசிலர். நாங்கள் றஊப் ஹக்கீமை எதிர்ப்பதாக கதை கட்டுகிறார்கள். இது. எமது இருப்பு. உரிமை. வாழிடம் பற்றிய பிரச்சினை! அதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தான் ஹக்கீமிடம் இது தொடர்பாகக் கேட்டோம். அதைவிட்டு. நாம் அரசியல் ஆதாயங்களுக்காக போராடவில்லை அரசியலை காரணங்காட்டி எங்களை கைவிட்டு விட வேண்டாம் எனவும். அவர் மேலும் கூறினார்.

'பறிபோகப்போகும் காணிகள்தானே' என்ற விரக்தி மன நிலையில் ஒலுவில் மக்கள். அந்த மண்ணில் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு விருப்பமற்று இருக்கின்றனர். இழக்கப்படும் இழப்புகளுக்கு துறைமுக அபிவிருத்தி சமமாகுமா? அல்லது. இழப்புகளுக்கு சமமான நஷ்ட ஈடுகள் கிடைக்குமா? போன்ற கேள்விகளோடு அவர்கள் பரிதாபமாக வாழ்கின்றனர்.

இன்னும் நம்பிக்கையை முற்றாக இழந்துவிடாத ஒலுவில் மக்கள். எல்லாம் முடிந்த பிறகு கைசேதப்படாமல். வெள்ளம் வரும் முன் இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி அணைகட்டிக் கொள்ள வேண்டும். பொறுப்பான அமைச்சர். முஸ்லிம் அரசியல் வாதிகள். உரிய அதிகாரிகள் என்போர். அநியாயமிழைக்கப்படும் ஒரு சமூகத்தின் நியாயமான உரிமைகளுக்காக உள் முரண்பாடுகளைக் களைந்து குரலெழுப்ப வேண்டும்.

சந்திப்பு : நிப்றாஸ்.

---

## இருத்தலும் பற்றிய பயமும்

*நாங்கள் மின்மினிப் பூச்சிகள்*
*கண்சிமிட்டாத கும்மிருட்களில்*
*வனாந்திரங்களினூடே*
*பயணித்திருக்கிறோம்*

*இன்னும் மையவாடிகளில்*
*தனித்து நிற்கும் ஆலமரங்களின்*
*அடிவயிற்றினுள்ளும் துயின்றிருக்கின்றோம்*

*இருந்தும் எங்களுக்கு நடுக்கம்தான்*
*மணியோசை கேட்கும் ஊர்களுக்கு*
*தும்பலாய்க் கூட போய்வருவதென்றால்*

*இந்த அமைதிச் சூழலிலும்*
*எங்கள் முற்றங்களில்*
*ஆந்தைகள்தான் அலர்கின்றன*
*வௌவால்கள்தான் பறக்கின்றன*
*நேற்றும் சில பேய்க்குஞ்சுகள்*
*இரு உயிரை சவட்டி முறித்து*
*வயற்காட்டில் போட்டதில்*
*ஊர் கொந்தளித்து புகைக்குள்ளாகி*

*நிலா பழுத்து வெடித்து மணத்தாலும்*
*எங்களுக்கு நடுக்கம்தான்*
*கடல் அலைகளில் கால் நலைத்து*
*காற்று வாக்கில் உறங்கி வீடு திரும்ப*

றகுமான் ஏ. ஜமீல்
*மருதமுனை*

---

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமா றிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சமூகம் தகரப்பத்தைகளைப்போன்று தரம் தாழ்ந்துவிடவில்லை

## சந்திரநேரு எம்.பி. பதில் சொல்ல வேண்டும்?

### அல் இஸ்லாமிய அமைப்பு கண்டனம்

மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக போராடுவதை நியாயப்படுத்தும் தமிழர் சமூகம், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பெறுவதற்காக பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாகப் போவதை மறுத்துப் பேசுவதற்கு அம்பாறை மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்றப் பிரதிநிதி சந்திர நேரு அவர்கட்கு என்ன யோக்கியதை இருக்கிறது என இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் மட்டுமல்ல மனச்சாட்சியுள்ள அனைவரும் கேட்கின்றனர்.

பெறவில்லையா? பள்ளிவாசலுக்குள்ளும் படுக்கைப் பாயிலும் படுகொலை செய்யவில்லையா? ஏன் வடமாகாணத்து முஸ்லிம் மக்களை வெறுங்கையோடு வெளியேற்றவில்லையா? இவைகள் எதுவும் முஸ்லிம் மக்களைப் பாதிக்காத

தகரப்பத்தைகளாகவே பார்க்கிறார். அந்தத் தகரப்பத்தைகள் யானைகளின் சண்டைகளின் போது மிதிபட்டு சாகத்தான் வேண்டும் என்ற கருத்தையும் கூறியுள்ளார். இக்கூற்று தமிழ் முஸ்லிம் உறவை நிரந்தரப் பகையாக்கும் விடயமும் சமாதானக் கதவை

உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்கு நடைபெறும் பேச்சுவார்த்தையை விட வேறு எது சரியான நேரம் என்பதையாவது மனச்சாட்சியைத் தொட்டு சந்திரநேரு சொல்லுங்கள். ஏன் நீங்கள் முஸ்லிம்களை மனிதர்களாகவே பார்க்கவில்லையா?

தமிழர் சமூகம் அனைத்து உரிமைகளையும் பெறவேண்டும். அதற்காக எதையும் செய்யலாம் ஆனால் முஸ்லிம்கள் அவர்களின் உரிமைகளைப் பேசுவதற்காக தனித்தரப்பாகப் பேசுவதற்கு இது தருணமல்ல என்று கூறுவது எந்த அறிவுக்காவது பொருந்துமா? என அவரிடம் முஸ்லிம் சமூகம் வினவுகிறது.

இதுவரை முஸ்லிம் தலைமைகள் தமிழர் சமூகத்தின் போராட்டத்தை மறுக்கவோ அல்லது அவர்களின் உரிமைகளைப் பறிக்காத போதும் ஏன் முஸ்லிம் சமூகத்தின் உரிமைப் பிரச்சினைகளில் தமிழ் தலைமைத்துவம் தலையிட வேண்டும் என்பது அவர்களிடம் கேட்கப்படும் வினாவாகும்.

வடக்கு கிழக்கிலே தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் எந்த நடவடிக்கைகளிலும் சம்பந்தப்படாத முஸ்லிம் மக்களை தமிழ் ஆயுதப் போராளிகள் என்ன செய்யவில்லை? கொல்லவில்லையா? அல்லது அவர்களின் காணிகளைப் பறிக்கவில்லையா? கப்பம்

விடயங்களா? தயவு செய்து சந்திரநேரு அவர்களே பதில் சொல்லுங்கள்.

02.11.2003 இல் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் அம்பாறை மாவட்ட செயற்குழு கூட்டத்தில், சந்திரநேரு எம்.பி. அவர்கள் முஸ்லிம்களின் தனித்தரப்பு விவகாரத்தை மறுத்து சூளுரைத்ததாக கடந்த 05.11.2003ம் நாள் தினகரனில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இது முஸ்லிம் சமூகத்தை மிகவும் கவலை கொள்ளச் செய்துள்ளது. இதற்காக முஸ்லிம்கள் அவருக்கெதிராக கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இவ்வாறு அகில இலங்கை இஸ்லாமிய அழைப்புப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

சந்திரநேரு எம்.பி. அவர்கள் முஸ்லிம்களைத்

உடைத்தெறியும் விடயமுமாகும் ஒரு பாராளுமன்றப் பிரதி நிதி இவ்வாறு பேசி கலவரத்தைத் தூண்டுவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. வடக்கு கிழக்குத்தான் முஸ்லிம்களின் மரபு




வழித்தாயகம். வடக்கு கிழக்கை விட்டு முஸ்லிம்களை விரட்டி விட முடியாது. வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் இரண்டாவது பெரும்பான்மை இனம். கிழக்கில் முதலாவது பெரும்பான்மை இனம். இந்த யதார்த்தத்தில் முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்திய தமிழ்க்குழுக்களால் பாதிக்கப்பட்ட பின்பும் முஸ்லிம்களின்

வடமாகாணத்திலே புலிகளும் அரச படைகளும் செய்த சண்டையால்தான் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்தார்கள். அல்லது இழப்புக்களைச் சந்தித்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் ஏன் அகதிகளானார்கள். அவர்களை அவர்களின் சொத்துக்களைப

பறித்துக்கொண்டு துப்பாக்கி முனையில் விடுதலைப் புலிகள் துரத்தியதை உலகமே அறியும். இதை யாரும் மறுக்கவே முடியாது. இந்த உண்மைகள் இவ்வாறு கிடப்பிலே இருக்க முஸ்லிம்களின் வாயை அடக்க முயல்வது தர்மமாகிவிடாது. இதற்கான மாற்று வழி வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும். அல்லது இணைந்த வடக்கு கிழக்கில் தமிழர்கள் பெறப்போகும் தன்னாட்சி இடைக்கால நிருவாக சபை போன்ற முஸ்லிம்களுக்கான தன்னாட்சி இடைக்கால சபை பெறப்பட்டே ஆக வேண்டும். இவ்வாறு கோருவதற்கான காரணம், முஸ்லிம்களுக்கெதிராக தமிழாயுதக் குழுக்கள் துப்பாக்கி ஏந்தியதைத் தவிர வேறு எதுவுமில்லை. இவ்வாறு அகில இலங்கை இஸ்லாமிய அழைப்பு பேரவை அதன் அறிக்கையில் கூறியுள்ளது.

**வாசகர் கவனத்திற்கு**

முஸ்லிம் குரலின் 1-24 இதழ்கள் (பைண்டிங் தொகுப்பு) தேவைப்படுவோர், ரூபா. 400/-க்கான காசுக்கட்டளை/ காசோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்**

தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர்
முஸ்லிம் குரல்
181/1 Maligakanda Road
(White Park)
Colombo 10 .
Phone : 0114 734507
Fax: 0114 734508




**முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.**

**இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.**

**37**
முஹம்மது சஹாப்தீன் அப்துல் ஜவாத், இல. 431. மீராபள்ளி வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 05.10.1977
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாசல் 03.08.1990
மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5625.

**38**

சரிப் லெவ்வை முஹம்மது நசார். முஅத்தினார் லேன், சாவியா வீதி. காத்தான்குடி 01
பிறந்த திகதி : 02.07.1971
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : ஆரையம்பதி. 27.04.1991
மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1211

**39**
கல்லடிப்பிச்சை ஐயூப்கான், அல்லை நகர் 05, தோப்பூர்
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : உல்லக்களி 06.11.1990. மரணம் இனந்தெரியாதோரினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 663

**40**

முகம்மது அனிபா அப்துல் மனாபு, மாஞ்சோலை வீதி, கிண்ணியா 03. பிறந்த திகதி : 19.02.1965
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : கடலில்வைத்து கடத்தப்பட்டு 15.11.1990. மரணம் விடுதலைப் புலிகளினால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

**41**

கச்சி முகம்மது சதக்க லெவ்வை. கோழிக்கடை வீதி, வாட்டு 05, வாழைச்சேனை
பிறந்த திகதி : 30.05.1961
சம்பவம் இடம் பெற்ற திகதி : 20.07.1983.
சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு மரணமானார்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5088

**42**

அபூபக்கர் லெவ்வை அப்துல் காதர், டீன் வீதி, காத்தான்குடி 06,
சம்பவம் இடம் பெற்ற திகதி : 12.07.1990.
மரணம் ஆயுதக் குழுவினால் நிகழ்த்தப்பட்டது.

**43**
அப்துல் குத்தூஸ் தௌபீக், அரசினர் ஆசிரியர் கல்லூரி வடக்கு வீதி, அட்டாளைச்சேனை 04.
பிறந்த திகதி : 08.12.1968.
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 07.12.1989. கல்முனை, மரணம் புலிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 969

**44**
இப்றாலெவ்வை அப்துல் குத்தூஸ், அரசினர் ஆசிரியர் கல்லூரி வடக்கு வீதி, அட்டாளைச்சேனை 04.
பிறந்த திகதி : 05.03.1944 சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 07.12.1989, கல்முனை, மரணம் புலிகளினால் நிகழ்த்தப்பட்டது. மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 968

**45**

ஐதுரிஸ் முஹம்மது கஸ்ஸாலி, ஹுதாபள்ளி வீதி, ஓட்டமாவடி 01. பிறந்த திகதி : 01.12.1956.
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 09.06.2003, ஆத்துச்சேனை, கடவத்தமடு. புலிகளினால் கடத்தப்பட்டு காணாமற்போனவர்.

**46**

சம்சுதீன் முஹம்மது பைசால், 18/1, மீரா ஜும்ஆ பள்ளி வீதி, சாவியா வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 27.08.1977
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 03.08.1990. காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாசல் புலிகளால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5679

**47**
பக்கீர் தம்பி மீராசாகிபு, அல்லை நகர் 06, தோப்பூர்
பிறந்த திகதி : 06.10.1952 சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 16.10.1995, மரணம் இனந்தெரியாத நபர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம : 832

**48**

ஹயாத்து முஹம்மது கலீலுர் றஹ்மான், எம்.பி.சி.எஸ். பின் வீதி, ஓட்டமாவடி 02
பிறந்த திகதி : 28.02.1980
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 27.06.2002. மட்டக்களப்பு வீதியில், புலிகளினால் கடத்தப்பட்டார்.

**49**

சரிப்லெவ்பை ஆதம்லெவ்வை, பசிலா மன்ஸில், பரக்கத் வீதி, ஓட்டமாவடி 03. சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 25.08.1990, பொத்தானை, மரணம் விடுதலை புலிகளால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம : 3421

**50**
முகம்மது கனிபா றியாஸ், நெய்தல் நகர், தாரீக் வீதி, மூதூர் 01. பிறந்த திகதி : 27.03.1975.
சம்பவம் இடம் பெற்ற திகதியும் இடமும் : 13.08.2003, திருகோணமலை, செல்வநாயகபுரம், மரணம், இனந்தெரியாதோரால் சுடப்பட்டார்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம : 0972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்ச வாசல்

அபூ அஹ்ஸன் | ஆங்கிலத்தில் : இஸ்லாம் ஒன் லைன்

## போரானது மரணத்தையும் ஒப்பாரியையும் மட்டுமே கொண்டு வருகிறது!

கடந்த வாரத் தொடர்...

கேள்வி - போருக்கு முன்னர் இந்தப் போர் சட்டபூர்வமானது என்று உங்களை நம்பச் செய்தது எது? அமெரிக்கா மேற்கொண்ட யுத்தங்கள் எதுவும் நியாயமானவையல்ல. அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவதிலிருந்து இது வெளிப்படையானது என்பது தெரிகிறதுதானே?

பதில் - இந்தப் போர் நியாயமானது என்று நான் ஒரு போதும் எண்ணியதில்லை. இன்னொரு நாட்டின் மீதான எந்த வகையான ஆக்கிரமிப்புக்கும் நான் எதிரானவன். அது இஸ்ரேலாக இருந்தாலும் சரி, ஜோர்டானாக அல்லது ஈராக்காக இருந்தாலும் சரியே. எந்தத் தேசமாக இருந்தாலும் அந்தந்தத் தேசங்களுக்கு சுதந்திரமான இறைமை உண்டு.

கேள்வி - ஈராக்குக்கு தங்களது பெண், ஆண் பிள்ளைகளை அனுப்பியிருக்கும் அமெரிக்கக் குடும்பங்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் நீங்கள் தெரிவிக்க விரும்பும் செய்தி என்ன? இந்த ஆக்கிரமிப்பிலிருந்தும் அதன் அழிவுகளிலிருந்தும் நீங்கள் தெரிந்து கொண்டது என்ன?

பதில் - நிறையச் சொல்லலாம். முதலில் நாம் எல்லோரும் ஈராக்கின் ஆக்கிரமிப்பை நிறுத்தி உடனடியாக எமது பிள்ளைகளை அமெரிக்காவுக்கு அழைக்க வேண்டும் என்ற ஒரு பெரிய பிரச்சாரத்தை முன்னெடுக்க ஒன்றிணைய வேண்டும். தமது பிள்ளைகளை அனுப்பியிருக்கும் குடும்பத்தினரைப் பொறுத்த வரை அவர்கள் அவர்களது பிள்ளைகளுக்காகப் போராட வேண்டும்.

போருக்கு எதிரான செயற்பாடானது ஒரு போதும் 'அமெரிக்க எதிர்ப்பு' என்று ஆகிவிடாது. எமது நாட்டின் அரசியல், பொருளாதாரத்தை விட அவர்களது வாழ்க்கை முக்கியமானது. மரணத்தையும் அழிவையும் கண்ணீரையுமே இந்தப் போர் எனக்குக் கற்றுத் தந்தது. இந்த யுத்தம், நாடுகளுக்கிடையில் மரணத்துக்கு இட்டுச் செல்லும் வெறுப்பை, நாம் அனுமதிக்கக் கூடாத அம்சங்களைத்தான் முன் கொண்டு செல்கிறது. வெறுப்பானது மரணத்துக்கு இட்டுச் செல்லும் வழியாகும். இதனை நிறுத்த நாம் ஒன்றிணைய வேண்டும். அமெரிக்கர்கள் மாத்திரமல்ல, முழு உலகமுமே.



கேள்வி - ஈராக்கிலுள்ள துருப்பினரின் பெற்றோரான நீங்கள் சட்ட பூர்வமற்ற இப்போரிலிருந்து அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைக்க முயற்சி மேற்கொள்கிறீர்களா?

பதில்- ஆம்! ஒக்டோபர் 25ம் திகதி அமெரிக்க நகரங்களெங்கும் மிகப் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினோம். உலகின் பல்வேறு நகரங்களிலும் இது இடம் பெற்றது. அதற்கான ஏற்பாடுகளில் உதவுகிறேன். அமெரிக்கக் காங்கிரஸுக்கும் செனற்றர்களுக்கும் 'போரை நிறுத்து! துருப்பைத் திருப்பியழை!' என்ற வாசகங்கள் அடங்கிய கடிதங்கள், தொலை நகல்கள் அனுப்பப் பட்டு வருகின்றன. இதில் இணைந்து கொள்ள விரும்பியவர்கள் அதற்கெனத் திறக்கப்பட்டுள்ள இணையத் தளத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

கேள்வி - அமெரிக்கா, அங்கு வசிக்கும் ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவர்களை போருக்கு அனுப்புகிறது என்று நீங்கள் கருதவில்லையா? குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து வந்தவர்களை அவர்களுக்கு அமெரிக்கப் பிரஜாவுரிமை தருவதாக ஆசை காட்டிப் போருக்கு அனுப்புகிறது அல்லவா? இந்த நோக்கத்தில் இன்னும் போருக்குச் செல்கிறார்களா?

பதில் - அமெரிக்கா, ஸ்பானிய மொழி பேசும் பரம்பரையில் வந்தோரையும் ஆபிரிக்க அமெரிக்கர்களையும் உள்ளடக்கியது அமெரிக்கப் படையும் அப்படித்தான். போரில் முதலில் பலியாக ஆரம்பித்தவர்களும் அவர்கள்தான். பின்னர் ஆங்கிலப் பரம்பரை யில் வந்தவர்கள் பலியாகத் தொடங்கினார்கள்.

நிச்சயமாக சூரியனையும் சந்திரனையும் தருவதாக ஏமாற்றித்தான் எமது அரசாங்கம் எமது பிள்ளைகளை இராணுவத்தில் சேர்த்துக் கொள்கிறது. துரதிர்ஷ்டவசமாக, அவர்களில் அநேகர் பிரஜாவுரி மையை ஒரு முக்கிய கல்வித் தராதரம் போல் நினைத்திருக்கிறார்கள். இந்த எண்ணத்தை மாற்றுவதற்காக நாம் செயலாற்ற வேண்டியிருக்கிறது. தலைவர்களதும் அரசாங்கத்தினதும் மரணரணத்தைக் கொண்டு வரும் எண்ணங்களை நாம் மறுத்தாக வேண்டும். இந்த ஒரே வழியில்தான் தேசத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும்.

கேள்வி- உங்களது புதல்வன் நல்ல காரியத்திற்காக இறந்தான் என்று கருதுகிறீர்களா? ஏனெனில் இந்தப் போரானது நூற்றுக் கணக்கான ஈராக் குழந்தைகளதும் ஆண், பெண்களதும் வாழ்வை அழித்ததைத் தவிர வேறு எதையும் அடையவில்லை என்பதை உலக மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அறபு நாடுகள் மீதான அமெரிக்காவின் கொடூரப் போக்குக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில் - எந்தப் போரும் பிரயோசனமானது இல்லை. போரானது மரணத்தையும் ஒப்பாரியையும் மட்டுமே கொண்டு வருகிறது. இதிலி ருந்து நாம் பெறவேண்டியது வெறுப்பிலிருந்து விலகுவது என்பதைத்தான். இந்த அடிப்படையில் நவம்பர் 29ம் திகதி நான் ஈராக் செல்கிறேன். ஈராக்கின் குழந்தைகளுக்கு உண்மையான அமெரிக்கத் தேசத்தின் அமைதியையும் அன்பையும் அமெரிக்கா வின் சார்பில் தெரிவிக்கவுள்ளேன்.

அறபுக்கள் மீது அமெரிக்கா கொண்டுள்ள வெறுப்பானது மிகச் சிக்கலானதும் நியாயமற்றதுமாகும். இது பல ஆண்டுகளுக்கு முன்னர் துவங்கிய யுத்தமாகும். இரண்டு அணிகளுக்கு இடையிலும் புரிந்துணர்வு ஏற்படாத வரையில் இது வளர்ந்து கொண்டே செல்லும். மனிதர்களைக் கொண்ட இரண்டு தேசங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளத் தவறுவது மிக மோசமான நிலையாகும்.

இன்னும் வரும்...

## 'முஸ்லிம் குரல்' படைப்பாளர் கவனத்திற்கு!

கட்டுரைகள் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும். சிறுகதைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் நாற்பது வரிகள் தொடக்கம் ஐம்பது வரிகளுக்கு மேற்படாமலும் எழுதப்படுவது வரவேற்கத்தக்கது.

அதே நேரம் தாளின் ஒரு பக்கமே ஆக்கங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் உங்களின் கவனதிற்குக் கொண்டு வருகின்றோம்.

- பிரதம ஆசிரியர் -

## துறைமுக அதிகார சபையில் ஒரு கோடி ரூபாய் அபகரிப்பு?

துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் ஒருவர் தொழிலாளர்களின் சாப்பாட்டுச் செலவுகளுக்கு என்று காரணம் காட்டி 1 கோடி ரூபாய் பண மோசடி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ் அதிகார சபைக்குள் ஆண் - பெண் தொழிலாளர்கள் 20 ஆயிரம் வரை உள்ளனர். அவர்களின் ஒருவருக்குரிய ஒரு நாளைய சாப்பாட்டுச்செலவு ரூபாய் 88. 25 சதம் என்று கணக்கு காட்டப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு முன் ரூபாய் 45 க்கே உணவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரேயடியாக அதிக விலையை உயர்த்தியதன் பின்னணியில் ஒரு கோடி ரூபாய் மோசடி மாதாந்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். சாப்பாடு வழங்கும் ஒப்பந்தக்காரராக வெளியில் உள்ள வியாபாரி ஒருவரே செயற்படுகின்றார். அவ் வியாபாரி மூலமாக குறிப்பிட்ட தொகை குறித்த பணிப்பாளருக்கு வந்து சேருகின்றது.

லக்ஜன

## அரநாயக பகுதியில் வேகமாகப் பரவிவரும் டெங்கினால் சிறுவன் மரணம்

அரநாயக - தேர்தல் தொகுதியின் கெடபேரிய மோராகம்மன கிராம சேவக பிரிவுகளில் ஆட்கொல்லி 'டெங்கு' காய்ச்சல் வேகமாகப் பரவி வரும் ஆபத்து தோன்றியுள்ளது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட பலர் கண்டி பேராதெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், கெடபேரிய கிராமத்தைச் சேர்ந்த 10 வயது முஸ்லிம் மாணவன் இந் நோயினால் மரணமானதை அடுத்து நோய் தடுப்புப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதாக அரநாயக சுகாதார அத்தியட்சகர் பணியகம் தெரிவிக்கின்றது.

மேலும் காய்ச்சல், தலைவலி, வாந்தி போன்ற நோய் அறிகுறிகள் தென்பட்டால் தனியார் மருத்துவர்களிடம் சிகிச்சை பெறாது உடனடியாக அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

- தகவல் : எம்.ஏ. காதர் - அரநாயக

## முஸ்லிம் வாக்கு மூலம்

நீங்களே சமாதானம் பேசி
நீங்களே புரிந்துணர்வு
ஒப்பந்தம் செய்து
ஆறு கட்டப் பேச்சுக்களையும்
அயல் நாடு சென்று பேசி
விட்டு வந்து
இன்று ஓராண்டு பூர்த்தியாகும்
நாளில்
உங்களுக்கு ஒன்றுமே
கிடைக்கவில்லை
என்று ஒப்பாரி வைப்பது
நியாயமா?

எம் மக்களின் சுயநிர்ணயத்தை
மதிக்காமல்
எம்மையும் ஒரு இனமாகக்
கருதாமல்,
பேச்சுவார்த்தையில் எமக்கென
தனித்தரப்பு ஒன்றை
அனுமதிக்காமல்
சுதந்திரமும் தனிநாடும்
உங்களுக்கு மட்டும்
பொதுச் சொத்
தென்று
ஏகபோகம் கொண்டாடி
நீங்கள் மட்டுமே பேசி
உங்கள் உரிமைகளை மட்டுமே
கேட்டு விட்டு இன்று
உங்களுக்கு ஒன்றுமே
கிடைக்கவில்லை என்கிறீர்களே!

தீயினில் எரியாத தீபங்களே.......
அப்துல்லாஹ் ரகு நளன்........
அனலிடை போயினர்.
களப்பலியாகினர்
எனக்கவிபாடிய
அப்துல்லாஹ் போன்று
எத்தனை அப்துல்லாஹ்க்கள்
உங்கள் தனி
ஈழப்போராட்டத்திற்காக
தங்களை அர்ப்பணித்தார்கள்
என்பதை மறந்து விட்டீர்களா?

வயல்வெளிகள் பாரும் அது
விதைக்கவில்லை பாரும்
தமிழர் நிலம் என்பதனால்
விதைக்கவில்லை போலும்....
என நீங்கள் பாடியது அன்று,
எஞ்சியதில் விதைத்தோம்
அதிலும் உங்களுக்கு கப்பம்
போக மிஞ்சியது நமக்கென்ன?
யாரைக்கேட்கிறாய் வரி?
யாரைக் கேட்கிறாய் திறை?
என்று அன்று வீரத்தமிழன்
வசனம் பேசினானாம்
அதேபோன்று நாமும்
கேட்கிறோம்

நமது நிலத்தில்
நமது உழைப்பில்
நமது மூலதனத்தில்
நாங்கள் பயிரிட்டதற்கு
உங்களுக்கு ஏன் கப்பம்
தரவேண்டும்?

உங்களது மூச்சும் பேச்சும்
தாயகம் பற்றியே
எங்களுக்கு மட்டும் தாயகம்
வேண்டும் என்பதில்
உங்களுக்கு என்ன மறுப்பு?
உங்களுக்குள்ளேயே நாங்களும்
உட்பட்டு
உங்கள் ஆட்சியின் கீழ்
நாம் வாழ்ந்தால்
ஒரு நாள் அவகாசம் கூட
இன்றி அன்று யாழ்ப்பாணத்தை
விட்டு உடுதுணியுடன்
வெளியேற்றியது போ ன்று
வெளியேறும்
நிலை தான் வரும்.
நாங்கள் உங்கள் மொழி
பேசுவதால்
இஸ்லாமியத் தமிழரோ
தமிழ் முஸ்லிம்களோ அல்ல
நாங்கள் கலிமா கூறி
இஸ்லாமாகிய முஸ்லிம்கள்,



பிறப்பினாலும் தூய
மார்க்கத்தை ஏற்றதனாலும்
நாம் இஸ்லாமியர்கள்.

நாங்கள் சும்மா இருப்பதற்காக
நமக்கு சுரணை இல்லை என்று
எண்ணி விட வேண்டாம்.
எமக்கும் வேண்டும்
சுயநிர்ணயம்.

உங்களது ஆட்சிக்குள்
ஒடுக்கப்பட ஒருபோதும்
நாங்கள் தயாராக இல்லை.
நீங்கள் முஸ்லிம்களுக்கு
செய்யும் அநியாயங்களை தமிழ்
மக்கள் அறியாமல் மறைத்து
அதற்கு சாயம் பூசி
முஸ்லிம்கள் தமிழருக்கு
அநியாயம் செய்வதாக
அலங்கரித்துக் காட்டுகிறீர்கள்.
நானும் தமிழ்ப்பெண்ணாக
இருந்திருந்தால் நீங்கள்
கூறுவது மட்டுமே உண்மை
என நம்பியிருப்பேன். இன்று
இங்கு வந்து பார்த்த
போதுதான் ஏறாவூரிலும்
காத்தான்குடியிலும் இன்னும்
பல ஊர்களிலும் நீங்கள் சந்து
சந்தாக வெட்டியும் சுட்டும்
கோரமாக துவம்சம் செய்த பல
நூற்றுக்கணக்கான அப்பாவி
முஸ்லிம்களின் குருதி தோய்ந்த
வரலாறு தெரிகிறது.

இதை நீங்கள்
செய்யவில்லை
என்று மறுக்கலாம். ஆனால்
சமீபத்தில் வாழைச்சேனையில்
நீங்கள் கொன்று புதைத்த இரு
வாலிபர்களின் சடலங்கள்
மீட்டெடுத்து வரும்போது
அதைவழி மறித்து டயர்
போட்டு பற்ற வைத்ததை
பார்த்தேனே......
அப்போ நீங்கள் தான் முன்பும்
பல படுகொலைகள்
செய்துள்ளீர்கள் என்பதை நான்
நம்புகிறேன் நிச்சயமாக!
ஏன் உங்களுக்கு இந்த
துவேஷம்? ஏன் இந்த வன்மம்?
நீங்கள் சிங்களவனிடம்
மிதிபடுவது உங்களது சுய
கௌரவத்தை பாதித்தது
என்றால் எம்மை நீங்கள்
மிதித்து நடப்பது சரியா?
நீங்கள் அடக்கப்பட்டு
வாழ்ந்ததற்காக எம்மை அடக்கி
ஆழ நினைக்கலாமா?
நாம் உங்கள் ஆட்சியின் கீழ்
வாழ ஒரு போதும் சம்மதியோம்

உங்களது பண்பாடு உங்களது
கலாசாரம் உங்களுக்கு
எப்படியோ எங்களுக்கும்
எங்களது மார்க்கம் எமது
வாழ்க்கை எமக்கு முக்கியம்
எனவே சுதந்திரமும்
சுயநிர்ணயமும் உங்களது
பொதுச்சொத்தல்ல
எங்களுக்கும் தான் என்பதைப்
புரிந்து கொள்ளுங்கள்.

உம்மு ஆபிதா - ஏறாவூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மாதிரியாக வழிகாட்டிய ஒரு முஸ்லிம் செல்வந்தர்

முன்மாதிரியாக வழிகாட்டிய ஒரு முஸ்லிம் செல்வந்தர்

அவன் பெயர் சுபைர் கொழும்பில் முஸ்லிம்கள் செறிந்துவாழும் அந்தப் பகுதியில்தான் அவனது வீடு. அமைந்திருக்கிறது.

பெற்றோரும். ஐந்து தங்கையரும் உள்ள அந்தக் குடும்பத்தில் சுபைர்தான் ஒரே ஆண்வாரிசு. தந்தை கொழும்பு நகரத்து சராசரி முஸ்லிம். காணி பூமி கண்டறியாதவர். ஏதோ உழைத்து எப்படியோ பெண்டு பிள்ளைகளை காப்பாற்றி காலந்தள்ளுபவர்.

பிள்ளைகள் யாவரும் ஓரளவு படித்துள்ளனர். உயர்கல்வி என்று கற்க, எந்தப் பிள்ளைக்கும் கொடுத்து வைக்கவில்லை. சுபைரும் பத்தாம் வகுப்பு - அந்தக் காலத்து எஸ்.எஸ்.ஸி. பைஃனல் வகுப்பு - அரசாங்க சோதனையில் ஐந்துபாடம் பாஸாகியதோடுதான் படிப்புக்குத் தாழ்ப்பாள் போட்டுவிட்டான்.

அதன்பின் புறக்கோட்டை பஸாரில் ஒரு புடவைக்கடையில் வேலைக்கு சேர்ந்தான். அவ்வளவு பெரியதாக அப்படி என்ன "பெரிய்ய..........." தொகை சம்பளமாகக் கிடைத்துவிடப்போகின்றது? எப்படியோ தந்தையின் 'சம்பாத்தியத்திற்கு' சுபைரின் ஊதியமும் ஒரு 'லைட் ஷெட்போட்டாக' இருந்ததே தவிர. அக்குடும்பத்தின் ஏதேனும் ஒரு தேவையை நிறைவேற்றும் வகையில் அமையவில்லை.

இப்படி காலம் ஓடும் வேகத்தில் மூத்தவளுக்கு கல்யாணம் பேசி வந்தது. அதுவரை அப்படியொரு சிந்தனையே அற்றுப்போயிருந்த அக்குடும்பம். ஒரு புரோகரின் "என்ன......கமால் நானா ஒங்க மூத்த மகளுக்கு ஒரு மாப்பிள்ளை பேசித்தரட்டுமா? நல்ல கேஸ்வல் கையில இருக்கு......" என்றபோதுதான். 'அட........ நம்ம மெஹ்ருனுக்கு ஏதேனும் மாப்பிள்ளை பார்த்து கட்டவேண்டுமே' என்ற எண்ணம் தோன்றலாயிற்று.

அக்குடும்பத் தலைவியான உம்மாவை "ஏம்மா......நீங்களாவது ஒங்க மூத்த மகளுக்கு காலா காலத்தில ஒரு கல்யாணம் செய்து வைக்க வேண்டுமேன்னு தூண்டக்கூடாதா? என்று கேட்டால் போதும் அந்த மாதுசிரோன்மணி என்ன சொல்வார் தெரியுமா? "தாய்க்கே சொகத்த காணோம்... இதில் கும்பி கூழுக்கு அழலாமா? கொண்டைதான் பூக்கேட்டு அழலாமா? என்று பட்டென்று பதில் சொல்லி விடுவார். கமால் நானாவை கரம்பிடித்து வருமுன் - அதாவது குமரியாக வாழ்ந்த காலத்தில் இந்தத் தாய்.... நல்லதொரு புத்தகப்பூச்சியாக வாழ்ந்த வாசம்தான்..... இந்தப் பழங்கால பழமொழி எல்லாம்! (கல்யாண சிந்தனை படிப்படியாக செயலுரு நோக்கி ஓடியது. அல்லாஹ் நாடிவிட்டால். யாரால் தடுக்க முடியும். தாயும் - மகனும்..... நம்ம சுபைரும்தான். எங்கெங்கெல்லாமோ ஏறி இறங்கி. யார் யாருடைய கை - கால்களை எல்லாமோ பிடித்து. பல இடங்களில் கடன்பட்டு எப்படியோ கல்யாண கைங்கரியத்தை விரலுக்கேற்ற வீக்கம்போல் முடித்துவிட்டனர். அல்ஹம்துலில்லாஹ் என்று நீண்ட பெருமூச்சை அக்குடும்பம் விட்டது.

கல்யாணம் முடித்த மகள் மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்விட்டாள். இன்றைய முஸ்லிம் இளைஞர் பொதுவாகக் கேட்கும் வீடெல்லாம் கேட்காத மாப்பிள்ளை....... அதனால் மூத்தமகள் மணமகளாக மாப்பிள்ளை வீட்டுக்குப் போய்விட்டாள். அத்தோடு கல்யாண விஷயத்திற்கு கடன் தந்து கைகொடுத்தவர்கள் எல்லாம் சுபைரின் வீடு தேடி வரத்துவங்கிவிட்டனர். கடன் கொடுத்த தொகையை மீளப் பெறுவதற்காகத்தான் இந்த படைஎடுப்பு.......

அங்கே எடுத்து இங்கே கடனை அடைப்பது. இன்னொருவரிடம் புதிதாக வாங்கி. அவரிடம் கொடுத்து அந்தக் கடனை முடிப்பது என்று சமாளிப்பு நாடகக் காட்சிகள் தினமும் அரங்கேறலாயின.

இப்படி வயதான தந்தையை அவ்வளவாக சிரம்படவிடாமல், சுபைரே எல்லா இடங்களுக்கும் போய் வந்தான். பணம் புரட்டினான், பழைய கடனை அடைத்தான். புதிய கடன் தோன்றியது. சுபைர் இவ்வாறு பணவேட்டை ஆடிவரும்போது. ஒருநாள் தங்கள் பகுதியில் முன்பு வாழ்ந்த - இப்போது பணவசதி வந்ததும், வாசியாக குடியேறிவிட்ட அந்த அஹ்மது காக்காவை சுபைர் நெருங்கினான்.

அஹ்மது காக்கா அப்படியிப்படி பேசினாலும். நல்ல மனசுள்ளவர். தானதருமம் செய்பவர். நீண்ட காலமாக சுபைரின் பெற்றோரை நன்கு தெரியும். இந்த தெரிந்த உறவில் ஒருநாள் மாலைவேளை. அஹ்மது காக்காவை அவரது கடையில் போய் இந்த சுபைர் சந்தித்தான்.

விஷயங்களை விலாவாரியாக சுபைர் விளக்கினான். தன் சகோதரியின் மணவிழாவுக்காகப் பட்ட கடனை எல்லாம் தொட்டுக் காட்டினான். அனைத்தையும் செவியேற்ற அந்த நல்ல மனிதர் "தம்பி .... சுபைர் எல்லாமாக உன் கடன் எல்லாம் தீர.... மொத்தமா எவ்வளவு வேனும்? எனக் கேட்டார்.

சுபைருக்கு ஆச்சரியம் தாளமுடியவில்லை. கேட்ட 'எமவுண்ட்டை' தருவாரா? அல்லது அள்ளித் தருவதாகப் பேசிவிட்டு கிள்ளித்தருவாரா? என்ற சந்தேகத்தில்..... "காக்கா.......... எனக்கொரு பத்தாயிரம் இருந்தால்..........எல்லாக் கடனையும் முடித்திடுவேன்.... ஒங்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக தந்து முடிப்பேன்" என்று தயங்கித் தயங்கி, எப்படியோ தன் மனநிலையை வார்த்தைகளில் கலந்து முன்வைத்தான்.

அஹ்மது காக்கா ஆழமாக யோசித்தார்.

**நடந்த கதையின் நகல் - அபூ முஸைக்**



சில வினாடிகளின் செலவுக்குப் பின். "தம்பி சுபைர்..... ஒனக்கு நீ கேட்ட பத்தாயிரத்த தந்து உன் கஷ்டத்தை போக்குறேன். இந்தப் பத்தாயிரத்த எப்படி திருப்பித் தருவே....?" எனக்கேட்டார்.

கேட்ட தொகை முழுவதையும் தருவேன் என்ற வார்த்தை வரியை கேட்டதுமே உச்சி குளிர்ந்துபோன சுபைர். மாசாமாசம் ஆயிரம் ரூபா தந்து...........பத்து மாசத்தில் முடிச்சிடுவேன் என்றான்.

"சரி ஒவ்வொரு மாசமும் கடைசிநாள் ஆயிரம் ரூபாவோட வரனும். ஏதும் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. உன்னால் வாக்கை காப்பாற்ற முடியுமா? எனத் திடமாகக் கேட்டார். சுபைரும் தலையாட்டினான். தன் கணக்குப்பிள்ளையை கூப்பிட்டு. சுபைரை அறிமுகஞ் செய்து வைத்து "இந்த சுபைர் மாசாமாசம் கடைசி நாள் வந்து ஆயிரம் ரூபா தருவார். வாங்கி வரவு வையுங்க....." என்று பொறுப்பு சாட்டியவர். உடனே எழுந்து போய். சற்றைக்கெல்லாம் பத்தாயிரத்தோடு வந்தார். தந்தார் சுபைரிடம்....

மாதங்கள் பத்து கண்மூடி திறக்குமுன் ஓடிவிட்டனபோல காலம் முதுமையானது. எப்படியோ கஷ்டப்பட்டு சுபைர். பணம் ஒதுக்கி. ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபா வீதம் கட்டி முடித்துவிட்டான். சுபைர் கொடுத்த வாக்கை காப்பாற்றிய சாதனையாளனாக - கடைசி மாத ஆயிரம் ரூபாவுடன் அஹ்மது காக்காவின் நிறுவனத்தில் அமர்ந்திருக்கிறான்.

அழைப்பு வர, உள்ளே முதலாளி ரூமுக்குள் நுழைந்தான் சுபைர் அங்கே - அஹ்மதுகாக்காவும். கணக்கப்பிள்ளையும் இருந்தனர்.

"சுபைர் கடைசி மாத காசோடு நீ வந்திருக்கிறாயா? எனக்குத் தெரியும்.... நீ நல்ல பையன்.... உன்னை கைதூக்கி விடனும்னு எனக்கொரு ஆசை இருந்திச்சி.... பணத்தின் அருமையை - நேரந்தவறாமை - வாக்குமீறாமை இவைகளை நீ உணரனும்தான். இப்படி மாதாந்தம் உரிய நாளைய வந்து தரும்படி கறாரா பேசினான்...."

அந்த பாஸ்புக்கை எடுங்க.... "என கணக்குப்பிள்ளை கேட்க அவர் ஏதோ சிறுபுக்கை நீட்டுகிறார். அதை வாங்கி என்னிடம் அஹ்மதுகாக்கா தருகிறார். அதைப்பிரித்துப் பார்......" என்கிறார். சுபைருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவனது பெயரில் சேமிப்பு புத்தகம் - ஒன்பதாயிரம் ரூபாய் மாதாந்தம் வரவு வைக்கப்பட்டுள்ளது.

"[illegible] இந்தா [illegible] உனக்குத்தான் இந்த மாத பணத்தை நீயே போய் வேங்கில போடு... இதை வச்சி நீயாக ஒரு தொழிலை செஞ்சி........... வாழ்க்கையில் முன்னுக்குவா........யாரிடமும் இதை சொல்ல வேண்டாம்." என்றார்.

சுபைர் விழிமூட மறந்த சிலையானான். இப்படியும் ஒரு மனிதரா? என்ற ஆச்சரியம். இருபது வருடமாகியும் இன்னும் சுபைருக்கு ஈரம் காயாமல் பசுமையாகவே இருக்கிறது.

---

# முஸ்லிம் குரல்

## போட்டி நிபந்தனைகள்

- ✔ உங்கள் விடைகள் தெளிவான எழுத்துக்களில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். (விடைத்தாளை நீங்கள் தயாரித்துக் கொள்ளவும்)
- ✔ சகல வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பிய அதிஷ்டசாலிக்கு பெறுமதியானதும், அறிவு ரீதியா னதுமான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.
- ✔ ஒன்றுக்கு மேலானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார்.
- ✔ ஏனைய 10 முதல் தர விடைதாரர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டு பாராட்டுப் பெறுவர்.
- ✔ நிரப்பப்பட்ட விடைத்தாள் 15.11.2003 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- ✔ விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**முஸ்லிம் குரல்,**
**புதிர்ப் போட்டி இல - 04**
**181/1 மாளிகாகந்த வீதி,**
**(வைட் பார்க்)**
**கொழும்பு - 10**

## புதிர்ப் போட்டி இல - 05

**அகழ்வு : நிஷாத் கரீம்**

இந்தப் பகுதியின் மாதிரி விடைத்தாளில் புதிர் எண்களும் அதற்கான விடை எழுதும் பகுதியும் தரப்பட்டுள்ளன.
(காண்க விடைத்தாள் - 04)

### புதிர்கள் :-

01. அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலக பிரிவுகள் எத்தனை?
02. இலங்கை பாராளுமன்றத்தில் முதன்முதல் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்த முஸ்லிம் பெண்மணி யார்?
03. வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கு எந்த விமோசனமும் அற்ற இடைக்கால நிர்வாக அறிக்கையை சமர்ப்பித்த தமிழர் அமைப்பு எது?
04. வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்று அண்மைக்காலமாக குரல் எழுப்பி வரும் முஸ்லிம் அமைச்சர் யார்?
05. முஸ்லிம் பத்திரிகையுலகின் முன்னோடி யார்?
06. வல்லரசு நாடுகள் கையகப்படுத்த போட்டியிடும் இயற்கை துறைமுகமான திருகோணமலையை சுற்றி அமைந்திருக்கும் பிரதான இரு முஸ்லிம் நகர்கள் எவை?
07. முஸ்லிம்களுக்கு ஒரு தனியான அதிகார ஏற்பாடு வழங்கப்பட வேண்டும் என அன்று சொன்ன தமிழ்த் தலைவர் யார்?
08. தென்கிழக்காசியாவில் ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவிற்குள் மிக கூடுதலான மக்கள் வசிக்கும் முஸ்லிம் தேச பிரதேசம் எது?
09. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடைசியாக உருவாக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு மிக தேவையாய் அமைந்த முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவு எது?
10. முஸ்லிம் உம்மாவை அவமானப்படுத்தும் அமெரிக்க அழகுராணிப் போட்டியில் கலந்த பெண் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

### மாதிரி விடைத்தாள் 05

| முஸ்லிம் குரல் புதிர்ப் போட்டி இல- 05 | |
|---|---|
| புதிர் இல. | |
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

பெயர் :..............................
முகவரி :..............................
கையொப்பம் :..............................

### புதிர் போட்டி இல. 1இன் விடை

01. அல் அலக்
02. செயிலான் - செரன்தீவு
03. பிரான்ஸ்
04. யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரம்
05. காத்தான்குடி
06. கலீபா ஸலாகுதீன் ஐயூபி
07. தென் கிழக்கு பல்கலைக்கழகம். ஒலுவில் - ஜனவரி 29. 2003
08. ஜே. என். திக்ஷித்
09. சூறா யாஸீன்
10. புல்மோட்டை

(யாரும் வெற்றிபெறவில்லை)

### புதிர் போட்டி இல.2இன் விடை

01. 40வது
02. முஸ்லிம் நேசன்
03. 1996
04. அப்துல் காதர்
05. லோறன்ஸோ அல்மேடா
06. சேர். பொன் இராமநாதன்
07. இப்ராஹீம் (அலை)
08. வாப்பிச்சி மரைக்கார்
09. சேருவில
10. எஸ்.ஜே.வி. செல்வ நாயகம்

வெற்றி பெற்றவர் :
யூ. இஸ்ஸதீன்
ஹனா புத்தக சாலை
பிரதான வீதி
மூதூர்

இவருக்கான பரிசு நூல்கள் அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ.ல.சு. கட்சி - ஜே.வி.பி கூட்டில் மாற்றுக் கருத்தில்லை!




*உத்தேச ஸ்ரீ.ல.சு.க ஜே.வி.பி. கூட்டிணைப்பின் இப்போதைய நிலையென்ன?*

மக்கள் கூட்டு முன்னணியும், ஜே.வி.பியும் கூட்டமைப் பொன்றை உருவாக்க வேண்டுமென்ற ஆலோசனை கடந்த வாரம் கூடிய ஸ்ரீ.ல.சு. கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கொள்கையளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் கூட்டறிக்கையின் வார்த்தைகள் நெகிழ்வாக்கப்பட முடியும் என மத்திய குழுவின் சில உறுப்பினர்கள் கருதினர். இதற்காக ரத்னசிறி விக்ரமநாயக்க தலைமையிலான ஒரு குழு நியமிக்கப்பட்டது. கூட்டறிக்கையின் வசன அடிப்படைமுறை பற்றி அவர்கள் ஜே.வி.பியுடன் கலந்துரையாடுவார்கள்.

*கூட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கான முன்னைய தீர்மானம் தோல்வியடைந்திருந்தும், ஸ்ரீ.ல.சு.க ஏன் மீண்டும் ஜே.வி.பியுடன் கைகோர்க்கத் தீர்மானித்தது?*

முன்னைய பேச்சுவார்த்தைகள் தோல்வியுறவில்லை. நீண்ட கலந்தாலோசனைகளின்போது தயாரிக்கப்பட்ட மூன்று அடிப்படை ஆவணங்கள் எதிர்காலச் செயற்பாடுகளுக்கான அடிப்படை ஆவணங்களாக இன்னமும் பயன்படுத்தப் படவுள்ளன. எவ்வாறெனினும், பேரம் பேசும் குழுவின் பணிகள் முற்றுப்பெற்றுள்ளதுடன், அதன் நகல் வரைவுகள் இரு கட்சிகளதும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

*ஸ்ரீ.ல.சு.க - ஜே.வி.பி கூட்டமைப்பில் சிறு தொகையினர் மட்டுமே அக்கறை கொண்டுள்ளதாகவும், ஸ்ரீ.ல.சு. கட்சியின் பெரும்பான்மையினர் அதற்குச் சார்பாக இல்லையென்றும் தெரிகின்றது இது உண்மையா?*

உண்மையில்லை. உண்மை நிலையாவது, ஸ்ரீ.ல.சு. கட்சியின் உயர் பீடமான மத்திய குழு இக் கூட்டமைப்பை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

*எனினும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க இதைப்பற்றி ஆராயவதற்கு நான்கு பேர் கொண்ட குழுவொன்றினை நியமித்துள்ளார். ஜே.வி.பியுடன் கூட்டிணைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியெடுக்கும் இக்குழுவினர் தொடர்பாக ஜனாதிபதி திருப்தியற்றுள்ளாரா?*

இது ஒரு குழு பற்றியதல்ல. இவை மக்கள் கூட்டமைப் புக்கெதிரான ஊடகங்களின் கற்பனையே. நான் ஏற்கனவே கூறியவாறு ஸ்ரீ.ல.சு. கட்சியின் மத்திய குழு இவ்வாலோசனை யினை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

*திருவாளர்கள் அனுரபண்டாரநாயக்க, மங்கள சமரவீர ஆகியோரும் திருமதி பவித்ரா வன்னியாராச்சியும் ஜே.வி.பி. பக்கமான கூட்டமைப்பிற்காகச் செயற்படுவார்கள் என அடையாளங் காணப்பட்டிருக்கிறார்களே. கட்சிக் கொள்கையினடிப்படையில் செயலாற்றுமாறு இவர்களை எவ்வாறு உணர்த்தப் போகிறீர்கள்.*

இது சிலர்து கற்பனையே. எமது கட்சி முன்னெப்போதையும் விட நன்கு ஒற்றுமைப்பட்டுள்ளது. எமது கட்சியில் பிளவுகள் இல்லையென எனக்குத் துணிந்து கூறலாம்.

*ஜே.வி.பியுடன் கூட்டமைப்பை உருவாக்க முயலும் இக்குழுவினர் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தனித்தன்மையினைப் பாதுகாக்க முயலாமையின் மூலம், கட்சியின் கொள்கைகளுக்கு மாறாகச் செயற்பட முனைவதாக ஜனாதிபதி கூறியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறதே?*

எமது கட்சியில் உள்ள பலமிக்க சிலரைப் பற்றி நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். அவர்கள் கடந்த இரு ஆண்டுகளாகக் கூட்டங்கள் மூலமாகவும், தேர்தல் தொகுதிகளுக்கு விஜயம் செய்தும் எமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்த விசேட முயற்சி செய்துள்ளனர். அவர்களது செயற்பாடுகள் கட்சிக்கெதிரானவையெனக் கருதப்பட முடியாது.

*வடக்கு கிழக்கு நெருக்கடிக்கான ஸ்ரீ.ல.சு.கட்சியின் தீர்வு, அதிகாரப்பகிர்வு மூலமே என்பது மிகத் தெளிவு. மக்கள் கூட்டமைப்பின் அரசியல் பொதியில் கூறப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தைத் தாம் எதிர்ப்பதாக ஜே.வி.பி. யினர் ஆணித்தரமாகக் கூறியுள்ளனரே. இந்நிலையில் இரு கட்சிகளினதும் கூட்டமைப்பை உருவாக்கலாம் என எவ்வாறு கருதுகிறீர்கள்?*

ஜே.வி.பியைப் பொறுத்தவரை அவர்கள் அதிகாரப் பகிர்வு பற்றி எமது கருத்துக்களை ஆதரிக்காத போதிலும், வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்ட தீர்வு அவசியம் என்றும், புலிகளுடனும் பிற அக்கறை கொண்ட தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென அவர்கள் இணங்குகின்றனர்.

எத்தகைய தீர்வு காணப்பட்ட போதிலும் இலங்கை மக்களின் கருத்துக் கணிப்புக்கு விடப்படுதல் வேண்டுமென எம் இரு கட்சிகளும் இணங்குகின்றன. ஐ.தே.கட்சியின் தீர்வில் கூடக் கருத்துக் கணிப்புக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பேச்சுவார்த்தை மூலமான இறுதித் தீர்வுக்கு மக்களின் ஆதரவைப் பெறக் கூடியதாக இருக்கும். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக நாம் வேறுபாடான கருத்துக்களைக் கொண்டிருந்த போதிலும், இலை [illegible] போதியளவிலான பொது இணக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

*எனினும் கடந்த முறை, இரு கட்சிகளும் 'அதிகாரப் பரவலாக்கம்' தொடர்பில் முடிவு காணத் தவறிவிட்டனரே?*

கடந்த முறை நாம் மேலே கூறப்பட்ட பொது விதிமுறையினை உருவாக்கியிருந்தோம். கடந்த முறை இரு தரப்பினரிடையில் பிரிவு இருக்கவில்லை. இரு தரப்பினரும் நிலைமைகளை மீள் பரிசீலனை செய்வதற்காக ஒரு இடைவெளி விடப்பட வேண்டுமென நாம் இணங்கியிருந்தோம். இவ் எல்லாக் கூட்டங்களும் மிகவும் சினேகபூர்வமான நிலையிலும், பயன்மிகு வகையிலும் நடைபெற்றன.

*இப்போதைய தேசிய நெருக்கடியினைத் தீர்ப்பதற்காகப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரெஞ்சு முறையினை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி இது தொடர்பாகத் தனது கருத்துகளை முன்வைக்கவில்லை இதன் அர்த்தம் ஜனாதிபதி பிரெஞ்சு முறையினை ஆதரிக்கவில்லை என்பதா?*

பிரெஞ்சு முறையினை ஐ.தே.கட்சி வியாக்கியானம் செய்துள்ளமை பற்றி மீள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும். பிரான்சில் ஜனாதிபதி பாதுகாப்புப் படைகள் மீது முழுக்கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார். எவ்வாறெனினும் பாதுகாப்புச் செயலகத்துக்கும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு மிடையிலான செயற்பாடுகளை இணைத்துப் பணியாற்றுவதற்காகப் பிரதமரை அல்லது அவரது பிரதிநிதியைக் கொண்டதும் தனது தலைமையிலான ஒரு குழுவை நியமிக்க ஜனாதிபதி கருத்துத் தெரிவித்துள்ளார். நிலைமை யினை முன்னெடுத்துச் செல்ல அத்தகைய ஒருகுழு மிகப்பய னுள்ளதாக இருக்குமென நான் கருதுகிறேன்.




*ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துத் திடீர்த் தேர்தல் ஒன்றை நடாத்தப் போவதாகக் கூறப்படுவதில் ஏதும் உண்மையுண்டா? அத்தகைய நிலையில் மக்கள் கூட்ட மைப்பு தேர்தல் ஒன்றைச் சந்திக்கத் தயாரா?*

ஜனாதிபதியின் தற்றுணிவு அதிகாரம் தொடர்பான விடயங் களைப்பற்றி என்னால் எதுவும் கூற முடியாது. அரசிய லமைப்பின் படி நிறைவேற்றுத் துறையும், சட்டவாக்கற் துறையும் தமது பணிகளை நிறைவேற்றினால் பாராளுமன் றத்தைக் கலைக்க வேண்டியேற்படமாட்டாது.

சட்டவாக்கத்துறை, நிருவாகத் துறையான ஜனாதிபதியின் அதிகாரங்களிற் தலையிட முயன்றதாலேயே நெருக்கடி நிலையேற்பட்டது. உச்ச நீதி மன்றம் இதனைத் தடுத்துள்ளது. எனவே சட்டவாக்கற் துறை தனது எல்லைக்குள் நின்று செயற்பட முடியுமெனின் முறுகல் நிலை ஏற்படமாட்டாது. தேர்தல் ஒன்று நடந்து, மக்கள் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் கூட்டிணைந்து களத்தில் குதிப்பின் நாம் வெற்றி பெறுவோம் என்பதிற் சந்தேகம் இல்லை.

*நோர்வே ஏற்பாட்டாளர்கள் வெளியேறிச் சென்றமை பற்றி எதிர்க்கட்சிகள் எவ்வாறு நோக்குகின்றனர்?*

நோர்வேயினரைச் ஜனாதிபதி அழைத்தார். எவ்வாறெனினும் நோர்வே தலையீட்டின் தவறுகள் குறித்து உள்ளூர் ஊடகங்கள் சுட்டிக்காட்டின. ஹெல்ஹெசனின் இறுதியான அறிக்கையின் உள்ளடக்கம், தொனி என்பன தொடர்பாக எம்மிடையே அதிருப்தி நிலவியது. அவர்களுக்கெதிராக உறுதியான அழுத்தங்கள் விடுக்கப்பட்ட போதிலும், சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அவர்களது பங்கு தொடர்பாக ஜனாதிபதி பாதகமான எதையும் கூறவில்லை.

நன்றி - சண்டே லீடர் (23..11.2003.)

## வாரமொரு உரைகல்

# பிறர் நலன் பேணல் பண்பு உறுதியான கூட்டமைப்புக்கு உகந்தது!

*"ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதியிழைக்கவும் மாட்டான் அவனை (பிறரது அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். எவர் தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கின்றாரோ அவரது தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கின்றான். எவர் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகின்றாரோ அவரை விட்டு அல்லாஹ்வும் மறுமை நாளில் துன்பங்களில் ஒரு துன்பத்தை நீக்குகின்றான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ அவரது குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான்" என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*(அறிவிப்பவர் அப்துல்லாஹ் பின் உமர் (ரழி), ஆதாரம் புஹாரி)*

மேற்படி நபி மொழி மூலம் பல்வேறு போதனைகளை நாம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அவற்றில் 'பிறர் நலன் பேணுதல்" எனும் அம்சம் முக்கிய தொனியாக அமைந்திருக்கின்றது. உண்மையில் சுயநலப் போக்கில் நம்மை மட்டும் எவற்றிலும் பாதுகாத்து வாழ முற்படும் பக்குவத்தை விடவும் அடுத்தவர்களின் நலன்களையும் காத்து வாழும் பொது நலப் பண்பில் எம்மை ஈடுபடுத்திக் கொள்வதையே இஸ்லாம் விரும்புகின்றது.

பொது நல கட்டமைப்பு வாழ்க்கையில் நாம் மட்டும் அன்றி, நம்மைச் சேர்ந்தவர்களும், பயன்களைப் பெறுகின்றனர் எனும் போது தாம் பெற்ற இன்பமும், வெற்றியும், உயர்வும் நிறைந்த பெறுபேற்றுக்கு நமது சகோதரர்களையும் இணைத்துக் கொள்கின்றோம். இது நமக்குள்ளும் ஓர் இறுகிய பிணைப்பையும், ஒற்றுமை பக்குவத்தையும், நேசிப்புப் பாங்கையும் வளர்த்தெடுத்து விடுகின்றது.

அடுத்தவர்களின் அத்துமீறல்களையும், அநீதியான கெடுபிடிகளையும் எம் மீது பிரயோகிப்பதை நாம் எப்படி வெறுத்து விடுவோமோ அவ்வாறே எமது அடுத்த சகோதரனுக்கும் ஏற்பட்டு விடாது பாதுகாக்கும் உணர்வு மேலீடு எம்மில் பற்றிக் கொள்ளும் போதுதான் நமது சமூக அமைப்பின் 'நலன் பேணல்" எனும் போக்கிற்கு எம்மைத் தயார் படுத்திக் கொள்வோம்.

இங்குதான் தனிமனித நலன் என்பதற்குப் பதிலாக சமூக நலன் எனும் குறிக்கோள் துளிர் விடுகின்றது. இதனை அரவணைத்து வளர்த்தெடுப்பதன் மூலம் நமக்குள் நாம் முரண்படுவது முதலில் களையப்படுகின்றது. அதனால் நமது சமூகத்தை நோக்கி பிறர்கள் தொடுக்கும் அநீதிகளிலிருந்து எமது சமூகத்தை விடுதலைப் பெறச் செய்வதற்கான வழி முறைகளில் கை கோர்த்துக் கொள்ளத் துணிகின்றோம்.

இதன் மூலம், அநீதமாக எவர்களிடமிருந்து எம்மீது நீட்டப்படுகின்ற கரங்களை தடுப்பதற்கும், நாம் அனுபவிக்கும் நலன்களை எம்மில் எட்டுவதற்கில்லாதவர்களுக்கு பகிர்ந்து கொள்வதற்கும், பாவத்தினது பக்கம் நம்மையும், நமது சகோதரர்களையும் நெருங்க விடாதும் பாதுகாத்துக் கொள்வதற்கும், நமது சகோதரர்களில் தேவையுடையவர்களின் தேவையை நிறைவு செய்வதற்கு ஏதுவான பங்களிப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நாம் தயாராகி விடுகின்றோம்.

இந்நிலையானது நமது ஈருலக வாழ்விலும் மோட்சத்திற்கும், இறையன்பில் நெருங்கி இருப்பதற்கும் உத்வேகமான ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் நல்லதொரு தளமாக அமைகின்றது. இதனைப்பற்றிப் பிடித்து வாழுங் காலம் வரை நமது வாழ்வு தாழ்வை நோக்கிப் பயணிக்காது என்பது உறுதியானது.

- மருதூர் மெய்யொளி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா; வாப்பாவ



என். முஜீப், என். முஜீபா
எங்கள் வாப்பாவின் பெயர் ஜனுதீன் நூர்தீன், குண்
உதவி செய்ய யாருமில்லை. (வாழ்வின் குரலொன்

**சுபைர் முகம்மது நிசாம்தீன்**
**(கொல்லப்பட்ட சுபையிர் என்பவரின் இரண்டாவது மகன்)**

கடந்த பத்தாம் மாதம் நாங்கள் எங்கள் வயல் நிலங்களை உழுது, விதைத்துக் கொண்டிருந்தோம். சுமார் 130 ஏக்கர் உழுது, முடிக்கப்பட்டு விதைப்பு வேலைகள் நடந்து கொண்டிருந்த போது, நான் இரவில் வேலை செய்துவிட்டு பொருட்கள் வாங்கவென கிண்ணியாவுக்கு வந்திருந்தேன். மீண்டும் வயலுக்குச் செல்லும் போது எல்.ரீ.ரீ.ஈ. உழவு இயந்திரத்தைப் பறித்துச் சென்றுள்ளதாக அறிந்தேன். பிறகு கிண்ணியா பொலிசில் முறைப்பாடு செய்தேன். திருமலை மாவட்ட எம்.பி. துரைரெட்ண சிங்கம் அவர்கள் சுரேஸ் என்பவரைத் தொடர்புகொண்டு மெசினை பெறுமாறு உலமா சபையினர் தெரிவித்தனர். நான் பி.ப. இரண்டு மணியளவில் சுரேஸை இது தொடர்பாகச் சந்தித்த போது, இப்போது போக இயலாது என்றும், பி.ப.4.30 மணிக்குப் பிறகு செல்லலாம் என்றும் கூறினார். நாலரைமணிக்கு வெளிக்கிட்டு அங்கு செல்ல இரவு ஆறு, ஏழு மணியாகிவிடும். அதன் பிறகு மெசினை எடுத்துவர முடியாது. வேறு ஒரு தமிழ் சகோதரர் ஒருவர் மெசின் இருக்கும் இடத்தைச் சொன்னார். நான் பள்ளி நிருவாக சபையினர் பத்துப் பேரோடு அங்கு சென்றேன். அங்கு சென்று பார்த்தபோது மெசின் ஒரு மடுவுக்குள் கிடப்பதைக் கண்டேன். முன் சில்லுகள் உட்பட எல்லாப் பாகங்களையும் புலிகள் கழற்றி எடுத்திருந்தனர். வெறும் இரும்பு மட்டுமே எஞ்சியிருந்தது. மீதியை அடித்து உடைத்தும், கோடரியால் கொத்தியும் இருந்தனர். அதனால் எனக்கு நாலு இலட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மொத்தமாக எட்டு இலட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுவரை இதற்காக ஒரு ரூபாவேனும் நான் இழப்பீடாகப் பெறவில்லை. நாங்கள் மட்டுமல்ல முழுக் கிண்ணியாவுமே பல கோடி ரூபாய்களை இழந்து நிற்கின்றது. இந்த நோன்புப் பெருநாளுக்குப் பிறகு மட்டுமே பல இலட்சங்களை இழந்து நிற்கின்றோம். பலருடைய ஆடு, மாட்டுப் பட்டிகளை புலிகள் சூறையாடிச் சென்றுவிட்டனர். மகமாறு பகுதிக்குள் புகுந்து கோழிகளைப் பிடிப்பதும், வாழைக் குலைகளை வெட்டிக்கொண்டு போவதும், சிலர் வந்து 'எழும்பிப் போங்கடா' என்று அதட்டுவதும், வேறு சிலர் வந்து 'இருங்கடா' என்று மிரட்டுவதுமாக முஸ்லிம் மக்களின் வாழ்க்கையோடு விளையாடுகின்றனர். இப்போது புலிகள் முஸ்லிம் மக்களை பந்து போல மாறி மாறி அடிக்கின்றனர். இராணுவம் 'நீ ஏன் எழும்புகிறாய், அகதியாய் எங்கும் போகாதே நிவாரணம் தர அரசாங்கத்திடம் காசு இல்லை' என்று அதட்டுகின்றனர். இப்படியே இரண்டு பக்கத்தாலும் போட்டு எங்களைப் பந்தாடுகின்றனர். அரசியல்வாதிகளோ இதோ செய்கிறேன், அதோ செய்கிறேன், பார்லிமெண்டில் பேசுகிறேன் என்கின்றார்கள். ஆனால் நடந்தது எதுவும் இல்லை.

## இளைஞர்களாகிய நாம் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம்!

ஆலங்கேணி தமிழ் மக்களுக்கு எந்தவித உயிரிழப்பும் ஏற்படவில்லை. ஒரு ரூபாய் பெறுமதியான சேதமும் ஏற்படவில்லை. அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கிண்ணியாவில் பெரியளவு உயிர், பொருள் சேதம் ஏற்பட்டும் கூட எந்தவித நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை. ஆலங்கேணியில் 2500க்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகக் கூறி உடனடியாகத் தொலைக்காட்சிகளில் அவர்கள் தங்கியிருந்த பாடசாலையைக் காட்டினார்கள். மகமான் நடுஊற்று பகுதிகளில் அகதிகளான முஸ்லிம் மக்களை அவர்கள் ஏன் காட்டவில்லை?

இளைஞர்கள் ஆகிய நாங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். எங்களிடம் கத்தியோ, கம்போ எது உள்ளதோ - எங்களிடம் வந்தால் இயன்ற அளவு போராடி மடிவோம். இவர்களின் சமாதானத்தை நம்பி, நம்பி பல உயிர்களையும், பலகோடி பெறுமதியான சொத்துக்களையும் நாங்கள் இழந்து விட்டோம். எங்களிடம் இழக்க இனி எதுவும் இல்லை. அவர்கள் எங்களில் பழி போடுவது போல எங்களிடம் ஒரு ஆயுதக் கும்பல் இருக்குமானால், இந்த ஏழு உயிர்களையும் பலி கொடுத்ததற்குப் பதிலாக இருபத்தைந்து பேர்களையாவது நாங்கள் பலியெடுத்திருப்போம். இந்த மூன்றாம் தரப்பென்பது இட்டுக் கட்டப்பட் ஒரு கதை. யாரிந்த மூன்றாந் தரப்பு?



பட்டியமுத்து பகுதியில் விவசாயக் காணியும், பயிர்ச்செய்கைக் காணியுமாக எங்களுக்கு 42 ஏக்கர் காணி உள்ளது. இப்போது தமிழர்கள் அங்கு குடிசை போட்டுள்ளனர். நாங்கள் சென்று கேட்டபோது, உங்களுக்கு இங்கு எங்கே உள்ளது காணி?, நாங்கள் காடு வெட்டிய நிலம் இது என்று சொல்கின்றார்கள்.

## இதுவரை நிவாரணம் கூட வழங்கப்படவில்லை...

**எம்.எம். அப்துல்லா.**
**(சமூக சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம் கிண்ணியா.)**

*இதுவரை நடந்த சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு தரப்பிலிருந்து எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லை என தெரிய வருகிறது. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

கடந்த 28ம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். அன்றைய தினத்திலிருந்து நடுஊற்றுக் கிராமத்திலிருந்து அனைத்து மக்களும் 29, 30 திகதிகளில் கிண்ணியா மகமாரி கிராமத்திலுள்ள அலிகார் மகா வித்தியாலயத்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்திருந்தனர். இது தொடர்பான விபரங்கள் அன்றிரவே பிரதேச செயலாளருக்கும், அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அடுத்த நாள் 29ஆம் திகதி அரசாங்க அதிபரும், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர்களும் கிண்ணியாவுக்குச் சமூகமளித்து நிவாரண உதவிகள் தொடர்பாகக் கலந்துரையாடினர். எல்லைக்கிராமங்களிலுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களால் திரட்டப்பட்ட தகவல்கள் கொழும்புக்கும், திருகோணமலை கச்சேரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை நிவாரணங்கள் வழங்கப்படுவதற்கான உத்தரவு வழங்கப்படவில்லை.



*அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ள மக்களுக்கு மட்டுமே நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று கூறப்படுகிறதே?*

அரசாங்கத்தின் சட்டதிட்டத்தின் படி முகாம்களில் தஞ்சம் அடைந்த மறு தினத்திலிருந்து அரசாங்க அதிபரின் அனுமதியுடன் நிவாரண உதவிகள் வழங்கப்படல் வேண்டும். ஆனால் படையினர், பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக கூறி முகாம்களில் இருந்து வெளியேறி தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற முஸ்லிம்களை வற்புறுத்தியதன் பிரகாரம் உரிய இடங்களுக்குச் சென்று குடியேறிய மக்களுக்கு 28ம் திகதியிலிருந்து இன்று வரை அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலமோ நிவாரண நடவடிக்கைகள் வழங்கப்படவில்லை. ஆயினும் அரசாங்க அதிபரும், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்கான முழு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.



நான் கடற்றொழில் செய்து வருகிறேன். நான் தாமரைவில் பாலத்தருகில் உள்ள எனது வீட்டில் இரவு 10 மணியளவில் சாப்பிட்டு விட்டு வெளியில் அமர்ந்து கொண்டிருக்கும் போது திடீரென்று சுட்டார்கள். குண்டொன்று வீசப்பட்டது. அப்போது மூன்று நான்கு பேர் ஓடுவதைக் கண்டேன். எங்களது பகுதியில் இப்போது யாருமில்லை. எல்லோரும் இடம் பெயர்ந்து வேறு வேறு வீடுகளில் அகதிகளாக தங்கியுள்ளனர். இச்சம்பவத்தின் போது எனது உம்மாவும் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதைச் செய்தது புலிகள்தான்.

## சமாதான காலத்தில் முஸ்லிம்

**எம்.வை.ஹிதாயத்து**



*நிலைமைகள் எவ்வாறு ... எடுத்துள்ளீர்கள்?*

கடந்த பல மாதங்களாக ... பல பிரச்சினைகளை எதிர் ... உறுப்பினர்கள் ஏனைய ... தெளிவாக எடுத்துக் கூறி ... அவர்கள் செய்திருந்தார்க ... கூடிய சில நிகழ்வுகள் ந... வருகின்ற சம்பவங்கள் எங்களுடைய முஸ்லிம் சகோதரர்களுக்கு பெரும் ... வேண்டுமென உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்ட போது அதற்கான ... அமைத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும் கூறி அதற்கான நடவடி...

*விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தி ... இருந்தாலும், சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறுகின்றதே இது பற்றி ...*

அண்மைக்காலமாக நாங்கள் தொடர்ந்து பேசி வருகின்றோம். பேச்சுவார் ... உள்ளது. அவர்களிடம் நாங்கள் பேசிய போது தாங்கள் கட்டுப்பாட்டு நட... விறகு எடுக்க வருபவர்கள், காட்டில் தொழில் செய்பவர்கள் போன்றவ... முஸ்லிம், சிங்கள மக்கள் என்ற பாகுபாடின்றி தாங்கள் மேற்கொள்வதாகவும் ... அறவிடுவதாகவும் அவர்கள் கூறினார்கள். இந்தளவு பெரியதொரு தொகை ... வனவளத்தை ஏற்படுத்துவதற்காக வேண்டி தாங்கள் அவ்வாறு செய்வத... அதிகாரிகள் மற்றும் கண்காணிப்புக் குழுவினர் எல்லோரும் மௌனம் சா... தொகை ஒன்றை அறவிடுவதன் மூலம் மக்களுடைய தொழிலைச் சரியாக ... சரியான பதில் ஒன்றையும் கூறவில்லை.

*சமாதான ஒப்பந்தத்தின் பின் முஸ்லிம் மக்கள் பல்வேறு வகையா... அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளனர். பொறுப்பு வாய்ந்த சம்மேளனத்த... அதிகாரி என்ற வகையில் முஸ்லிம்களுக்கு என்ன சொல்கிறீர்கள்?*

உண்மையில் யுத்த காலத்தை விட இந்த சமாதான ஒப்பந்தத்திற்குப் பி... முஸ்லிம்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சமாதான ஒப்பந்தத்துக் ... பிறகு தமிழ், சிங்கள, மக்களும், புலிகளும், இராணுவமும், சமாதானமாக வாழ்ந் ... கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களைப் பொறுத்தவரை, நாங்கள் எல்ல... பிரதேசங்களிலும் பல வகையான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி இருப்பதை ... காணலாம். உதாரணமாக மூதூர், வாழைச்சேனை, சம்மாந்துறை மற்ற...



**சுலைஹா உம்மா (70)**

நாங்கள் தாமரைவில்லிலுள்ள எங்க... வீட்டில் இருந்து இடம்பெயர்ந்து வந்... இங்கு தங்கியுள்ளோம். நாங்க... சாப்பிட்டு விட்டு குடும்பத்தவரோ... வாசலில் இருக்கும் போது புலிக... வந்து வேலிக்கருகில் நின்று சுட்டார்க... இதில் எனது தங்கையின் மக... மௌத்தாகி விட்டார். நான் சூட்... காயத்துடன் நழுவிப்போய் வீட்டுக்கு... கதவை சாத்தி விழுந்தவாறு இருந்தேன். வீட்டுக்குள் எனது பிள்ளைக... இருந்தனர். படையினர் வந்து சுட்டபொழுது புலிகள் ஓடி விட்டன... படையினரே என்னையும், மகனையும் கொண்டு வந்... வைத்தியசாலையில் சேர்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வைக் கொன்று விட்டார்கள்




...தண்டுவீச்சுக்கு இலக்காகி மௌத்தாகி விட்டார். எங்களுக்கு ...லான் கேட்கிறதா உங்களுக்கு?)

## ...லிம்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர்

**...ாயத்துல்லா (மௌலவி), கிண்ணியா உலமா சபைச் செயலாளர்**

*...வ்வாறு இருக்கின்றன? முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக என்ன நடவடிக்கைகள் ...?*

...களாக மது... பிரதேசத்தில் ஏற்பட்ட பல சம்பவங்கள் காரணமாக முஸ்லிம் மக்கள் ...ள எதிர்நோக்கியுள்ளனர். இந்த பாதிப்புக்கள் தொடர்பாக எமது மாவட்ட பாராளுமன்ற ...னைய இராணுவத் தரப்பினர்கள் கண்காணிப்புக் குழுவினர்கள் போன்றோருக்குத் ...க் கூறி இருக்கிறோம். அதற்கேற்ற வகையில் பல ஏற்பாடுகளைக் கடந்த காலங்களில் ...ந்தார்கள். இருந்தாலும் முஸ்லிம்களுக்கு மிக மோசமாக பாதிப்பை ஏற்படுத்தக் ...புகள் நடைபெறுகின்றன. இந்த வகையில் கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்று ... பெரும்பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. அதற்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட ...ற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாகவும் ஆங்காங்கே பாதுகாப்பு அரண்களை ... நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

*... நடத்தி இருந்தீர்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் வாக்குறுதி வழங்கி ... பற்றி என்ன கூறுகின்றீர்கள்?*

...ச்சுவார்த்தைகளின் போது பேசுவது ஒன்று. பிறகு நடப்பது அதற்கு மாற்றமாக ...ட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், அந்தப்பகுதியில் வண்டில் மாடுகள், ...பான்றவர்களிடம் தங்கள் வரி அறவிடுவதாகவும் இவ்வரி அறவிடுதலை தமிழ், ...ாகவும் கூறினார்கள். அவ்வாறு மக்கள் செய்யாவிட்டால் அதற்கான தண்டப்பணத்தை ... தொகையை ஏன் வாங்குகீறீர்கள் என கேட்ட பொழுது தங்களுடைய பகுதியில் ...செய்வதாகக் கூறினார்கள். அவ்வாறு அவர்கள் கூறிய நேரம் இராணுவ உயர் ...னம் சாதித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அவ்வாறு பிடிபடுபவர்களிடம் சிறிய ... சரியாக செய்வதற்கு உதவுமாறு நாங்கள் வேண்டிய போதும் அதற்கு அவர்கள் ...

*...வகையான ...ளனத்தின் ...ள்?*

கிண்ணியா போன்ற இடங்களில் அண்மைக்காலமாக நடந்து வருகின்ற கொடூரமான கொலைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் அமைந்து வருகின்றன. இவைகளை நாம் உணர்தல் வேண்டும்.

...குப் பிறகு ...பந்தத்துக்கு ...க வாழ்ந்து ... எல்லாப் ...ருப்பதைக் ...ற முற்றும்

...ள எங்கள் ...ந்து வந்து ... நாங்கள் ...ந்தவரோடு ...து புலிகள் ...சுட்டார்கள். ...ன் மகன் ...ன் சூட்டு ...வீட்டுக்குள் ...பிள்ளைகள் ... விட்டனர். ...டு வந்து

கிண்ணியாவிலிருந்து முஸ்லிம் குரல் ஆசிரியர் குழுவினர் மக்களிடம் கேட்டவற்றிலிருந்து ஒரு சிறு தொகுப்பு

## பன்றியைச் சுட்டு தூக்கிச் செல்ல பணித்தார்கள்!



படுகொலை செய்யப்பட்ட பளீல், சுபைர் ஆகிய இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். 12 வருடங்களுக்கும் மேலாக பயிரிட முடியாதிருந்த வயலில் சமாதான ஒப்பந்தத்திற்குப் பிறகுதான், கடந்த இரு போகங்கள் பயிர்ச்செய்கை செய்து வருகின்றோம். அவர்கள் இருவரும் நடு ஊற்றுக்கும், பட்டியமுத்துக்கும் இடையிலுள்ள அவர்களது வயலில் காவலுக்குச் செல்பவர்கள். அவர்களின் வயல் தம்பலகாமத்தை இணைக்கும் பிரதான பாதையில் அமைந்துள்ளது. இது புலிகளின் முக்கியமான பாதையாகும். இதற்கு முன்னர் புலிகள் பலர் வந்து பன்றி, முயல் போன்றவற்றை வேட்டையாடுவதாகவும், பன்றி முஸ்லிம்களுக்கு விலக்கப்பட்டதொன்று என்று தெரிந்திருந்தும் வேண்டுமென்றே அதை தூக்கும்படி சொன்னதாகவும் படுகொலை செய்யப்பட்டவர்கள் எங்களிடம் கூறியிருந்தனர். இச் சம்பவங்களின் பின் நாங்கள் இவர்களை வயலுக்குச் செல்ல வேண்டாமென்று தடுத்தோம். உலமா சபையினரால் சமாதான அறிவிப்பு விடுக்கப்பட்ட மறுநாள் அவர்கள் திரும்பவும் அங்கு சென்று வாடி அமைத்தனர். பிறகும் புலிகள் சிலர் வேட்டையாட வந்ததாகவும், அவர்கள் சுட்டிருந்த நான்கு முயல்களை உரித்து கொஞ்ச தூரம் சுமந்து சென்று கொடுத்ததாகவும் கொல்லப்பட்டவர்கள் கூறினார்கள். நாங்கள் அவர்களை எச்சரித்த போது அவர்கள் எங்களுக்கு எதுவும் செய்யமாட்டார்கள் என்று நம்பிக்கையுடன் கூறினார்கள். மேலும், யானைகள் பயிர்களை அழித்ததால் காவலுக்கு யாரும் செல்ல முன்வராத போது அவர்கள் போயாக வேண்டும் என்று சொல்லிக் காவலுக்குச் சென்றார்கள். 12 ஏக்கர் வயல் அவர்களுடையது, பல இலட்சங்கள் முதலிடப்பட்ட பயிர்ச்செய்கையைப் பாதுகாக்க கூலியாட்கள் பயத்தில் வராத சந்தர்ப்பத்தில் முதலிட்டோர் போயாகவேண்டிய கட்டாயத்தில்தான் அவர்கள் சென்றார்கள். பெருநாள் கழிந்து இரண்டு நாட்களின் பின்னர் 29ஆந் திகதி காலையில் மூன்றுபேரை வெட்டிக் கொலை செய்திருப்பதாக நாங்கள் அறிந்து அங்கு சென்று பார்த்த போது தலையெல்லாம் கண்டங்கோடரி, வாள் வெட்டுக் காயங்களுடன் அவர்கள் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைக் கண்டோம். அவர்களின் சேட்டைக் கழற்றி கைகளைப் பின்னால் கட்டிவிட்டு, வெட்டியுள்ளனர். அது மனிதர்கள் செய்யக்கூடிய செயலல்ல. காட்டு மிராண்டிகளின் செயல். புல் பூண்டுக்குக் கூட அநியாயம் நினைத்திராதவர்கள் அவர்கள். அவர்களுக்குக் கோபக்காரர்கள் என்று யாரும் இல்லை. எனவே, அந்தப்பாதையில் எல்.ரீ.ரீ.யினரைத் தவிர வேறு யாரும் இதைச் செய்திருக்க முடியாது. இந்தப் படுகொலைகளுக்கு முஸ்லிம் என்ற ஒரு காரணத்தைத் தவிர வேறெந்தக் காரணங்களும் இருக்க முடியாது.

சமாதான ஒப்பந்தத்திற்குப் பிறகு பட்டியமோட்டுப் பகுதியில் பயிர்செய்யப்பட்ட 500 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்களை இன்று சென்று பார்க்க முடியாத நிலை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. மொத்தமாக இவ்வாறு 1500 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்கள் செய்கை பண்ணப்பட்ட பின் கைவிடப்பட்டுள்ளன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள எட்டாயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணிகளை இன்று செய்கை பண்ண முடியாதுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றாலும் முஸ்லிம்களால் அங்கு செல்ல முடியாது. கண்டாக்காடு, மணல்ச்சேனை போன்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள எங்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் நிலங்களையும் இன்று செய்கைபண்ண முடியாதுள்ளது.

## புலிகள் செய்து விட்டு மூன்றாம் தரப்பு என்கிறார்கள்!

**ஹமீட்**



பிரச்சினை நடந்த பின்னர் சின்னத்தௌபீக் எம்.பி, திடீர் தௌபீக் எம்.பி, மஃறூப் எம்.பி எல்லோரும் வந்து இரண்டு மூன்று தரம் கூட்டம் கூடினார்கள். அவர்களின் தரப்பிலிருந்து யாரும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. புலிகள் எந்தப் புறமிருந்து வருவார்கள் என்பது தெரியாத நிலை எம்முடையது. எங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வேண்டும். இதுதான் எமது கோரிக்கை.

பாதுகாப்புப் படையினரோடு நாங்கள் தொடர்பு கொண்ட போது, எங்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு இராணுவம் போதாது என்றும், மேல் மட்டத்திலிருந்து எங்களுக்கு அறிவித்தல் வந்தால் நாங்கள் பாதுகாப்புத் தருவோம் என்றும் கூறுகின்றனர். இந்த அசம்பாவிதங்களுக்குக் காரணம் மூன்றாந் தரப்பினரே என்று புலிகள் கூறுகின்றனர். முன்பு குற்றம் செய்தவர்களை கொன்று தொங்கவிட்ட அவர்களால் ஏன் இதற்கெல்லாம் காரணமானவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை. யார் இந்த மூன்றாந் தரப்பு? புலிகள் செய்துவிட்டு, கேட்டால் மூன்றாந் தரப்பு மூன்றாந் தரப்பு என்கின்றனர்.

### அப்துல் காதிர்



மௌத்தானவர் துர்ஜிஹன் அஸாம் (25). அவர் மரக்கறி வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு திருமணமாகி இரண்டு பெண் பிள்ளைகளும் (08,07) ஒரு ஆண்பிள்ளையும் (04) உள்ளனர். அவர் தம்புள்ளைக்குச் சென்று அங்கிருந்து மரக்கறி வாங்கி வந்து விற்று தொழில் செய்து கொண்டிருந்தவர். அவ்வாறு மரக்கறி கொண்டு வரும் போது பொன்னரசன் குளத்தில் வைத்து அவர் மீது குண்டு வீசப்பட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கு மௌத்தானார். இப்படுகொலையை எல்.ரி.ரி.யினரே செய்துள்ளனர். இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்று பேரிடமும் முறையிட்டோம். ஜனாதிபதிக்கும் அறிவித்தோம். ஜனாதிபதி முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பணித்ததன் பின்னர் வீதிகளில் இராணுவ வீரர்கள் பாதுகாப்பு வழங்குகின்றனர். பாராளுமன்றத்திலுள்ள எம்.பிக்கள், உலமா சபையினர், படித்தவர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஒன்றும் தெரியாத இந்த மக்களுக்காக பாதுகாப்பும், சுபீட்சமும் மிக்க வாழ்வுக்கான ஏற்பாட்டை செய்து தரவேண்டும்.

## எனது மகனின் கண் பாதிக்கப்பட்டு விட்டது!

**முஹமட் சரீப் (60)**



எனது மகன் ஹிதாயத்துள்ளா(29) தம்புள்ளைக்கு மரக்கறி எடுக்கச் சென்று வரும் போது முனைச்சேனைக்கும், கச்சகொடி தீவுக்கும் இடையில் வைத்து இரவு மூன்று மணியளவில் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவத்தில் இருவர் மௌத்தாகியும் இருவர் காயங்களுடன் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதில் நாகூர் பிச்சை முஜீப் என்பவர் இன்னும் அங்கு சிகிச்சை பெறுகிறார். எனது மகனாகிய ஹிதாயத்துல்லாஹ் சிகிச்சை பெற்று வெளியேறி கண் பாதிக்கப்பட்டிருந்தமையால் திரும்பவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளார். பைசல் நகரிலும் இடிமன் பகுதியிலும் நடைபெற்ற சம்பவங்களுக்கான காரணம் போதிய பாதுகாப்பு இன்மையேயாகும். நாங்கள் அச்சத்தில் இருக்கிறோம். சுமூகமான வாழ்க்கையே எங்கள் விருப்பமாகும்.

*மேலதிக போலிசார் கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்களா?*



பிரதான பாதைகளிலும், கடவூத்து போன்ற பகுதி களில் மேலதிகமான 03 காவல் அரண்களும், குறிஞ் சான்கேணி ஆலங்கேணி, கிண்ணியா டெலிகோம், சமச்சல் தீவு போன்ற இடங்களில் விஷேச பொலிஸ் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நடமாடும் கடமைகளிலும் ஈடுபடுகின்றனர். அதே போல் சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றிலும் ஊரைச் சுற்றி தங்கள் கடமைகளில் மும்முரமாக ஈடுபடுகின்றனர். புலிகளையும், தமிழ்த் தரப்பினர்களையும், உலமா சபையினரையும் திருகோணமலையில் ஒன்று கூட்டி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட ஏற்பாடு செய்துள்ளோம்.

**(சீனன்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி *கிளமண்ட் பெர்ணாந்து*)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களை அச்சுறுத்தும் தொடர்பூடகப் பயங்கர வாதம்

ஆர். அலிக்கான், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

வியக்கத்தக்க வகையில் இன்று தொடர்பூடகங்கள் விரைந்து வளர்ந்து வருகின்றன. தொழிற்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக மக்கள் ஊடகங்கள் அளவாலும், இயல்பாலும், பரப்பாலும், வகைகளாலும் மக்களின் அரசியல், பொருளாதார சமுதாய வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கின்றன. ஊடகங்களின் தாக்கத்திற்குட்படாத எந்தத் துறையுமில்லை. இவற்றுள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் செல்வாக்கு எழுத்தில் அடங்காது இவ்ஊடகங்கள் இன்று சகலவற்றையும் தீர்மானிக்கின்ற முக்கிய கருவியாக ஆகி விட்டிருக்கின்றது.

ஊடகங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் அதிகாரத்துவ சக்திகள் தமது அதிகாரத்தை நிலை நாட்ட இந்த ஊடகங்களை மிகவும் தந்திரமாகவும் நுட்பமாகவும் கையாண்டு வருகின்றன. ஏற்கனவே புரையோடிப் போயிருக்கின்ற அதிகாரத்துவ சிந்தனைகளை ஆதிக்க சிந்தனைகளை உறுதியாகப் பலப்படுத்துவதில் இவை இந்த கைதேர்ந்த ஊடகங்களை கையாள்கின்றன. அதிகாரத்துக்காகப் போராடும் சகல சக்திகளுக்குமான முன் நிபந்தனைகளாகவும் சித்தாந்த மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவும் ஊடகங்கள் துணைபோகின்றன.

முஸ்லிம்களுக்கு மத்தியில் இந்த ஆதிக்க சித்தாந்தங்களை நிலைநாட்டுவதிலும் மூளைச்சலவை செய்து ஒரு அடிமைத்துவ சமூக அமைப்பை ஏற்படுத்தவும் அடிபணிய வைக்கும் முயற்சியிலும் இந்த ஊடகங்கள் மிகவும் நுட்பமாக செயற்பட்டு வருகின்றன. இதைத்தான் நாம் தொடர்பூடகப் பயங்கரவாதம் என்கிறோம். ஏற்கனவே எமது சமூக அமைப்பில் நிலவுகின்ற ஆதிக்க சித்தாந்தங்களை மீளுறுதி செய்து அதனை மீள கட்டமைக்கின்ற பணியினை சில தமிழ் ஊடகங்கள் செய்து வருகின்றன. சக்தி F.M , சக்தி T.V, சூரியன் F.M, B.B.C தமிழோசை, வீரகேசரி, சுடர் ஒளி ஆகியவை இதில் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு செயற்படுகின்றன. இன்று முஸ்லிம்களுக்கு மத்தியில் சகலவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக இவைகள் தோன்றி, வளர்ந்து, ஊடுருவி, வியாபித்திருக்கின்றன.

முஸ்லிம்களுக்குச் சாதகமான செய்திகளை தணிக்கை செய்தும், இருட்டடிப்புச் செய்தும், அவர்களுக்குப் பாதகமான செய்திகளை முழு விளக்கத்துடனும், புள்ளிவிபரத்துடனும் வெளியிடுவது இன்று இவைகள் செய்து வரும் பாசிச வேட்டைகளாகும். ஒடுக்கப்படும் முஸ்லிம்கள் முகம் கொடுக்கும் இன்னல்களை வெகு சமார்த்தியமாக மூடி மறைக்கும் பணியினை இவ்வகையான ஊடகங்கள் செய்து வருகின்றன. அத்தோடு இல்லாத ஒன்றை இருப்பதாக காட்டுவதும், அல்லது அதனை ஊதிப்பெருக்குவதுமான கைங்கரியங்களையும் இவைகள் மேற்கொள்கின்றன. இனவாதம், நிறவாதம், பால்வாதம் என பல்வேறு வடிவங்களில் மேற்கூறிய தமிழ் ஊடகங்கள் தனது பயங்கரவாத செயற்பாடுகளைச் செய்கின்றன. இதனோடு ஒன்றியதுதான் 'முஸ்லிம்களும் அடிப்படையில் தமிழர்களே" என பிரச்சாரம் செய்து வருவது. இந்த ஊடகங்களுக்கு அழுத்தமாகவும் திருத்தமாகவும் சொல்லிக் கொள்கின்றோம். 'முஸ்லிம்கள் எனப்படுவோர் தனித்துவமான ஒரு தேசிய இனம் அவர்களுக்கென்று தனித்துவமிக்க கலாசாரம், பண்பாடு, சமயம், அனுஷ்டான வழி முறைகள், நம்பிக்கைகள்,




கோட்பாடுகள் இருக்கின்றன. எனவே, முஸ்லிம்களை சீண்டியிழுக்கும் இனவாத ஊத்தப்பிரச்சாரத்தில் இனிமேலும் ஈடுபட வேண்டாம். தமிழர்கள், சிங்களவர்கள் எவ்வாறு இந்நாட்டில் தேசிய இனங்களோ அதே போன்றுதான் முஸ்லிம்களும் முஸ்லிம்களை ஒரு குழு என்றோ, கோத்திரம் என்றோ எவராலும் கூற முடியாது என்பதை மிக உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பாக சக்தி F.M. சக்தி T.V. சூரியன் F.M. போன்ற பக்கச்சார்பான தமிழ் ஊடகங்கள் முஸ்லிம் தலைவர்களை சீண்டி விட்டு முஸ்லிம்களுக்கு மத்தியில் பிளவுகளை உண்டு பண்ணும் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கி இருக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கதுதான் ~ மின்னல் ~ எரிமலை இதே போல் தேசிய சேவையில் ஒலிபரப்பப்படும் விடியும் வேளை போன்ற நிகழ்ச்சிகள். மேற்கூறிய நிகழ்ச்சிகளை செய்து வருவோர் அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் குதர்க்கமான கேள்விகளைக் கேட்டு குழப்பி விடுவதில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்கள். நிகழ்ச்சிக்காக முஸ்லிம் தலைவர்களை அழைப்பதும் அவர்களிடம் எவ்வகையான கேள்விகளைக் கேட்டால் தங்களுக்குள் பிணங்கிக் கொள்வார்களோ அவ்வகையான வினாக்களைத் தொடுப்பதும் இவர்களது உத்திகள். இவற்றுள் அகப்பட்டுக் கொள்ளும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமது வண்டவாளங்களை தண்டவாளங்களாக புட்டு புட்டு வைப்பதும் ஒரு சகஜமான காரியமாக மாறிவிட்டிருக்கிறது. இது விடயமாக அத்தலைவர்கள் சிந்திக்க மாட்டார்களா? மாற்று சமூகத்தாருக்கு முன்னால் இரண்டு படித்த அரசியல் தலைவர்கள் மோதிக் கொள்வது ச்சீ... என்ன கேவலம் இது! சக்தி F.M. சக்தி T.V. சூரியன் F.M. போன்ற தமிழ் ஊடகங்கள் செய்தி அறிக்கைகளில் முஸ்லிம்கள் சார்பான செய்திகளை வெளியிடுவது மிக மிக குறைவு. இல்லை என்றே சொல்ல வேண்டும். மாறாக முற்று முழுதாக தமிழர்கள் பற்றிய செய்திகளையே வெளியிட்டு வருகின்றன. இத்தனைக்கும் மத்தியில் சக்தி F.M. சக்தி T.V. சூரியன் F.M. ஆகியவற்றில் அதிகம் தொடர்பு கொண்டுள்ளவர்களும் அவற்றைக் கேட்பவர்களாகவும் பார்ப்பவர்களாகவும் முஸ்லிம்களே இருந்து வருகின்றனர். அதிகமாக விளம்பரம் போன்றவற்றை செய்வதும் இந்த முஸ்லிம்களே. ஆனால் இன்று தனியார் ஊடகங்கள் முஸ்லிம்களைப் புறக்கணித்து இனத்துவ சாயம் பூசி செயற்பட்டு வருவதை இன்றைய முஸ்லிம்கள் அவசியம் புரிந்து கொள்ள வேண்டும்.

சக்தி தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டால் அதில் ஒளிபரப்புச் செய்யப்படும் நாடகங்கள், திரைப்படங்கள், செய்திகள் அனைத்தும் முஸ்லிம்களின் தொழுகை நேரங்களைக் கவனத்தில் கொண்டே செய்யப்படுகின்றன. ஏன் இந்த நிலை? முஸ்லிம்களை திட்டமிட்டு வழிகெடுக்கும் பணிகளை செய்து வரும் ஊடகங்களை முஸ்லிம்கள் இனங்காண வேண்டும். முஸ்லிம்களே! கண்டு பிடிக்க முடியாத விதத்தில் நீங்கள் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். மலசல குழிக்குள் இருந்து பால் சுரக்குதாம் என்று கூறினால் அவற்றை நீங்கள் அருந்துவீர்களா? அதே போல்தான் இந்த சக்தி F.M. சக்தி T.V. ஓரிரு விடயங்களுக்காக 24 மணித்தியாலங்களும் மெய் மறந்து இவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பது முட்டாள் தனமும், மடத்தனமும் நிரம்பிய செயல்களாகும். தயவு செய்து சிந்தியுங்கள் முஸ்லிம்களே! காற்றோடு பாவங்களை கலந்து விட்டு சுவாசிக்கச் சொல்கிறார்கள். உங்களை நோக்கி வரும் காற்றுக்கள் பாவங்களை சுமந்து வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பக்கச்சார்பாக செயற்படும் ஊடகங்களை அடித்து விரட்டுங்கள். அவைகளில் விளம்பரம் செய்வதோ அல்லது நிகழ்ச்சிகள் செய்வதோ தொலைபேசி மூலம் பாடல்கள் கேட்பதோ பாவம் என எண்ணுங்கள். மீறியும் செய்வீர்களானால் உங்கள் சமூகத்தை நீங்கள் படுபாதாளத்தில் தள்ளிவிடுவீர்களாவீர்கள். உங்கள் வாழ்க்கையின் இருப்பும், உரிமையும் சில தமிழ் ஊடகங்களால் கொச்சைப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்படுவது இன்னும் உங்கள் சிந்தனைக்குட்படாவிட்டால் உங்கள் அழிவு வெகு தொலைவில் இல்லை. எச்சரிக்கை!

---

*நூல் :- பாலியலும் பருவ வயதும்*
*மூல நூலாசிரியர் :- அல்லாமா நாஸிர் மகாரிம் ஷீராஸி*
*தமிழில் :- அஷ்ஷேய்க் அப்துல் ஹலீம்*
*வெளியீடு :- இலங்கை அக் கௌஸர் சங்கம், கீல்ஸ் வீட்டுத்திட்டம், எண்டரமுல்லை, வத்தளை*
*பக்கங்கள் :-* **I - VIII + 66**
*விலை :- 100 /=*



ஈரான் நாட்டு அறிஞர் அல்லாமா நாஸிர் மகாரிம் ஷீராஸி என்பவர் பாரசீக மொழி மூலம் எழுதிய 'பாலியலும் பருவ வயதும்" என்னும் இந்நூல் பல பதிப்புக்களைக் கண்டுள்ளன. அதுமட்டுமன்றி இன்று வரை புதிய பதிப்புக்களாக வெளியாகிக் கொண்டு இருப்பதிலிருந்தே இந்நூலின் முக்கியத்துவமும், அதற்கு சமூகத்திலிருக்கும் தாக்கமும், அங்கீகாரமும் புரியத்தக்கது.




தமிழ் பேசும் உலகிற்கு இந்நூலினை அறிமுகஞ் செய்துவைக்கும் வகையில் தமிழ் மொழியில் அஷ்ஷேய்க் அப்துல் ஹலீம் தந்திருக்கும் இந்நூலுக்கு ஜாமிய்யா நழீமிய்யா கலாபீடப் பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷேய்க் ஏ.ஸி. அகார் முகம்மத் அணிந்துரை வழங்கியுள்ளார்.

இளைஞர் சமுதாயத்தினரை சரியான வழியில் புடம் போட்டு வளர்த்தெடுக்கத் தவறினால் அவர்கள் மட்டுமன்றி அவர்கள் சார்ந்திருக்கின்ற சமுதாயமும் நெறிபிறழ்ந்து விடுகின்ற அபாயத்தை எதிர் நோக்கும் எனெனில், பாலியல் உணர்வுகளில் இளைஞர்கள் வெகுவாக உட்படும் நிலை இருப்பதினால் அவற்றில் அவர்களை நெறிப்படுத்துதல் இன்றியமையாதது.

அந்த வகையில் இளைஞர்களின் பாலியல் உணர்வுகளை எவ்வாறு நெறிப்படுத்துவதன் மூலம் கட்டுக்கோப்பான சமுதாயத்திற்கு உரமாக இளைஞர்கள் செயற்படுவார்கள் என்பதற்கு இஸ்லாம் முன் வைக்கும் போதனைகளை இந்நூல் பேசுகின்றது.

இளைஞர்கள் எதிர்கொள்கின்ற பாலியல் பிரச்சினைகள் பலவற்றுக்கு இந்நூல் வகையான வழிகாட்டல்களை முன் வைத்து சரியான சொல் நெறியைச் சொல்லி, ஆற்றுப்படுத்தலில் போதிய பங்காற்றும் உபதேசங்களை இந்நூல் தன்னுள் கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு இளைஞர்களும் அவசியம் படிக்க வேண்டிய ஒரு நூலாகவும், அவர்களுக்கு தக்க முகாந்திரமாகவும் இந்நூல் அமையப் பெற்றிருக்கின்றது. ஆகையால் நமது ஒவ்வொரு இளைஞர்களும் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும். பயன் பெறும் பல அறிவுரைகள் இந்நூலில் பரவிக்காணப்படுகின்றன.

-அபூ பாத்திமா பர்வீன்-

---

# 'அடிமை சாசனம்'
## களைந்தெறியப் புறப்படு தோழா!

அன்புள்ள இஸ்லாமிய சகோதரர்களே! சற்று சிந்தியுங்கள் உங்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து வெளிச்சத்துக்கு வாருங்கள். உங்கள் ஒவ்வொருவருடைய 'அடிமை சாசனமும்" எழுதப்பட்டு ஒப்புதலுக்காக கையளிக்கப்பட்டுள்ளதை அறியவில்லையா? ஏன் இன்னும் சுணக்கம், எதற்காக இந்த தயக்கம் வீரநடை போட்டு வா சகோதரா!

உனது பாதையில் என்னையும் சேர்த்துக் கொள். வீரர்களின் பட்டியலில் என்னையும் பிரஸ்தாபி. ஓர் சமுதாயம் சீரழியப் போவது என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. எமக்கு அவர்கள் கட்டளை போடும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

தோழா! உனக்கு தெரியுமா? இடைக்கால சட்டநகலில் சிங்கள மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவிதமான வரையறைகளும் இல்லை. ஆனால் எல்லா சதிமுயற்சிகளும் நமக்காகத்தான் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஒரு வேளை இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுமானால் 'ஐங்கால தொழுகையை நிறைவேற்றுவதற்கு நீர் அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்" என்ற நிலமை வரப் போகிறது தோழா! நம் சமுதாயத்தில் உள்ள 'அரசியல்வாதிகள் மேடை நடிகர்களே" அவர்களை தூக்கி ஒரு பக்கம் வைத்து விட்டு எழுந்து வா! 'மாணவ சமுதாயமாக" உருவெடுத்து மானசீகமான முறையில் நம்மக்களையும், தேசத்தையும் பாதுகாப்போம்.

இளைஞர்களே! இஸ்லாமியர்களை அடிமையாக்குதல், கப்பம் கோருதல், ஆட்களை கடத்தல், சொத்துக்களைச் சூறையாடுதல் போன்ற அநாகரிகமான செயல்களில் இறங்குவதற்காக அரச அனுமதியைப் பெற துடித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஏன் மதுபோதையில் மயங்கிக் கொள்கிறாய் உனக்குத் தெரியாதா? இதுவரையில் மூதூர், கிண்ணியா, மற்றும் மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனை, ஏறாவூர், வாழைச்சேனை, காத்தான்குடி, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, போன்ற இஸ்லாமியர் வாழ் பிரதேசங்களில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கிற நடைபெறப் போகிற அட்டகாசங்கள் போதாதா?

இவைகள் போதாது என்று வாழையடி வாழையாக முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த கல்முனை, சாய்ந்தமருது மக்கள் குடியேறி என்றும் அவைகள் தமிழ் மக்களுடைய வளவுகள் என்றும் அறிவித்ததை அறியவில்லையா? 'தமிழ் அலை" என்ற பத்திரிகையில் இதைப்பற்றி ஓர் கட்டுரை வெளிவந்து விட்டது. ஒருவேளை இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்படுமானால் எம்மக்களின் திசைகள் வேறாக அமையலாம்.

சற்று சிந்தியுங்கள் 'மாணவ குழாம்" ஒன்றிணைந்தால் ஒரு தேசம் படைக்கலாம். நீங்கள் ஒவ்வொருவரும் நாளைய தலைவர்கள், உனக்குள்ளும் ஓர் ஆத்மா இருப்பதை அறியவில்லையா? உன் சமுதாயத்தின் தலைவிதியை மாற்றப் புறப்படு தோழா? நீர் எழுதினால் உமக்காக பேனா கூட சிரம் தாழ்த்தும், உங்களின் தீர்ப்பை எல்லோரும் ஏற்பார்கள். ஓடிவா தோழா அவதானமாக பகைவர்கள் பதுங்கு குழிகளை அமைத்துள்ளார்கள். நாம் 'அகழி" அமைப்போம் இளைஞர்களே இறுதியாக உம் பார்வையில் 'நீர் எப்படி வாழ்ந்தீர் என்பதல்ல வினா நீர் பிறருக்காக என்ன செய்தீர்? என்பதுதான் நாளைய வினா?"

*சாய்ந்தமருது 'மாணவர் கழகம்'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வணிகமயமானது சமூக ஆரோக்கியமானதல்ல!

*பழைய ஆசிரியர்கள் போல் இப்போதிருக்கின்ற ஆசிரியர்கள்இல்லை என்றொரு பரவலான கருத்து நிலவுகின்றதுஇல்லை மாணர் வர்கள் தான் முன்பு போலில்லை என்ற பிரதிவா தமும் உண்டு. அத்தோடு. தனியார் கல்வி நிறுவனங்கள் **(Tution)**, இன்றைய சமூகத்தின் பண்பாடு இளைஞர்களின் போக்கு போன்றனவும் இன்று விமர்சிக்கப்படுவனவாகும். இது பற்றிய அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள கல்வியூட்டலில் 35 ஆண்டுகால அனுபவம் கொண்ட சிரேஷ்ட ஆசிரியரும். புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் புதல்வருமான ஜனாப் ஷரிபுத்தீன் பாறூக் ஆசிரியர் அவர்களை நேர்கண்டோம்.*

நீண்டகாலமாக ஆசிரியர் சேவைபுரிந்து பரந்த அனுபவங்களை பெற்றுள்ள நீங்கள், உங்கள் அனுபவ முதிர்ச்சியூடாக ஆசிரியர் தொழிலை எவ்வாறு அடையாளப்படுத்துகிறீர்கள்?

ஆசிரியன் என்பதற்கு குற்றம் களைபவன் என்று பொருள். பாடசாலைப் பாடத்தோடு சம்பந்தப்பட்ட விடயங்களை மட்டும் சந்திப்பது மட்டுமன்றி. மாணவரின் பண்பாடு. ஒழுக்கங்களை விருத்தி செய்வதனூடாக அவர்களில் காணப்படும் குறைகளை களைவதே ஆசிரியரின் பணியாகும்.

நாட்டின் நாலா பாகங்களிலும் ஆசிரிய சேவை புரிந்த நீங்கள் அந்தந்த பிரதேசங்களில் இருந்து எவற்றைக் கண்டீர்கள். எவற்றைக் கற்றுக் கொண்டீர்கள்?

எனது முதலாவது நியமனம் மூதூர் மகாவித்தியாலயத்திலிருந்தது. அங்கு இரண்டு வருடமும். கஹட்டகஸ்திலியவில் ஒரு வருடமும். கலாவெவயில் ஐந்து வருடங்களும் வெளியூரில் சேவையாற்றியுள்ளேன். அந்தப் பகுதி மக்களுக்கு. என்னைப்பயன்படுத்தி ஏதாவது கற்றுக்கொள்ள வேண்டுமென்ற கல்வித்தாகம் அதிகமிருந்தது. மாணவரும், பெற்றோரும் ஆசிரியரை நம்பியிருந்தார்கள். நான் அவர்களிடமும் அவர்கள் என்னிடமும் அதிகமாகக் கற்றுக் கொண்டனர்.

இன்றைய சமூக கட்டமைப்பில் சிந்தனை முறைமை, வாழ்வியல் முறைமை, ஒழுக்க முறைமை என்பன கணிச மாக மாறிவிட்டன. அன்றைய சமூக அமைப்பில் ஆசிரியர் களின் உன்னதத்திற்கும் - இன்றைய சமூகத்தில் ஆசிரியருக் குள்ள இடத்திற்குமிடையிலான உங்கள் அனுபவ இடைவெளி என்ன?



இன்று பொதுவாக ஆசிரியர்கள் தங்கள் பணியை செவ்வனே செய்கிறார்களா என்பது சந்தேகத்திற்கிடமாகவுள்ளது. தமது வருவாயைக் கூட்டிக் கொள்வதற்காக வேறுபல தொழிற்து றைகளிலும் ஈடுபடுவதால், "கற்று- கற்பித்தல்" என்ற கோட் பாடு மழுங்கடிக்கப்படுகிறது. மாணவனின் தேவை கூடுதலாக இருக்கும் பட்சத்தில், ஆசிரியரின் அர்ப்பணிப்பு குறைவாக இருக்குமாயின் ஆசிரியர் - மாணவர் உறவில் திருப்தியீனம் நிலவத்தொடங்கிவிடும்.

அது மட்டுமல்ல. அன்று பாடசாலைகளில், தான் ஒரு ஆசிரியன், தன்னை.சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதைத் தான் நிவர்த்திக்க வேண்டும் என்ற மனநிலையும், சாம-பேத-தான-தண்டம் முறையில் மாணவர்களை வழிநடாத்தும் குருகுலக் கல்வி முறையும் காணப்பட்டது. ஆனால். இன்று இந்த அடிப்படைகளில்லை. இதனால் மாணவர்கள் தமது இலக்கை விட்டும் கவனத்தை விலக்கி சிதறடிக்கச் செய்துள்ளனர். இதற்குப் பெற்றோரும் காரணமே.

இன்று தனியார் கல்வி நிறுவனங்கள் **(Tution)** இன் கல்வியூட்டல், கல்வித்துறையிலும், நமது கலாசாரத்திலும் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் பற்றிய உங்கள் விமர்சனப்பார்வை என்ன?

ஒரு வகுப்பறையில் 20-25 மாணவர்களுக்கு மேலதிகமாக வைத்துப் படிப்பித்தல் கஷ்டம் என்பது எனது அனுபவம். ஏனென்றால், வகுப்பில் ஒரு மாணவன் பின்தங்கி நிற்கிறானெனின் அதற்கான காரணம் என்ன? அவனது வீட்டில், வகுப்பறையில் அவனுக்குள்ள அசௌகரியங்களென்ன? என்பதை அறிந்தே கற்பிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஆசிரியர்களுக்குண்டு. முன்னைய ஆசிரியர்கள் அதையே செய்தார்கள். ஆனால், இந்த ரியூசன் நிலையங்களில் ஒரே வகுப்பில் 100-150 பிள்ளைகளை வைத்துக் கொண்டு பாடம் நடாத்தப்படுகிறது. இதனால். மாணவரின் அடைவுமட்டம் மந்தமாக காணப்படும்.

அதேபோன்று. ஆண்களும் பெண்களும் நன்றாக படிக்கின்ற சூழலாக இருப்பதனால். எதிர் பாலாரின் இனக்கவர்ச்சி அடிப்படையிலேயே இவர்கள் வகுப்புக்கு வருகின்றனர். மாணவர்களைப் பொறுத்தவரை இது இயற்கையே! இதற்குக் காரணம் முன்புபோல் - பெற்றோரின் கண்காணிப்பு காணப்படாமையேயாகும். பாலர் வகுப்புக்கு கூட ரியூசன் நடாத்தும் நிலை தோன்றியுள்ளது. காலை முதல் மாலைவரை பிள்ளைகள் ரியூசனுக்குள்ளேயே உழல்வதால், பாடசாலையால் வழங்கப்படும் வேலைகளை வீட்டில் செய்யமுடியாதுள்ளது. பெற்றோர் - பிள்ளையின் வரவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது. இதனால், பிள்ளைகளின் குறைகளை கண்டு பிடித்து நிவர்த்திக்கக்கூடிய சந்தர்ப்பம் பெற்றோருக்கு கிடைப்பதில்லை. எனவே பாடசாலையில் மாணவர்கல்வி முழுமையாக தங்கியிருக்குமாயின் ஆசிரியரும் பொறுப்போடு செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

பாடசாலைகள் தனது பணியை சரியாக மேற்கொள்ளாமையும், தொழிற் சந்தைக்காக பரீட்சையில் போட்டி போட்டு படிக்க வேண்டிய ஒரு யதார்த்தமும் இருப்பதாலே ரியூசன் தோன்றியதாக. உள்ள வாதம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

இது உண்மை! ஆனால், இந்தக்கல்விமுறையின் பின்விளைவுகளை யோசிக்கவேண்டும். தன்சமயத்தை கற்க நேரமில்லாத, பாண்பாடு ஒழுக்கத்தை சீரழிக்கின்ற. உரிய கட்டமைப்பில் கற்பிக்கப்படாத - ரியூசன் கல்வி. ஒரு மாணவனை சிறந்த பிரஜையாக மாற்றுமா என சந்தேகம் தோன்றியுள்ளது. ரியூசன் கற்பிக்கும் ஆசிரியர்களின் உணர்வை நா கொச்சைப்படுத்தவில்லை. வணிக முறைக் கல்வியில் மாணவ உலகம் சீரழிக்கப்படுகிறது என்பதே எனது கருத்தாகும்.

கல்வி வணிகமாக்கப்பட்டது தொடர்பாக அதிருப்தியை வெளிப்படுத்தினீர்கள் இதற்கு வேறு ஏதாவது மாற்றுத்திட்டம் உள்ளதா?

இன்று பிள்ளை ரியூசனுக்கு போனால்தான் அதிகமாக படித்து சித்தியடைவான் என பெற்றோர்கள் நினைக்கின்றார்கள் இது ஒரு புரையோடிய புண்ணாகத்தான் இருக்கிறது. ஒரு பிள்ளையினுடைய 'விவேக ஈவு' 30-80/90 வரையானதாகும். இந்தவகையில் பிள்ளை எங்கு, எப்படிப்படித்தாலும் விவேக ஈவு மட்டத்திலேயே கல்வித்திறன் பெறுவர். இதற்காகவே, கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் கல்வியமைச்சராக இருந்தபொழுது தனியார் கல்வி நிறுவகங்களைத் தடைசெய்தார். இப்படியான கல்வி வியாபார முறையை மாற்றியமைக்க வேண்டு மெனின், கல்வியின் நோக்கம் காசு உழைப்பதல்ல. மாணவர்களை வழிப் படுத்துவதே என்பதை புரிந்து கொண்டு, பெற்றோரும், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும் கலந்தாலோசித்து இதற்கான மாற்று நடவடிக்கையை தீர்மானிக்கவேண்டும்.

பாடசாலைகள் கல்வியை போதுமானளவு வழங்கினால், ரியூசனின் தேவை ஏற்படாது என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

உயர்தரத்தைப் பொறுத்தமட்டில் அது பரந்த கல்வித்திட்டமாகவும், காலம் போதாமலும் இருப்பதால் பிரத்தியேக வகுப்புகளும் அவர்களுக்குத் தேவைப்படும். ஆனால், ஆசிரியர்களுக்கு பாடசாலையில் வழங்கப்படும் பாடத்திட்டத்திலிருந்தே வினாப்பத்திரங்கள் தொடுக்கப்படுகின்றன. அதனை கற்று. மாணவருக்கு கற்பிக்கின்றபோது இந்த தேவையைப் பூர்த்தி செய்யலாம். ஆனால். ரியூசன் வந்த பிறகு அவர்களும் சோடைபோனதாக தெரிகிறது. இதற்கு ஆசிரியர்கள் மட்டும் காரணமில்லை. காசு கொடுத்துக் கற்கும் கல்வியில் பிள்ளைகள் நம்பிக்கை வைத்துள்ளமையும், பெற்றோரின் அறியாமையும் கூட காரணமாகின்றன. எனவே இதற்கு ஆசிரியர் + மாணவர் - பெற்றோர் முத்தரப்பு உறவு அவசியமாகிறது.

இன்று பாடசாலைகள் துறைசார் நிபுணர்களை மட்டுமே உருவாக்குகின்றன. பரந்த அறிவுள்ள பிரஜைகளை உருவாக்குவதில் தேக்கம் காணப்படுகிறது. ஏன் இந்த நிலமை காணப்படுகிறது?

ஒவ்வொரு மனிதனும் வேறுபட்டதிறன்களை கொண்டவனாக படைக்கப்பட்டுள்ளான். இந்த நிலையில் பெற்றோர். மாணவர்களின் எதிர்பார்ப்பு டாக்டராக. வக்கீலாக, பொறியியலாளராக வருவதாகக் காணப்படுகிறதே தவிர. தங்களிடமுள்ள ஆற்றல்களுக்கேற்ற துறைகளை பிள்ளை களோ, பெற்றோரோ தெரிவு செய்வதில்லை. பிள்ளைகள் முடியாதென்றாலும் சில பெற்றோர் 'இதைத்தான் படி' என திணிக்கிறார்கள். மாணவரில் இனங்காணப்பட்ட திறனை வெளிக்கொணர பாடசாலை நேரம் போதாதுள்ளது. ஆசிரியருக்கோ - பிரத்தியேக நேரங்களை ஒதுக்க, பொருளாதாரம் விடுவதில்லை. அதிஷ்டமாக ஒரு சில ஆசிரியர்கள் கூட தொழில் நுட்பங்களை விரும்பி சொல்லிக் கொடுக்க முனையும் போது மாணவர்கள் அதனை உதாசீனம் செய்கின்றனர்.

இன்றைய சமூகநிலையில் பெண்களுடைய கல்வி இருப்பு எப்படி இருக்கிறது?

பெண்களுக்கும் உயர்கல்வி கட்டாயமானது. பெண்கள் கற்கவேண்டும் மென்ற உணர்வை அன்று அறிஞர்கள் முன்மொழிந்தார்கள். இன்றைய நிலையில் ஆண்களை விட பெண்கள் கற்றலில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். மனிதனின் ஆரம்பமும் ஒரு பெண்ணிடமிருந்தே தொடங்குகின்றன. எனவே கல்வியில் பெண்கள் உன்னதமான நிலையில் இருந்தால் குடும்ப வாழ்வில் முன்னேற்றங்கள் ஏற்படும். இதனை இன்றையப் பெண்கள் உணர்ந்துள்ளனர்.

பல்துறைத்திறமை கொண்ட வித்தகராக நீங்கள் திகழுகிறீர்கள். இந்த ஆளுமை உங்களுக்கு எப்படி வாய்க்கப் பெற்றது?

ஆசிரியராக, சமூகவியலாளராக. இலக்கியவாதியாக இருந்த எனது தந்தையினால் எனக்கு அன்பளிக்கப்பட்டதாகவே காண்கிறேன். பாடசாலை நேரம் தவிர பிற நேரங்களில், அநேக விடயங்களை, பரந்த வாழ்வை அறியும் விடயங்களை படிக்கத்தூண்டுவார். தம் பிள்ளைகள் எவரும் சமூகத்திற்கு உதவாதவர்களாக இருக்கக்கூடாது என்ற நோக்கில், இந்த வழியிலேயே எமது குடும்பத்தையும் நடாத்தினார். இது கற்பித்தல் காலங்களில் மாணவர்களின் திறமையை வெளிக்கொணர எனக்கு உதவியாக இருந்தது.

ஆசிரியர் தொழிலைவிட, வேறு ஏதாவது தொழிலை தெரிவு செய்திருக்கலாம் என்று எப்போதாவது நீங்கள் நினைத்ததுண்டா?

மாணவர்களுடனான இத்தொழிலில் இருக்கும் ஆத்ம திருப்தி காரணமாக அவ்வாறு நான் ஒருபோதும் நினைக்கவில்லை. இதனாலேதான், நான் பதவியுயர்வுகளையும் தட்டிக் கழித்து வந்திருக்கின்றேன். இறுதிவரை ஆசிரியனாகவே பணியாற்ற விரும்புகிறேன். ■

சந்திப்பு : அக்கறைப்பற்றுச் செய்தியாளர்.

## மானா மக்கீன் தருவது



### குரங்காவீர்கள்!

அன்பும் பொறுமையும் உங்கள் முகத்தை அழகு படுத்துகின்றன. கோபமோ முகத்தைக் குரங்காக்கி விடுகிறது! - யாரோ யாருக்கோ சொன்னது!

### செவ்வாய்க் கிரகம்

கடந்த ஆகஸ்ட் 27இல் செவ்வாய்க்கிரக ம் பூமிக்கு மிக அரு கில் வந்தது. அருகில் என்றால் ஆயிரம், இரண்டாயிரம் கி. மீட்டர் தூரமல்ல 55.76 மில்லியன் தூரம் (இடைவெளி) இதற்கு முன் இப்படி நிகழ்ந்தது 53.000 ஆண்டுகளுக்கு முன்பாம்.

## புது தாத்தே, மட கஹன்ன எபா

இப்படியொரு அவலமான குரல் தென்பகுதி வீடொன்றில் ஒரு நாள், ஒரு நேரத்தில் கேட்டது.

ஆனால் சிங்களவர் வீட்டில் அல்ல. முஸ்லிம் இல்லம். ஓலமிட்டது ஈமான் கொண்டவரது மகன்.

புது தாத்தே மட கஹன்ன எபா'அவன் ஏதோ தவறு செய்ய தந்தை பிரம்பினால் விளாசித் தள்ள அவன் 'புது தாத்தே மட கஹன்ன எபா' - என்று கத்தினான்.

புது தாத்தே மட கஹன்ன எபா"வாப்பா, வாப்பா, என்னை அடிக்காதீங்க வாப்பா! அல்லா ரசூலுக்காக என்னை அடிக்காதீங்க! - என அவனால் சொல்ல முடியவில்லை! தெரியவில்லை!

புது தாத்தே மட கஹன்ன எபா'ஏன்? ஏன்? அங்கேதான் இருக்குது விஷயம்!

புது தாத்தே மட கஹன்ன எபா'அந்தச் சிறுவன் கற்றுக் கொண்டிருந்தது சிங்களப் பாடசாலையில்! அந்த மொழி மட்டுமே அவன் அறிவான்! தமிழ் வளமில்லை.

புது தாத்தே மட கஹன்ன எபா"புத்து வாப்பா என்னை அடிக்காதே" என்று தான் கௌதமப் புத்தரை தந்தையோடு இணைத்து கெஞ்ச முடிந்தது!

புது தாத்தே மட கஹன்ன எபா'பள்ளிமுல்லை பாணந்துறையிலிருந்து ஏ. எல். எம். அஸ்வர் அவர்களால் வெளியிடப்படும் 'அஹதியா" சஞ்சிகையில், 'பைரம்தூன' கேள்வி பதில் பகுதியில் அந்நிய மொழிப் பாடசாலைகளில் முஸ்லிம் பிள்ளைகள் கற்பதனால் எமது கலாசாரத்திற்குப் பாதிப்புக்கள் உண்டா? எனக் கேட்கப்பட்ட வினாவுக்குப் பதிலாகக் கிடைத்த தகவல் தயவு செய்து சாதாரணமாகச் சிந்திக்காதீர்கள். பயங்கரமாகச் சிந்தியுங்கள்.

## இவரை அடையாளம் தெரிகிறதா?



படத்தில் காணப்படும் இந்திய - பாகிஸ்தான் இலக்கியப் பிரமுகரை அடையாளம் கண்டு அஞ்சலட்டையில் தெரிவியுங்கள் 'சிறுவர் பாலியல் கொடுமைகள்" நூல் அன்பளிப்பு கிடைக்கும் அனுப்ப வேண்டிய முகவரி 'முஸ்லிம் குரல்' 181/1 மாளிகாகந்த வீதி, (வைற் பார்க்) கொழும்பு 10.

(உதவிக்கு ஒரு சிறு குறிப்பு இவரது பெயரில் ஒரு பிரபலமான கவிஞர் எம் மத்தியில் உள்ளார்.)

### மஞ்சள் மகத்துவம்

பல உண்டு அதில் ஒன்று இது. மஞ்சள் தூளை நீரில் அல்லது பாலில் கரைத்து அருந்த வயிற்று வலி, நீர் சுருக்கி, இருமல் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடம்பர இப்தார் நிகழ்வுகளும் சிந்திக்க வேண்டிய கருத்துக்களும்

தற்காலத்தில் ஆடம்பரமாக நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வுகள், ஒரு வைபவமாக - ஒரு விழா மாதிரி இடம்பெறும் சந்தர்ப்பங்கள் சுமார் பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்பெல்லாம் எந்தத் தனிமனிதனாலும், ஸ்தாபனத்தாலும், ஜமாத்தாலும் நடத்தப்பட்டதில்லை. ஆனால், ரமழான் நோன்பு வந்த காலத்திலிருந்து, நாட்டிலுள்ள எல்லா இறை இல்லங்களிலும் மஃரிப் தொழுகைக்கு வரும் சன்மார்க்க சகோதரர்கள் எல்லோருக்கும் நோன்பு திறக்க பேரீத்தம் பழங்களும், கஞ்சும் வழங்கப்பட்டு வரும் பழக்கம் ஒரு நீண்ட காலத்திய பாரம் பரியமாக இம்மண்ணில் வேரூன்றியிருக்கிறது என்பதை முல்லா சொல்லித்தான் ஆக வேண்டும்.

இப்போது ரமழான் வந்து விட்டால், இப்தார் நிகழ்வுகள் பரவலாக நடைபெறுகின்றன. விரல்விட்டு எண்ணிவிடத்தக்க ஓரிரு நிலையங்கள் மட்டும் நீண்டகாலமாக எவ்வித ஆடம்பரமுமின்றி சிறப்பாகவும், சிக்கனமாகவும் இப்தார் நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

மற்றப்படி, நாளுக்கு நாள் இப்தார் நிகழ்வுகள் வெகு விமரிசையாக நடத்தும் வழக்கம், வரவரப் பல்கிப் பெருகி வருகிறது. இவ்வருடம் நம்மிடையே இடம்பெற்ற இப்தார் நிகழ்வுகளை சற்றே எடைபோட்டால், முன்னைய வருடங்களைவிட, புதிய புதிய நிறுவனங்கள், அமைப்புக்கள், தனிமனிதர்களும் இப்தார் நிகழ்வுகளை நடத்தியுள்ளனர்.

கொழும்பு மாநகர சபை இவ்வருடம் முதன்முறையாக இப்தார் ஏற்பாடு செய்துள்ளது. சில முஸ்லிம் அமைச்சர்கள் முதல் பிரதமர் வரை அரசியலோடு ஒன்று கலந்தவர்கள் பலர், இப்தார் நிகழ்ச்சிகளை இவ்வருடம் நடத்தியுள்ளனர். அமெரிக்க வெள்ளை மாளிகையிலும், பக்கத்திலுள்ள பாரத தேசத்தின் அரசியல் தலைவர்கள்கூட, இப்தார் நிகழ்வுகளை நடத்தியிருக்கின்றனர்.

அரசியல் துறையிலுள்ள பிற சமயத்தைச் சார்ந்த அரசியல் தலைவர்கள், இப்படி இப்தார் வைபவங்களை ஒழுங்கு செய்து நடத்துவதற்கு முஸ்லிம் சமுதாயத்தின் மீதுள்ள அபிமானத்தை வெளிக்காட்டி அரசியல் லாபம் பெறுவதே காரணமாகும் என விஷயம் தெரிந்தவர்கள் பேசிக் கொள்கின்றனர். நம் நாட்டிலுள்ள முஸ்லிம் நாட்டுத் தூதுவராலயங்களும் இப்தார் நிழ்வுகளை நடத்தியுள்ளன.

இவற்றை எல்லாம் பற்றி சிந்திக்கும்போது, முல்லாவிற்கு இந்த இப்தார் நிழ்வுகள் குறித்து சமூகம் சிந்தித்தாக வேண்டிய சில கருத்துக்களை கூற வேண்டியது ஒரு சமுதாயக் கடமையாகப்படுகிறது.

சன்மார்க்க நெஞ்சங்களே, அரசியலோடு சம்பந்தப்பட்ட தலைவர்கள், அமைச்சர்கள், பிரமுகர்கள் இந்த இப்தார் நிழ்வுகளை ஏற்பாடு செய்யும்போது, தங்களது தகுதியையும், அந்தஸ்தையும் காட்ட -பேண வேண்டிய அவசியம் உருவாவதை முல்லா உணரவே செய்கின்றேன். சில சமய அமைப்புக்கள் மண்டபங்களை பதிவு செய்து பெரிய அளவில செய்கின்றன. சில சமூக நல அமைப்புக்கள் மூன்று நட்சத்திர, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் நடத்துகின்றன. சில ஹாஜியார்கள் தத்தம் தொழில் நிலையங்களில் அல்லது வீடுகளில் ஆடம்பரமாக நடத்தி மகிழ்கின்றனர்.

"ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்க வழி செய்வதை" வள்ளல் நபி (ஸல்) அவர்கள் வாழ்த்தி வரவேற்றுள்ளார்கள். சாப்பிட வழியில்லாத ஏழை பாழைகளுக்கு உணவளிப்பதை, தருமம் செய்வதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. எல்லா மட்டத்திலும், சூழலிலும் இஸ்லாம் ஆடம்பரத்தை வெறுத்து ஒதுக்குகின்றது. வீண் விரயம் செய்ய வேண்டாம் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும்.

மேற்கண்ட அறவொழுக்கங்கள் நம்மிடையே நடத்தப்பட்டுவரும் இப்தார் நிகழ்வுகளில் பேணப்படுகின்றனவா? இப்படி ஒரு வினாவை எழுப்பினால், திருப்தியான பதிலாக, "ஆம்... பேணப்படுகின்றது" எனக் கூறமுடியவில்லை. அனேக இப்தார்களில் (ஓரிரு நிகழ்வுகள் விதிவிலக்கானவை) ஆடம்பரம், வீண்விரயம் கொடிகட்டிப் பறக்கின்றன என முல்லா கூறினால், நெஞ்சாற சிந்திப்போர் மறுக்கப்போவதில்லை.

நம் சமூகத்தை கூட்டுமொத்தமாக எடைபோட்டால், நம் முஸ்லிம் சமூகம் ஒரு பணக்கார சமூகமல்ல. ஏழைகள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோர், அகதிகளாகத் தம் எதிர்காலத்தைத் தொலைத்துவிட்டு தொல்லையின் எல்லையில் தொடர்கதையின் நாயக நாயகியராக வாழ்வோர் நிரம்பிய ஒரு சமூகமேயாகும். பணக்கார வட்டம் நம் சமூகத்தில் 4 அல்லது 5 சதவீதமே இருக்கும். மற்றுமுள்ள 95 சதவீத முஸ்லிம்கள் ஏழைகள், அகதிகள், அன்றாடங்காய்ச்சிகளே!

ஆனால், நம் சமூகத்தின் இந்த யதார்த்த நிலையை புள்ளிவிபரங்கள் பூடகமாக என்னதான் புரியவைத்தாலும், பிற இனத்து சகோதரர்களின் பார்வை வேறு விதமாக இருப்பதை ஆழ்ந்து நோக்கினால் புரிந்து கொள்ள முடியும். இப்படி நம்மை பேரினவாத சமூகத்தினர் சரிவான பார்வையுடன் பார்ப்பதற்கு என்ன காரணம்? என்ற கேள்வி நம் சிந்தனைக்குரியது.

நம் சமூகம் பொதுவாகவே "ஜிகினா தர்பாருக்கு" விருப்பமானது இந்த மனநிலையில் 5 சதவீதமாகவுள்ள பணக்காரர்களும், மத்திய கிழக்கு நாடுகளுக்குப்போய் கைநிறைய சம்பாதித்து வந்தவர்களும் போடுகின்ற ஆடம்பர தர்பார் ஆட்டம். 'ஏதோ முஸ்லிம்கள் செல்வச் செழிப்பில்தான் வாழ்கின்றனர்' என்ற தப்பான அபிப்பிராயத்தை பிற இனத்தார் நடுவே ஏற்படுத்தி விட்டிருக்கின்றது. இந்த "எண்ணத்திற்கு" எடுத்துக்காட்டாக எத்தனையோ உதாரணங்களை முல்லாவினால் தொட்டுக்காட்ட முடியும். கொழும்பிலிருந்து கண்டி நோக்கிப் போய்ப் பாருங்கள். முஸ்லிம்களின் ஆடம்பர கல்யாணம் திஹாரியில், மாவனெல்லையில், க்ண்டியில் நடந்தால், கார்களின் வரிசையைக் கொண்டே உணரமுடியும்!

இப்படி நம்மில் சிலர் இஸ்லாம் விரும்பாத வழிகளில் நடப்பதால், பிறரிடையே சரிவான பார்வை ஏற்பட்டு, இச்சிலரைக் கொண்டு முழு மொத்த சமுதாயத்தின்மீதும் பிற இனத்தாருக்கு பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடு அவ்வப்போது வெளியாகி வருவதை காண்கிறோம்.

இத்தகைய ஒரு காலப்பிரிவில்தான், நம்மவர் நடாத்தும் ஆடம்பர இப்தார் நிகழ்வுகள், நம் சன்மார்க்க இதயங்களை சிந்திக்க வைக்க வேண்டும் என்று முல்லா விரும்புகிறேன். நம்மவர் நடத்தும் மேற்படி ஆடம்பர இப்தார் நிகழ்வுகளில், இப்போதெல்லாம் பதவிவழியாக பிற மதப் பிரமுகர்களும் பங்கேற்று சிறப்பித்து வருவதை நாம் அவதானிக்கவே செய்கிறோம். கொழும்பு மாநகர சபை நடத்திய இப்தார் நிகழ்ச்




சிக்கு வருகை தந்தோரை, மேயராகிய பிரசன்ன குணவர்தன அவர்களே தலைவாசலில் நின்று வரவேற்றார் என்பது நம் கவனிப்புக்குரியது.

பொதுப்படையாக நோக்குமிடத்து, இப்படி பிற இனப் பிரமுகர்களும் சிறப்பதிதிகளாகப் பங்கேற்கும் விதமாக இப்தார் வைபவங்களை ஒழுங்கு செய்வது, இனங்களிடையே புரிந்துணர்வு தேவைப்படும் இக்காலகட்டத்தில் நல்லது என்றே சொல்ல வேண்டும். ஆனால், ஆடம்பரம் கலந்திருப்பதுதான் மனங்களை சற்றே சிணுங்கச் செய்கிறது. "முஸ்லிம் சமூகத்திற்கு வறுமை இல்லை" என்ற மன நிலையை ஆடம்பர இப்தார்கள் ஏற்படுத்தி விடாமல் இருக்க வேண்டும் என்பதுவே சமுதாயப் பற்றுறுதி மிக்க இதயங்களின் கவலை.

இவ்வருடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளனம், கொட்டாஞ்சேனை முஸ்லிம் வித்தியாலயத்தில் நடத்திய இப்தாரில், ஆசிரியர் எம். ஸப்வான் எழுதிய "விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும்" என்ற அறிவியல் நூலை வெளியிட்டதும், ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமி ரண்முத்து ஹோட்டலில் நடத்திய இப்தாரில், அல்குர்ஆனின் சில பகுதிகளை சிங்கள மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டதும், பிரதமர் 17.11.2003இல் அலரி மாளிகையில் நடத்திய இப்தாரில் பிரஸ்தாப சிங்கள மொழி குர்ஆன் மொழிபெயர்ப்பு தொகுதியை ஜமாஅத்தே இஸ்லாமி முன்னாள் தலைவர் மௌலவி ஏ.எல்.எம். இப்ராஹிம் பிரதமருக்கு கையளித்ததும் நல்ல முன்மாதிரிகள் என்று முல்லா பாராட்டினால், யாரே எதிர்க்கவல்லார்? இப்தாரில் நல்லன நாமும் செய்வோமாக!

---

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

17 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

## அத்தியாயம் -8



காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. திகதிகள் திரும்பி பார்ப்பதுமில்லை. முத்துமுகம்மது தலைவரே கதியென்று அவரது வீட்டிலேயே ஒதுக்குப் புற அரையிற் குடியேறி ஆறேழு மாதங்களாகி விட்டன. முத்துமுகம்மது இன்ன வேலை என்றில்லை. எல்லாம் செய்தான்.

தலைவரின் வாகனம் கழுவினான். செடிகளுக்கு நீரூற்றினான். வாசல் பெருக்கினான்.... கடைகளுக்குப் போய் வந்தான்... அடிக்கடி பக்கத்து வீதியிலுள்ள உபதபால் கந்தோரிலிருந்து பள்ளிமுனைக்கு நெய்னாருடன் மட்டும் தொலைபேசியில் பேசி வந்தான். மைமுனா இல்லாத பள்ளிமுனையை அவன் விரும்பவில்லை. பள்ளிமுனையின் 'வெத்திலைக்காரன் தோட்டம்" கூட நினைவில் வரவில்லை. மைமுனாவின் கூரான மூக்கும் அப்பாவி உருண்டை விழிகளும் சுரீர்... சுரீரென்று நெஞ்சில் அடிக்கடி தைத்தது. வலித்தது.

சப்புச் சுல்தான் மாமியை தந்திரமாக ஏமாற்றி, மைமுனாவுக்கு முட உதுமான் மாமாட பெண்சாதிக்கு செய்த துரோகம் போல... ச்சே... மைமுனா இலேசாக ஏமாறுகிற ஆளில்லை.... ஆனால் பலவந்தமாக... சுல்தான் மீதான வெஞ்சினம் ஒரு நீறு பூசிய நெருப்பல்ல... ஒரு பூகம்பமாக உள்ளே கனிந்து கொண்டிருந்தது.

இப்படிச் சில வேப்பங்காய் நினைவுகள் தவிர வேறு ஒரு சிறிய தொல்லை கூட முத்துமுகம்மதுக்கு இருக்கவில்லை. கொஞ்ச நாட்களின் பின் முத்துமுகமது வேலை உயர்வு கிடைத்தது. இணைப்பதிகாரி ஹுஸைன் பாறுக் கட்டளையிடும் காரியங்களை செய்வதே அது! அதாவது தலைவரின் படிப்பறையை சீராக வைத்திருத்தல்.... காகிதாதிகள் பத்திரிகைகள் அடுக்கி வைத்தல்... இணைப்பதிகாரியின் கட்டளைப்படி 'வருகை தருவோருக்கு குர்தா ஆடை அணிந்து குளிர்பானம் தந்துபசரித்தல்...."

அதன் பின், இன்னும் ஒருபடி 'வேளை உயர்வு" கிடைத்தது. அதாவது தலைவரின் வாகனத்தில் தலைவருடனேயே போக்குவரத்துச் செய்தல், தலைவரின் தேவைகள் அடங்கிய பெட்டி ஒன்றை பத்திரமாக வைத்துக் கொள்ளல்... வாகனத்தின் ஒரு மூலையில் இருத்தல்... தலைவரை உணர்வு பூர்வமாக பாதுகாத்தல்....

இப்படி முத்துமுகம்மது தலைவருக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் தெரிந்தும் தெரியாத நிழல்முகமாயிருந்தான். தலைவர் அவன் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். அவன் அவர் மீது உயிராகவே இருந்தான்.

கட்சி உயர்பீடத்தினரிடையே முத்துமுகம்மதை 'பெட்டி தூக்கி" என்றால் இலேசாக விளங்கும். மூத்த துணைவர், கொ.ப.செ, மாவட்ட தேசிய அமைப்பாளர் வட்டம்.... எல்லோரும் முத்துமுகம்மதை தனிமையில் கண்டால், 'செலாமலைக்கோம் பொட்டிதூக்கி!" என்பார்கள். அதுபற்றி ஒரு போதும் அவன் அலட்டிக் கொண்டதில்லை. என்றாலும் அந்த 'பொட்டிதூக்கியை" அவர்கள் மரியாதையாக விழிகள் உயர்த்தி

ஆச்சரியமாகப் பார்க்க வைத்த அந்த ஒரு சம்பவம் மட்டும் நடந்திராவிட்டால், முத்துமுகம்மதின் வாழ்க்கையே திசைமாறியிருக்கும்.

அந்த அதிரடிச் சம்பவத்தை அன்றைய செய்தி ஊடகங்கள் அலறிப் புடைத்துக் கொண்டு ஒலி ஒளிபரப்பின... தொலைபேசிகள் அலறின... வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உலகெங்கும் வையக விரிவு வலையை விரித்தனர். தென்கிழக்கு ஒருகணம் அதிர்ந்து போனது. பள்ளிமுனைக் கிராமம் பதட்டத்தின் உச்சத்தில் பரிதவித்தது. பெரும் அமளிதுளிப்பட்டது. அரசியல் வட்டாரங்கள் அலறி ஓடித் திரிந்தன...

*இஸ்லாமியக் கட்சித் தலைவரின் வாகனம் மீது கிரனைட் வீச்சு!*

*தலைவர் மயிரிழையில் உயிர்தப்பினார்!*

பிரத்தியேகச் செயலாளர் முத்துமுகம்மது படுகாயம்!!

சாரதியும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் பலி!!!

(கொழும்பு வலய, மத்தி, மருதான நிருபர்கள்)

இச்சம்பவத்தைப் பற்றி நமது நிருபர்கள் அறிவிப்பதாவது :

இலங்கை இஸ்லாமியக் கட்சித் தலைவரும், திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.எம்.இஸ்ஹாக் சென்ற வாகனம் மீது மருதானை பஸ்வெனி ஹந்திமாவத்தையில் வைத்து பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட கிரைனைட் தாக்குதலில், வாகன சாரதி ஜனாப் ஏஸீயெம். அன்வர் (28), பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு.தமறாட சில்வா (33) ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். வாகனத்திலிருந்த, தலைவரின் பிரத்தியேகச் செயலாளரான ஜனாப், எம்.முத்துமுகம்மது (24) தலைவரைக் காப்பாற்றும் முயற்சியில் படுகாயமடைந்து உயிராபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தெய்வாதீனமாக தலைவருக்கு எதுவித காயங்களுமின்றி உயிர்தப்பினார். இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது.... மேலும் தெரிய வேண்டிய அவசியமே இருக்கவில்லை உண்மைகளும், வதந்திகளும் கலந்து பரவிய வேகத்தில்

(இன்னும் வரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாறு

**எழுதுவது: லைலா அஷ்ராவி**

## எம் இருப்பைச் சுற்றி......

பெருநாள் தினம். எல்லா இடங்களிலும் இருக்கிற எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டிய நாள். ஆனால் அப்படி சில இடங்களில் இல்லை என்பது துயரம் தருகிறது. அந்தச் சில இடங்களில் மீண்டும் திருகோணமலை மாவட்டத்து ஊர்களாய் இருப்பது அதிக துயரம் தருகிறது.

23ஆம் திகதி இரவும். 24ஆம் திகதி அதிகாலையும் கிண்ணியாவில் இடம்பெற்ற இரு சம்பவங்களில் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்துமுள்ளனர். கடந்த ஒக்டோபரில் கிண்ணியாவில் ஏற்பட்ட தமிழ்-முஸ்லிம் முரண்பாடுகளின்போது தமிழர்கள் தரப்பால் விடுக்கப்பட்ட "உங்கள் பெருநாளைக் கொண்டாட விட மாட்டோம்" என்ற எச்சரிக்கை உண்மையாகியிருக்கிறது என்ற உணர்வு இப்போது ஏற்பட்டிருக்கிறது. இதே எச்சரிக்கை தந்த பயவுணர்வு மூதூர் மக்களிடமிருந்ததையும் பலர் மூலம் அறிய முடிந்தது. பெருநாளைக்கு முந்திய மிக 'பிஸி'யான வியாபார நாட்களில் ஒன்றில். புலிகள் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தைச் சார்ந்த ஒருவர் அதிக எண்ணிக்கையான தொப்பிகளை (நாமணிகிற) வாங்கியதாக பரவலான கதை அடிபட்டதாக அங்கேயே நண்பர் ஒருவர் தெரிவித்தார். ஆனால். இதை எழுதிக் கொண்டிருக்கும் இன்றைய பெருநாள் தினத்து 12 மணிவரை மூதூரிலிருந்து எந்த நிகழ்வுகளும் பதியப்படவில்லை. இது ஆறுதலானது. ஆனால் இப்பிரதேசத்து மக்களது மனங்களில் ஆழப்பதிந்திருக்கும் இருப்புப் பற்றிய அச்சம் தேசிய. சர்வதேசிய கவனத்திற்குரியது. கூடவே. சீக்கிரமாய்க் களையப்படவேண்டியது.

கீழுள்ள கவிதை. விடுதலைப்புலிகளின் 'வெளிச்சம்' சஞ்சிகை யில் பிரசுரமாகியிருக்கிறது. 'யுகசேனன்' என்பவர் எழுதியிருக்கிறார். இரு சமூகங்களின் இருப்புப் பற்றியதா. இயக்கங்களின் பிளவுகள் பற்றியதா இக்கவிதை என்பதை புரிய முடியாமலிருக்கிறது. ஆனால். ஒரு கட்டத்தில் நாமே பேசியிருக்க வேண்டிய விடயமாக இது இருக்கிறது. வாசித்துப் பாருங்களேன்.....

**வெருமையில் படரும் வெளி**

*ஒரு வீட்டுக்குள்தான்*
*வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.*
*எனினும்*
*நான் உனது சுயங்களில்*
*முள் விதைப்பதாயும்*
*நீ எனது சுயங்களில்*
*முள் விதைப்பதாயும்*
*நினைத்துக் கொண்டிருக்கிறோம்.*
*எதிர் வீட்டில் வசிப்பவனோ*
*நாம் நம்மை அழிப்பதாக*
*தனது உதடுகளுக்குள்*
*புதையுண்டு போயிருந்த*
*புன்னகையை*
*பூக்கத் தொடங்கியிருக்கின்றான்.*
*நாமற்ற*
*நமது வீட்டுக்குள் நுழைவதற்கு*

▪ ▪ ▪

சமாதான முன்னெடுப்பு. முயற்சிகளில் ஏதாவது பின்னடைவுகள். முறிவுகள் ஏற்பட்டால் அவற்றை முஸ்லிம் தரப்பின் மீது போடுவது ஒரு வாடிக்கையான அரசியல் நிகழ்வு. தற்போதைய முன்னெடுப்புக்களிலும் முஸ்லிம்களால் முறிவு ஏற்படும் அளவுக்கு. அவர்கள் மேல் பழிபோடும் அளவுக்கு நிகழ்வுகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் உருவாக்கி வந்தனர். வருகின்றனர். சடுதியாக சந்திரிக்கா எடுத்த அதிரடி நடவடிக்கை 'இடைக்கால ஆறுதல்' போல் தென்பட்டாலும்' இது எம் இருப்பு. பாதுகாப்பு தொடர்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதுதான் யதார்த்தம். பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கைகளுக்குப் போன பின்னரும் முஸ்லிம்களின் பாதுகாப்பு உத்தரவாதமானதாயில்லை. முன்பு. அரச பங்காளி முஸ்லிம். எம்பிக்கள் ரணிலிடம் கொடுத்த அழுத்தம் (முஸ்லிம்களின் அழுத்தத்தின் காரணமாகவே இவர்களும் அழுத்தம் தெரிவித்தார்கள் என்பதை மறந்து விடக்கூடாது) இப்போது இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வுப் போக்கில். கீழ்வரும் இரு தமிழ் எம்பிக்களின் இந்த வாக்குமூலங்கள் ஒரு வரலாற்றுப் பதிவிற்காய்...

*"சமாதானம் சிதைக்கப்பட்டால் அதற்கு ஜனாதிபதியே பொறுப்பு" - எம்பி சந்திரநேரு - சுடரொளி 18-11-2003*

*"சமாதான முன்னெடுப்பைக் குழப்ப முஸ்லிம்களைப் பகடைக்காய்களாக்க முயற்சிக்கும் ஜனாதிபதி" -எம்பி சம்பந்தன் - தினக்குரல் 19-11-2003*

மீண்டும். திருமலை மாவட்டத்திலிருந்து எம் இருப்போடும். பாதுகாப்போடும் சம்பந்தப்பட்ட பதிவு ஒன்று.

பெருநாள் தின இரவில் திருமலை. மசூதி வீதியில் முஸ்லிம் இளைஞர்கள் மீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. ஆறுபேர்வரை காயங்களுக்குள்ளாகியுள்ளனர். சந்தேகத்திற்கிடமான முறையில் ஒரு வாலிபர் 'ஜக்கற்' அணிந்த நிலையில் பள்ளிவாசல் வளவில் ஒளிந்திருந்து ஓடியதையும் ஒருவர் கண்டுள்ளார். இது. பள்ளிவாசலை இலக்காக்கிய தாக்குதல் முயற்சியா என்பது பயமாகவும். கேள்வியாகவும் எழுந்துள்ளது.

எம் அரசியல்வாதிகளே.... மீண்டும் உங்களைத்தான் கேட்கின்றோம்...... எம் பாதுகாப்பான இருப்புக்கு ஏதாவது செய்யுங்கள்!

▪ ▪ ▪

நாம் பேசியாக வேண்டிய இன்னொரு விடயமும் எம் இருப்பு. பாதுகாப்பு சம்பந்தப்பட்டு இருக்கிறது. அது. மகா தவறுகளையும். ஏன் பாவங்களையும் கூட நியாயப்படுத்துகிற முனைப்பு. இது சில இளைஞர்களிடத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது. சமூகம் சார்ந்து. தாம் விடும் தவறுகளை நியாயப்படுத்த முனைகிறார்கள் அல்லது மறைக்கப்பார்க்கிறார்கள். ஒரு கட்டுக்கோப்புக்குள் வர மறுக்கிறார்கள். நிலைமைகளைப் பயன்படுத்தி சுயநலன்களில் ஈடுபடுகிறார்கள். சிலபோதுகளில் இது முழுச் சமூகத்தையுமே பகடைக்காய்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது. இந்தப் போக்கு ஆரம்பத்திலேயே களையப்படவேண்டும். விமர்சனரீதியான பார்வை. சுயவிசாரணை என அனைத்துச் செயற்பாடுகளிலும் இருக்க வேண்டும்.

சமூக நலன் கருதி இந்த விடயத்தை நாம் ஆழமான கவனத்தில் எடுப்போம். (இதற்கான உதாரணங்களை பெரும்பாலும். ஒவ்வொருவரும் அவரவர் ஊர்களில் கண்டு கொள்ளலாம் என நினைக்கிறேன்...)

25.11.2003

# ஜீ.எல். பீரிஸ் ஒரு பொய்யன்!

**சாரம் - சிங்கள ஊடகங்கள்...**



'தமிழ் ஈழம்' என்ற எண்ணக்கருவை புலிகளின் நீண்ட காலக் கனவை நனவாக்கி கொள்வதற்காகவே புலிகள் இயக்கத்தினர் 20 வருட காலமாக போரிட்டனர். இந்நிலையில். போரிட்டு களைத்துப் போயிருந்த புலிகளுக்கு ஒக்சிஜன் ஊட்டினாற்போல் ஒரு காரியம் நடந் தேறியது. அதாவது. நோர்வே இராஜ்ஜி யத்தை முன்நிறுத்தி ரணில் விக்கிரம சிங்காவின் அரசாங்கம் செயற்படத் துவங்கியது. இது புலிகளைப் பொறுத்த வரையில் மிகவும் நிம்மதியான செயற்பாடாகும். புலிகள் மீண்டும் சுறுசுறுப்பாகி உசாரடைந்தனர். போராட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாமல் போன 'தமிழ் ஈழத்தை' சமாதானத்தின் மூலம் பெற்றுக் கொண்டு விட்டனர். தற்போது வடக்கும் கிழக்கும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

தற்போது புலிகள் திருகோணமலை நகரத்தைக் கேந்திரத் தளமாகக் கொண்டு 22 முகாம்களை அமைத்துள்ளனர். அவற்றுள் 13 முகாம்கள் மிகவும் பெரியவை என்று கருதப்படுகின்றது. ஆனால். அமைச்சர் ஜீ. எல் பீரிஸ் அவர்களோ இவை பொய்யான கூற்றுக்கள் என்று தெரிவிக்கின்றார். மணிராசகுளம் முகாமைத்தவிர வேறு முகாம்கள் அமைக்கப்படவில்லை என்று தர்க்கம் பேசுகின்றார். அத்தகைய முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பின் அவை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன் அமைக்கப்பட்டவையாகும் என்றும் கூறுகின்றார். ஆனால் ஜீ. எல். பீரிஸ் கூறுவது பச்சைப் பொய்யாகும். அன்று முதல் பொய்களைக் கூறியே தனது அதிகாரம் மற்றும் பதவி ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்ள முற்படுகின்ற ஜீ. எல். போன்ற கீழ்த்தரமான காரியங்களில் ஈடுபடுகின்ற அமைச்சர்கள். ஏகாதிபத்தியத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தபடி முழு நாட்டையும் அழிப்பதற்கு வரைபடம் கீறிக் கொண்டுள்ளனர்.

வெளிநாடு ஒன்றுக்கு சென்றேனும் இவர்களால் வாழ இயலும். பிள்ளையா. குட்டியா அதுவும் இல்லை.

நன்றி - லக்ஜன

## லுனுகலை பொலிஸ் நிலைய
### பொறுப்பதிகாரியின் இனவாத அட்டகாசம்

"அடோ மரக்கலயா மேக மக்கம நெவெய் மேக பௌத்த ரட. உம்பகே தொப்பிய கலவனவா பலாகனிங்"

மேற்படி சிங்கள வார்த்தைகள் ஒரு வீதியோர வியாபாரியாலோ. ஒரு தெரு சுத்தும் இளைஞனாலோ பேசப்பட்டவை அல்ல. மாறாக நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலை நாட்ட ஜாதி. மத பேதமின்றி உழைப்பேன் என்று சத்தியப்பிரமாணம் செய்து அரச சேவையில் சேர்ந்த இலங்கை பொலிஸ் பிரிவின் லுனுகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் பகிரங்கமாக மக்கள் முன்னிலையில் ஒரு முஸ்லிம் குடிமகனுக்கு பேசிய வார்த்தைகள்.

இந்த முஸ்லிம் குடிமகன் செய்த குற்றம் மோட்டார் வண்டியில் தலைக்கவசம் அணியாமல் தொழுகைக்காக அணியும் தொப்பியை அணிந்து வீதியில் சென்றதுதான். மேற்படி நபர் செய்தது குற்றமென்றாலும் அதற்கான தண்டங்கள். தண்டனைகள் வேறாகும். ஆனால் இவ்வதிகாரியின் செயற்பாடுகள் மிகவும் விசனத்துக்குரியதாகுமென இப்பகுதி மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

அதே வேளை குறிப்பிட்ட இப்பொலிஸ் அதிகாரி உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டால் மாத்திரமே இப்பிரதேச வாழ் சமூகங்களிடையே ஒற்றுமையைப் பேணலாம் என்றும் மக்கள் கருத்துக் கூறுகின்றனர்.

பதுளை செய்தியாளர்

## ரஞ்ஜித் அலுவிகாரேவின் அடியாட்கள் முஸ்லிம்களைத் தாக்குகின்றனர்!

கலேவெளை - புலனவெவ பிரதேசத்தில் கடந்த 22.23 ஆகிய திகதிகளில் மாத்தளை மாவட்ட பா.உ. ரஞ்ஜித் அலுவிகாரேவின் அடியாட்களால் அப்பாவி முஸ்லிம்கள் கத்தியால் குத்தப்பட்டு காயம் உண்டாக்கப்பட்டும். இலட்சக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடியாட்களினால் இரண்டு வீடுகளுக்கும் ஒரு வர்த்தக நிலையத்திற்கும் குண்டு வீசப்பட்டுள்ளதாகவும் பள்ளிவாசலொன்று தீக்கிரையாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

சின்னய்யா சுரேஷ். முருகையா சுரேஷ் ஆகிய இருவரும் எம். சித்தீக் (56) என்ற வர்த்தகரையும். இரண்டு கடைச்சிப்பந்திகளையும் கத்தியால் குத்தியுள்ளனர். இதன் காரணமாக கோபமுற்ற பிரதேச முஸ்லிம்கள் அவர்களின் லொரியை தீக்கிரையாக்கியுள்ளனர்.

அதன் பின் மூன்று முச்சக்கர வண்டிகளில் வாள். கிறீஸ்கத்தி. தடிகள். மண் நிறைத்த போத்தல்கள் சகிதம் விரைந்து வந்த அடியாட்கள் ஒலி பெருக்கிகள் மூலம் சிங்களவர்களை தூண்டி விட முயன்றுள்ளனர். ஆனால் இப்பிரதேச சிங்கள வர் எவரும் முஸ்லிம்களை தாக்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொலிஸாரின் எதிரிலேயே இவ்வட்டூழியங்கள் நிகழ்ந்துள்ளன.

## ஷிக்வா

- அஷ்ரஃப் ஷிஹாப்தீன் -

*விலங்குகள் தகர்க்கும் ஒரு துண்டுக் கயிறும்*
*விட்டுச் சென்றீர்கள் ஒற்றுமை காக்க*
*ஆளுக்கொரு இழையாக*
*அதை அறுத்துக் கொண்டு*
*போய் விட்டார்கள்*

*உங்கள் கப்றுஸ்தானிலிருந்து திரும்பியதும்*
*தேன் கூட்டைப் பற்றிய கவலை*
*பலருக்கிருந்தது சிலருக்கோ*
*தேனைப் பற்றி மட்டுமே கவனம் இருந்தது*

*நமது தோட்டத்தில் ராஜாளிகளாகவே*
*பறந்து திரியக் கோரினீர்கள்*
*வௌவால்களாக இருக்குமாறு*
*எங்களை*
*வற்புறுத்துகிறார்கள் இவர்கள்*

*கௌரவத்துக்குரியவர்களாக இருக்க*
*வேண்டுமென்றே*
*கவலைப்பட்டவர் நீங்கள்*
*காறித்துப்பிய*

*எச்சிலாக எங்களைக்*
*கணிக்கச் செய்து*
*விட்டார்கள் இவர்கள்*

*நோன்பைச் சட்டை செய்யாமல்*
*கஞ்சிப் பானையிலேயே*
*கவனங் கொண்டவனைப் போல்*
*எங்களைக் கைகழுவி விட்டு*
*எலும்புத் துண்டுகளுக்கு*
*அலை பாய்கிறார்கள்*



*நீங்கள் தந்த*
*தலைப் பாகைத்*
*துணியால்தான்*
*எங்களது அவ்றத்தை*
*மறைத்திருந்தோம்*
*அதிலும் கூட*
*ஆளுக்கொரு துண்டு*
*கிழித்துக் கொண்டு*
*எங்களை விட்டார்கள் தெருவில்*
*அம்மணமாக*

*உங்களது உதிரம் நனைந்த மண்ணில்*
*நெருஞ்சிகள் முளைத்தது எங்ஙனம்?*
*உங்களது ஆட்டு மந்தைகளுக்குள்*
*நரிகள் புகுந்தது எப்படி?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி நபி ஆதம் [அலை] அவர்கள் தோற்றம் இப்பூவுலகில் அல்ல!

## ஆரம்ப மனிதப் பெருக்கம் கண்டது லெமூரியாக் கண்டமுமல்ல!! 02

நிச்சயமாக நாம் மனிதனை (ஆண், பெண் இருவரின்) கலப்பான விந்திலிருந்து படைத்தோம்" *(குர்ஆன் 76:02)*

'உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம்" *(குர்ஆன் 21:30)*

'மனிதனின் படைப்பைக் களிமண்ணிலிருந்து துவங்கினான், பிறகு அவனுடைய சந்ததியை (நழுவும்) அற்பத்தண்ணீரின் - (இந்திரிய) சத்திலிருந்து உண்டாக்கினான்". *(குர்ஆன் 32 : 7,8)*

'புவிமேற்பரப்பு மண்ணின் மூலம் அல்லாஹ் படைத்த முதல் மனிதனே ஆதம்" அபூமூஸா அஷ்அரியின் அறிவிப்பின்படி, 'புவியின் ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் பெறப்பட்ட மண்ணின் மூலம் அல்லாஹ் ஆதமைப் படைத்தான்" என நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
*(நன்றி : - அறிவிப்பாளர் இப்னு அப்பாஸ் (ரழி) - அஹ்மத், திர்மிதி, அபூதாவூத்,*

மேற்படி குர்ஆன் வசனங்களும், நபி மொழியும், 'மண்ணை மூலமாகக் கொண்டே அல்லாஹ் மனிதனை படைத்திருக்கின்றான்" என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இதன்பொருள் 'மண்ணில் உள்ள மூலக்கூறுகளால் மனிதப்படைப்பு சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றது". என்பதாகும்.

சுருங்கக்கூறுமிடத்து, 'மனிதனின் பூர்வீகம் இல்லாமை, களிமண், ஒருதுளிவிந்து" என வரையறுத்துக் கொள்ளலாம். ஆகவே நபி ஆதம் (அலை) அவர்கள் முதல் மனிதர், முதல் முஸ்லிம், அல்லாஹ்வின் முதல் நபியுமாவார்கள் என முஸ்லிம்கள் உறுதிபூண்டுள்ளனர். அதற்கான இஸ்லாமிய மூலாதாரங்கள் முன்வைக்கும் ஆதாரங்களிலிருந்து ஒரு பகுதியே மேற்காணும் விளங்கங்களாகும்.

### விஞ்ஞானத்தின் நிழலில்

'மனித இனங்கள் அனைத்தும் ஒரே படைப்பிலிருந்தே தோன்றியிருக்கவேண்டும். எல்லோருக்கும் தாயான இப் பெண் ஆபிரிக்காவில் வாழ்ந் திருக்கவேண்டும்". என கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச் சியாளர் டாக்டர் அலன்ஸி வில் ஈன் என்பவர் தெரிவித்துள்ளார்.
*(நன்றி : தினகரன் 01-08-1986)*

'தென்னாபிரிக்காவில் ஆதிகால மனிதனின் காலடித்தடம் கண்டு பிடிக்கப்பட்டது. அக்காலடித்தடம் 25 சென்றிமீற்றர் நீளம் கொண்டதாகவுள்ளது. அநேகமாக அது ஒரு பெண்ணின் பாதம் என்று தெரிகிறது. நிச்சயமாக இது இப்போதைய நவீன மனித இனத்திற்கு முந்தைய இனம் என்பதில் சந்தேகம் இல்லை.

அது பெண்ணாக இருக்கும் பட்சத்தில் மனித இனத்தின் மூத்த பெண் எனக்கருதப்படும் ஏவாளாக (ஹவ்வாவாக) இருக்கக்கூடும். தற்போதைய மனித இனத்தின் மூதாதையரான ஏவாள் ஒரு லட்சத்திலிருந்து மூன்றுலட்சம் ஆண்டுகள் முன் ஆபிரிக்காவில் வாழ்ந்ததாக அனுமானிக்கப்படுகின்றது". என தென்னா பிரிக்கா புவியியல் ஆய்வாளர் டேவிட் ராபாட் தெரிவித்துள்ளார்.
*(நன்றி : வீரகேசரி 18-08-1997)*

மேற்படி ஆய்வுகள் நமக்கு உணர்த்துவது என்ன? 'மனிதனின் தோற்றுவாய் பற்றி இஸ்லாம் முன்வைக்கின்ற கருத்துக்களைப் மெய்ப்பிக்கும் வகையில் இன்று விஞ்ஞானம் தனது ஆய்வை முன்கொண்டு செல்கின்றன". எ‌ப்பதேயாகும்.

'மனித வர்க்கத்தின் தந்தையென முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் உட்பட செமித்தியப் பரம்பரையினர் நபி ஆதம் (அலை) அவர்களையே கருதுகின்றனர்". என்பது மிகத் தெளிவான வரலாறாகும். முதல் மனிதர் நபி ஆதம் (அலை) அவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளும் செல்லத்துரை உட்பட மனித உற்பத்தி இவ் வுலகில் - இம்மையில் அதாவது தென்னிந்தியா அல்லது இலங்கை என்ற கருத்தைக் கொண்டிருப்பதை நாம் தெளிவாக அவதானிக்கலாம்.

இக்கூற்றுக்களை இஸ்லாமோ, முஸ்லிம்களோ முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை பின்வரும் ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. நபி ஆதம் (அலை) அவர்களின் ஆரம்பம் இப்பூவுலகில் எப்பாகத்திலும் அமைந்திருக்கவில்லை என்பதை இஸ்லாம் உறுதிப்படுத்துகின்றது. இது பற்றி எமது சிந்தனையைச் செலுத்துவோம்.

### நபி ஆதம் (அலை) அவர்களின் தோற்றம் இப்பூவுலகில் அல்ல!

'ஆதமே! நீரும் மனைவியும் இச்சுவனபதியில் குடியிருங்கள்" *(குர்ஆன் 2:35)*

'அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களையும், அவர்தம் மனைவியான ஹவ்வா (அலை) அவர்களையும் படைத்து முதலில் சுவர்க்கச்சோலையில் வசிக்குமாறே செய்தான்".
*(நன்றி : தஃப்ஸீர் ஜவாஹிருல் குர்ஆன் - முதற்தொகுதி)*

'நபி ஆதம் (அலை) அவர்கள் ஆரம்பம் முதலே சுவர்க்கத்தில் தனியாக இருந்து வந்தார்கள்.......... அவரது வலப்புற விலா எலும்பிலிருந்து அல்லாஹ் ஹவ்வாவை வெளிப்படுத்தினான். பின்னர் அவ்விருவரையும் தம்பதிகளாக்கி சுவர்க்கத்தில் சுகவாழ்க்கை நடத்துமாறு அனுமதித்தான்". என அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அவர்கள், அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்கள் ஆகிய இருவரும் கூறுகின்றனர்.
*(நன்றி : அஹ்ஸனுத் தபாஸிர்)*

> **"மனித உற்பத்தியின் பெருக்கத் தின் ஆரம்ப இடம் இலங்கை–தென்னிந்தியா என்ற கருத்து முஸ்லிம்களிடம் கிஞ்சிற்றும் இருக்க முடியாது."**

**- எம்.எம்.எம். நூறுல்ஹக் -**

இவற்றிலிருந்து நாம் தெளிவாக ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள முடியும். அதாவது 'நபி ஆதம் (அலை) அவர்களும், அவர்களின் இல்லாள் ஹவ்வா (அலை) அவர்களும் படைக்கப்பட்ட இடமும் ஆரம்பத்தில் வாழ்ந்த இடமும் இப்பூவுலகின் - இம்மையுலகின் எப்பாகத்திலும் இல்லை" என்பதாகும்.

அவ்விருவரும் பூமிக்கு வந்ததென்பது பின்னராகும். இதனைக் குர்ஆன், 'நீங்கள் (இங்கிருந்து) இறங்குங்கள். உங்களுக்கு பூமியில் ஒரு குறிப்பிட்ட காலம்வரை தங்குமிடமும், சுகம் அனுபவித்தலும் உண்டு". *(குர்ஆன் 2,36)* எனக் குறிப்பிடுகின்றது.

இவ்வசனத்திலிருந்து 'சுவர்க்கம் பூமிக்கு வெளியே உள்ளது" என்பதைத் தெட்டத்தெளிவாக உணர்த்துகின்றது. இத்தகைய அடிப்படை ஆதாரங் களை வைத்து நோக்கும் போது, 'முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதம் (அலை) அவர்கள் தோன்றிய இடம் லெமூரியாக் கண்டம் எனும் குமரிக் கண்டமல்ல" என்பது மிகத் தெளிவாகின்றது.

### மனிதப்பெருக்கம் மத்திய கிழக்கிலேயே உருவாக்கம்

'ஆதி பிதா நபி ஆதம் (அலை) அவர்களும், அன்னை ஹவ்வா நாயகி அவர்களும் வெவ்வேறு இடங்களில் இறக்கப்பட்டனர். (இப்பூமியில்) நீண்ட நாட்கள் சுற்றி அலைந்த பின்னர் மக்காவிலிருந்து சில மைல் கிழக்கிலுள்ள அரஃபாத் எனுமிடத்தில் இருவரும் சந்தித்து, பரஸ்பரம் அறிந்துகொண்டனர். இதனாலேயே அத்திடலுக்கு அரஃபாத் (அறிந்துகொண்ட இடம்) எனக்கூறப்படுகின்றது.
(நன்றி : ஹக்கானீ, வகையறா)

'சுவர்க்கத்திலிருந்து பூமிக்கு இறங்கிய நபி ஆதம் (அலை) அவர்கள் இந்தியாவில் (இலங்கை யில்) தான் முதலில் வந்திறங்கினார்கள் என்று சொல்லப்படுகிறது. (முன்னர் இந்தியாவின் ஒரு பகுதியே இலங்கை என்பது குறிப்பிடத் தக்கது)

பல நாட்கள் பூமியைச்சுற்றிய (லைந்த) பின்னர் அரபாஃத் பெருவெளியில் தம் துணைவியார் ஹவ்வா நாயகி அவர்களை சந்தித்தார்கள். மக்காவில் இருவரும் தங்கியிருந்து அல்லாஹ்வை வழிப்பட்டு, வாழ்க்கையை நடத்தி வந்தனர்.
*(நன்றி: உம்தத்துல் காரீ ஷரஹ் ஸஹீஹுல் புகாரி)*

'அல்லாஹ் படைத்த முதல் மனிதரான நபி ஆதம் (அலை) அவர்கள் சுவர்க்கத்திலிருந்து இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட போது, இக்கண்டத்தில் நடு நாயகமாகவிருந்த இலங்கைத் தீவின் ஆதம் மலையின் உச்சியிலேயே இறங்கியதாகக் கூறப்படுகின்றது. *(நன்றி : இளைஞர் இஸ்லாமிய கலைக் களஞ்சியம் - மன வை முஸ்தபா எம்.ஏ)*

எனவே இப்பூமியில் ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா (அலை) அவர்களும் சந்தித்துக் கொண்ட பின்னர் நடத்திய வாழ்க்கையில்தான் தாம்பத்யம் சாத்தியப்பட்டிருக்கும் எனின் மனிதப்பெருக்கம் மத்திய கிழக்கில் - மத்திய தரைக்கடல் பிரதேசத்தை அண்மிய பகுதி களில்தான் நிகழ்ந்திருக்கும் என்று நம்புவதையே ஓர் இஸ்லாமியனின் நம்பிக்கையாக இருக்க முடியும் தவிர வேறில்லை.

### மனித இனத்தின் ஆதிப் பரம்பல்

ஏனெனில் நபி ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா (அலை) அவர்களும் பலஸ்தீனப் பிரதேசத்தில் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. அதே நேரம் நபி ஆதம் (அலை) அவர்கள் முதன் முதலில் இம்மையில் வந்திறங்கிய இடம் இலங்கை என்பதற்கும் ஆதாரங்கள் கிடைக்கின்றன. இந்நிலையில் மனித உற்பத்தியின் பெருக்கத்தின் ஆரம்ப இடம் இலங்கை - தென்னிந்தியா என்ற கருத்து முஸ்லிம்களிடம் கிஞ்சிற்றும் இருக்க முடியாது.

(அடுத்த இதழில் தொடரும்.....)

---

### நான் அவனைத் தேடுகின்றேன்.

தேடுகிறேன்...!
தேடுகிறேன்...!
மனிதனைத் தேடுகின்றேன்!
இன்னும் நான்
அவனைக் காணவில்லை!

ஆனாலும்..
மனிதனைப்போல்
அலங்காரம் செய்து கொண்ட -
பல உருவங்களைக்
காணுகின்றேன்!
இன்னும்நான்..
அவனைக்காணவில்லை!

பெண்ணாசை!
மண்ணாசை!
பொன்னாசை!
பொருளாசை!
பேராசை - கொள்ளாத
மனிதனைத் தேடுகின்றேன்..!
இன்னும் நான்...
அவனைக் காணவில்லை!
பொய் களவு வஞ்சனை!
சூது வாது நிந்தனை!
செய்யாத..
மனிதனைத் தேடுகின்றேன்!
இன்னும் நான்
அவனைக் காணவில்லை!

உள்ளொன்று - வைத்து
புறமொன்று பேசுவார்
இல்லாத..
மனிதனைத் தேடுகின்றேன்!
இன்னும் நான்...
அவனைக் காணவில்லை!

ஆனாலும்...
தேடுகிறேன்
தேடுகிறேன்
மனிதனைத் தேடுகின்றேன்!
இன்னும் நான்
அவனைத் தேடுகின்றேன்!

ரி. ஆரிப் சராவுடீன்
மட் -கோட்டமுனை

### இளைஞர் சமூகமே!

மனித நேயங்கள்
புதைக்கப்பட்டு
உரிமைகள் அடக்கப்பட்டு
உடமைகள் அழிக்கப்பட்டு
உயிர்கள் பறிக்கப்பட்டும்
உறங்கிக் கொண்டிருக்கும்
இளைஞர் சமூகமே
உங்களிடம் ஒரு நிமிடம்...!

முஸ்லிம்களின் உயிர்கள்
தெருக்களிலும்
வீதியோரங்களிலும்
பள்ளி வாயல்களிலும்
சஹிதாக்கப்பட்டுக்
கொண்டிருப்பதை
உங்கள் கண்கள் இன்னும்
கண்டு கொள்ள
வில்லையா...?

நாங்கள் நாடு கேட்கவில்லை
- ஆனால்
நசுக்கப்படுகிறோம்
முஸ்லிம் என்ற காரணத்தால்
சிதறடிக்கப்படுகிறோம்
நாங்களும்
இலங்கையர்கள் தான் -
ஆனால்
இனச் சுத்திகரிப்புச்
செய்யப்படுகிறோம்
இளைஞர்களே உங்கள்
குரல்வளைகள் - என்ன
அறுக்கப்பட்டு விட்டதா...?

மூவினம் வாழும் இந்நாட்டில்
மூன்றாம் தரம் என்ற
பெயரால்
அனாதையாக்கப்படுகிறோம்
முஸ்லிம் என்ற பெயரால்
முடக்கப்படுகிறோம்.

இளைஞர்களே!!
நீங்கள் நிமிர்ந்து விட்டால்
உங்கள் முன் யாரும்
தலை நிமிர முடியாது
நிமிருங்கள் முஸ்லிம்
சமூகத்தின்
நாளைய விடிவுக்காய்...

எகுதார் நளீம்,
நடுத்தீவு, மூதூர்

# கவிதைகள்

### புறப்படு!

யுத்தமில்லா இடமாய்
இரத்த வாடை இன்றி,
நம் புனித பூமி
மாற வேண்டும்!
மலர் மணம்
வீச வேண்டும்!

ஏழைகளை இழிவு
படுத்தாமல்
பணக்காரர்களுக்கு
அடிமையில்லாமல்
இனிய வாழ்க்கை
பிறக்க வேண்டும்!

இஸ்லாத்தின்
சின்னங்களான நாம்
இன்று-
சுய நலக்காரர்களாகி
விட்டோம்!
அதனால் என்னவோ
இஸ்லாமிய ஆட்சி
தூரச் சென்று விட்டது!

காலம் நமக்காய்
காத்துக்கிடக்காது
இனி- தாமதம் வேண்டாம்!
புறப்படு சகோதரி
தூய எண்ணம் கொண்டு,
நாம் - இஸ்லாத்தின்
பணியில் ஈடுபடுவோம்!

பிர்தௌஸியா இஸ்மாயில்.
ஓட்டமாவடி.

### முஸ்லிம் இளைஞனே...

இளைஞனே..... உன்னை
பட்டமரம் என்றெண்ணி
வெட்டப்பார்க்கிறார்கள்
இன்றோ வடக்கு கிழக்கு
எங்களுக்குமட்டுமான
சொத்து என்று
காபிர்கள் உரிமை
கொண்டாடுவது சரிதானா?



இளைஞனே
அமெரிக்காவையே
ஆட வைத்தவன்
ஒரு முஸ்லிம் மகனே....
ஏன்? உன் மனதில் மட்டும்
வீரம் என்ற விதை
பதியப்படவில்லை

இளைஞனே...
பொறுத்தது போதும்
விரைந்து வா
நளைய உலகம்
உன் பெயரை
எழுதட்டும்.

சே.மு. முயியீதீன்
காங்கேயனோடை -13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமமற்ற மத்திய கிழக்குக் கொள்கை

ஜேம்ஸ் ஜே. டேவிட்:
*இக்கட்டுரை ஆசிரியர் அமெரிக்க இராணுவத்தின் இளைப்பாறிய உயர் அதிகாரியொருவர் ஆவார். அத்துடன் அமெரிக்கா சார்பாக இவர் வியட்னாமிலும், மத்திய கிழக்கிலும் உயர் பதவிகள் பல வகித்துள்ளார்.*

மேற்குக் கரையிலும், காஸாவிலும் உள்ள பயங்கரவாதக் கூட்டமைப்புகள் அகற்றப்பட வேண்டுமென்ற பலஸ்தீனத் தலைவர்கள் மீதான கோரிக்கையினை புஷ் நிர்வாகம் வலியுறுத்தி வருகிறது. ஜெரூசலத்தில் ஐந்து பிள்ளைகள் உட்பட இருபது இஸ்ரேலியர்களைப் பலிகொண்ட நாசகார குண்டுத் தாக்குதலின் பின்னரே இக்கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

பயங்கரவாத கூட்டமைப்புகளை அகற்றும்படி மீண்டும் புதிதாக வலியுறுத்தப்படுமென ஐக்கிய அமெரிக்காவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறுகின்றார். இத்தாக்குதலுக்கு முன்னர் இங்கு அமைதி நிலவுவதாக மேற்கின் ஊடகங்கள் சுட்டிக்காட்டி இருந்தன. காரணம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இரு தரப்பினரும் பாதைப்படத்தை (Road map) ஏற்றிருந்தமையாகும். ஆனால் இஸ்ரேலியர்களினால் 22 பலஸ்தீனர்கள் கொலை செய்யப்பட்டமையிட்டும் பல வீடுகள் தாக்கி அழிக்கப்பட்டமைபற்றியும் ஊடகங்கள் வெளியிடத் தவறின. இவற்றுக்கான புஷ்ஷின் அல்லது தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் கண்டன வார்த்தைகள் எங்கே?



பலஸ்தீனர்கள் கொலைசெய்யப்படும்போது, அக்கொலைகள் பலஸ்தீனச் சிறுவர்களாக இருந்தபோதும் நிலைமை 'பொதுவான அமைதியானது' என்றே கருதப்படுகின்றது. அதே சமயம் இஸ்ரேலியர்கள் உயிரிழந்தால் அது பயங்கரவாதம் என வர்ணிக்கப்படுவதுடன், தலைப்புச் செய்திகளுக்கும் குறைவில்லை. எனவே, இஸ்ரேலின் மிகவும் முக்கிய நண்பர்கள் அமெரிக்க ஊடகங்களும், வாஷிங்டனின் உயர் அரசியல்வாதிகளும் என்பது ஆச்சரியத்திற்குரியதா?

மூன்று வாரங்களுக்கு முன்னர் மேற்குக் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது இஸ்ரேலிய இராணுவ வீரர் ஒருவர் தாங்கி ஒன்றின் இயந்திரத் துப்பாக்கி மூலம் சுட்டு பலஸ்தீன சிறுவன் ஒருவன் கொலைசெய்யப்பட்டும், அவனது இரு சகோதரிகள் காயப்படுத்தப்பட்டிருந்தபோதும் புஷ் நிர்வாகத்தில் இருந்து எதுவித கோரிக்கைகளும் எமது செவிகளுக்கு எட்டாத காரணம் என்ன? பாதைப்படம் ஏற்கப்பட்டு இரண்டு நாட்களின் பின் இஸ்ரேலியர்களின் தாக்குதல் களின் விளைவாக படுகொலை செய்யப்பட்ட இரு ஹமாஸ் உறுப்பினர்கள் பற்றி யாது கூறப் பட்டது.

மேற்குக் கரையில் ஹெப்ரோன் நகரில் இஸ்ரேலிய துருப்புகளினால் படுகொலை செய்யப்பட்ட இஸ்லாமிய ஜிஹாத் உறுப்பினர் முஹம்மத் ஸித்ரின் படுகொலை பற்றி என்ன கூறப்பட்டது. இதன்பிறகு ஜெரூசலத்தில் பஸ் ஒன்றின் மீது தற்கொலை தாக்குதல் நடாத்தப்பட்டது.

கட்டிட அமைப்புகள் நிறுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்க பின்னணியிலான சமாதானத் திட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்ட பின்னரும் தொடர்ந்தும் கட்டிட நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பிரதமர் ஏரியல் ஷரோன் அமைச்சரவையில் கூறியிருந்ததன் அர்த்தமென்ன?

இதை சட்டமுரணான குடியிருப்புகள், பயங்கரவாதக் கட்டிடங்கள் எனக் கூறப்படத் தகுதியற்றனவா? என நான் ஊகிக்கிறேன். பாதைப்படங்கள் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இஸ்ரேலியர்களினால் 22 பலஸ்தீனர்கள் கொலைசெய்யப்பட்டமை கோரிக்கை யொன்றினை விடுப்பதற்குத் தகுதியற்ற ஒரு செயலா என நான் ஊகிக்கிறேன். இங்குதான் அடிப்படைப் பிரச்சினை இருக்கிறது. இதனால்தான், மத்திய கிழக்கில் சமாதானத்தைக் காண முடியாதிருக்கிறது.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் இடையில் தன்னை ஒரு நேர்மையான தரகராகக் கருதும் அதே வேளை, ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை இஸ்ரேல் தொடர்ந்தும் மீறுவதனை அமெரிக்கா புறக்கணித்து வருகிறது.

பலஸ்தீனர்கள் சிறு ஆயுதங்களைக் கொண்டு போராடுவதை 'பயங்கரவாதம்' என அமெரிக்கா குற்றஞ் சாட்டுகிறது. இதேவேளை இஸ்ரேல் ஆண்டு தோறும் அமெரிக்காவிடம் இருந்து பல்லாயிரக் கோடிக் கணக்கு டொலர் பணத்தையும், ஆயுதங்களையும் பெற்று வருகிறது.

இதன்மூலம் இஸ்ரேலின் ஆயுத பலமும், வானூர்திகள், தாங்கிகள், அணுஆயுதங்கள், எவ்16 விமானங்கள் போன்றனவையும் பெருகுகின்றன. இத்தகைய ஆயுதங்களை பெறுகையில் பல நிபந்தனைகள் விதிக் கப்பட்டுள்ள போதிலும் அவற்றில் இரண்டு நிபந்தனைகள் தொடர்ந்தும் மீறப்படுகின்றன. இந்தக் கனரக ஆயுதங்கள் பாதுகாப்பு நோக்கங்களுக்காகவும் அல்லது உள்நாட்டுப் பாதுகாப்பைப் பேணவுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பனவே அவை.

அமெரிக்காவினால் வழங்கப்பட்ட எவ்16 விமானம் மூலம் இஸ்ரேல் ஒரு தொன் எடையுள்ள குண்டை சில மாதங்களுக்கு முன் காஸா நகரின் மத்திய கட்டிடத் தொகுதியொன்றின் மீது எறிந்தபோது, ஒன்பது பிள்ளைகள் உட்பட பதினாறு அப்பாவிப் பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இதனால் இந்த இரு நிபந்தனைகளும் மீறப்பட்டன.

இந்தக் குற்றத்தினை நியாயப்படுத்துவதற்காக யாது கூறப்படினும் பயனில்லை. இருந்தபோதும் இதற்காக இஸ்ரேல் கண்டிக் கப்படவுமில்லை, வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப் படவுமில்லை.

இஸ்ரேலின் தொடரும் இத்தகைய பயங்க ரவாதச் செயல்கள் கண்டிக்கப்படாத போது, குடியேற்றக் கட்டிடங்கள் மேலும் உக்கிரமடைகின்றன. ஒரு சமமான மத்திய கிழக்குக் கொள்கை பற்றி நாம் கதைக கிறோம். ஆயினும் நாம் உண்மையில் எதனைச் செயற் படுத்துகிறோம் எனக் கவனித்துப் பாருங்கள்.

இஸ்ரேலியர்கள் விடயத்தில் அவர்கள் எத்தகைய பாரதூரமான குற்றங்களைப் புரியினும் விமர்சிக்கப்பட முடியாத ஒரு தரத்தினை பின்பற்றுகிறோம். அத்துடன் பலஸ்தீனர்கள் விடயத்தில் நாம் கடைப் பிடிக்கும் கீழ்த்தரமான கொள் கையின்படி அவர்களை இனச் சுத்திகரிப்புச் செய்வ தற்காகவும் வேதனை செய்வதற்காகவும் வெளிப்படையாகவே பணம் செலவழிக்கிறோம். தொடர்ச்சியான வன்முறைகளுக்கு பிரதான காரணம் என நாமே ஏற்கக் கூடிய சட்டவிரோதமான யூதக்குடியேற்றங்களை அமைப்பதற்காக நாமே பணம் ஒதுக்குகின்றோம்.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு அல்லது ஆட் கொலையில் ஈடுபட்டால், அச் செயலை விமர்சனம் செய்து ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களை அமெரிக்கா துரிதமாக வீட்டோ மூலம் நிர்மூலமாக்குகிறது.

லெபனானின் 'கானா' அகதிகள் முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட லெபனானிய, பலஸ்தீனக் குடிமக்கள் படுகொலை செய்யப்பட்ட விடயத்தைக் கண்டிக்கக்கூட அமெரிக்காவினால் முடியவில்லை. இஸ்ரேலை இப்படி மறைத்துக் காப்பாற்றுவது சர்வதேச ரீதியில் தர்மசங்கட நிலை யினை ஏற்படுத்துவதுடன் உலகெங்கிலுமுள்ள அமெரிக்கப் பிரஜைகளை ஆபத்தான நிலைக் குள்ளாக்குகிறது.

பல அமெரிக்க அரசியல் வாதிகள் சியோனிஸ வாதி களின் பக்கம் இலகுவாகச் சேர்ந்து விடுகின்றனர். காரணம் அங்குதான் அதிகாரமும், சக்தியும் உள்ளன என அவர்கள் அறிந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கு உதவி செய்யப் படுவதை விமர்சிப் பவர்களின் குண ஒழுக்கத்தை மாசுபடுத் துவதில் யூதக் குழுக்கள் வெற்றி கண்டுள்ளன. இதன் விளைவாகக் காங்கிரசும் வெள்ளை மாளிகையும் இஸ் ரேலிய அக்கறைகளுக்கு ஆமாஞ்சாமி போடுபவர்களாக மாறியுள்ளனர்.

மத்திய கிழக்கின் அமைதிக் கான சமாதானத்துக் கான பெரும் தடை பயங்கர வாதக் கூட்டமைப்புகள் அல்ல. பயங்கரவாதக் கூட்டமைப்புகள், அமெரிக் காவின் மத்திய கிழக்கு தொடர்பான ஊழல் மிக்கதும், நயவஞ்சகத்தன்மை யானதும், சமமற்றதுமான கொள்கைகளின் விளைவே. தனது அரசியல் செல்வாக்கினை மனதிற்கொண்டு இஸ்ரேலின் செல்வாக் கிற்குட்பட்டுச் செயற்பட மறுக்கும் உறுதியான தலைமைத்துவம் வாஷிங்டனில் ஏற்பட்டால் மட்டுமே மத்திய கிழக்கில் சமாதானத்தைக் காண முடியும்.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவதில் அமெரிக்கா கரிசனையுள்ளது என இருந்தால் இஸ்ரேல் விடயத்தில் மிகவும் கடுமையான போக்கைக் கடைப்பிடிப்பதுடன் யூத அரசுக்கு நிதி, இராணுவ உதவிகள் நிறுத்தப்பட வேண்டியதுடன், அதற்குரிய பொருத்தமான நேரம் இப்போது எழுந்துள்ளது.

பலஸ்தீன டைம்ஸ் - ஒக். 2003

**தமிழில்: ஏ.எம். முஹம்மத் மதனி**

## நா(ய்)கரிக மோகத்திலிருந்து விடுபட்டு நமக்கான பாதையில் வாழ்வோம்!

*என் சக தோழிக்கு,*

உன்னிடம் நான் மனம் விட்டுப் பேசும் தருணம் வந்துவிட்டது. உன் நடைமுறைகளை இனியும் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. எங்கோவொரு மூலையில் உன் கற்பனைகளைக் கொட்டிக் காலத்தை ஒட்டிக் கொண்டிருக்கிறாய் நாகரீக ஆடைகளுக்காய் நாகரிகப்பார்வைகளுக்குள் உன்னைத் திருப்திப்படுத்துகிறாய்- நீ பெருமைப்படும் நாகரீக உலகத்தை விட உனக்கான தனித்துவ உலகம் பற்றி நீ கண்டு கொள்ளவில்லையே என்ற ஆதங்க மேலீட்டால் என் வார்த்தைகளை உனக்காகப் பகிரங்கமாகப் பேச விரும்புகிறேன்.

கவனமாகக் கேள்.... உயிரின் கடைசி வேரில் இருப்பாகிவிட்டோம். எமதிருப்புக்களின் கீழ் எப்போதோ திட்டமிட்ட விலங்குகள் பூட்டப்பட்டிருக்கிறதென்பதை புரியாமலே இருக்கிறாய். பெருமைக்காய் மட்டும் முஸ்லிம் எனும் நாமத்தை சூட்டினால் போதுமா...... உன்னால் உச்சரிக்கப்படும் வார்த்தைகள் சினிமாப் பாடல்களாய் மாறியுள்ளதை நினைத்துப் பார்க்கிறாயா? உன் சமையல் வேலையில் கூட, மற்றும் படிக்கும் நேரங்களில் கூட சினிமாப் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருக்கிறாய். முற்று முழுக்க உனது சிந்தனைகள் உன் தனித்துவத்தில் இல்லை என்பதை எப்போதேனும் உணர்ந்திருக்கிறாயா?......

எங்கேயோ நீ தொலைத்துவிட்ட நிம்மதியான வாழ்வை மீட்டெடுப்பது பற்றி உன் சிந்தனையில் உதிக்கவே இல்லை. அதனால்தான் மொடல் அழகிகளையும், ஹோலிவூட் நடிகைகளையும், கிசு கிசு விடயங்களையும் பேசுவதில் அரட்டை அடிக்கிறாய். ஆனால் உனக்கான சுதந்திரம் இன்னும் சற்றே நிமிடங்களிலும் பறிக்கப்படும் என்பதை உன்னால் அறியவே முடியாது. ஏனெனில் அந்நிய உலகமும் நாகரிக மோகங்களும் உன்னுள் வலு இருப்பாகி விட்டது. கலிமா மொழிவதற்கோ தொழுகையை முடிப்பதற்கோ அல்லாமல் T.V மெகா தொடர்களை நேரம் தவறாமல் இரசித்துக் கொண்டிருக்கிறாய். அடைய முடியாத இலட்சியக் கோட்டைக்குள் உன் எண்ணங்கள் கட்டப்பட்டிருக்கும். ஆனால் உனைச்சூழவும் உன் வாழ்வை அமிழ்த்தும் நாளைய சமுதாயத்தில் உன் பாதங்கள் படாதளவு மிதிக்கப்டுவது பற்றி பாராமுகமாயிருக்கிறாய்.

உன் நம்பிக்கைப்பிரயோகங்களை யாரிடம் ஒப்படைத்தாயோ அவர்கள் வெறும் தலையாட்டலுக்கும் கௌரவத்திற்கும் பொம்மைகளாக பலவீனங்களால் என்றோ தொலைத்து விட்டார்கள். ஆனால் அதற்காக எமதெச்சரிக்கைகள் எம் திடப்படுத்தல்கள் ஒளிக்கப்பட வேண்டுமா என்ன? சென்றவை சென்றவையாக இருக்கட்டும் எமது முரண்பாடுகளுள் எமது ஏக்கங்கள் விழித்தெழுவது பற்றி இஸ்லாமியப் பெண் எனும் அடிப்படையில் தொழுகையில் நீ கேட்கும் துஆவினாலாவது இனியேனும் மீட்சி பெறட்டும்.

நான் - நீ - எம் சந்ததி இழந்தவைகளும் மீட்க வேண்டியவைகளும் இப்போது பர்ளு ஐனாகவே ஆகி விட்டது. நீ சில சுன்னத்துக்களை மட்டும் உன்னுள் கடமையாக்கிவிட்டாய். ஆதலால்தான், பர்ளு ஐனை விட்ட தண்டனைகளை மேலும் சுமக்க வேண்டியதாயிற்று.

கவலையற்ற உனதுலகம் எங்கேயோ தொலைக்கும் உன் உறவு நீ மட்டும் மீதமாகப் போகும் உன் தரிசிப்புக்கள் நாளை பறிக்கப்படும் முன்னர் விழித்தெழு பெண்ணே. தாமதித்தது போதும் நேரம் வந்து விட்டது. அவகாசம் உனக்கில்லை இஸ்லாமிய நாமத்தின் புனிதம் மட்டுமே நமது வெற்றிக்கும் போதும். எஞ்சிய இவ் இடைவெளிகளோடு மீள்வோம். வா. உன் உணர்வுகள் உனக்குள் முளைத்தால் போதும் உன்னையும் என்னையும் அமிழ்த்தும் காலில் பதித்த ஆணிகளினதும் முட்களினதும் பிடியிலிருந்து விடுபட்டு, நமக்கான உலகத்தை நோக்கிய பயணத்திற்கு. அதுவே நமது நாளைய நிம்மதி உலகமாகும்.

**என்றும், அன்புடன்**

**முஹம்மட் இஸ்மாயில் சித்தி றபீக்கா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மனிதனின் சமூக அக்கறையை எப்படி தீவிரவாதமாகக் கொள்ள முடியும்?

ஒரு சமூகம் பல வழிகளில் பாதிக்கப்படுகின்றபோது அச்சமூகத்தைச் சேர்ந்த ஒரு மகன் அது பற்றி அக்கறையெடுப்பது, எப்படி தீவிரவாதமாக கணிக்கமுடியும். ஆனால் இன்று நமது சமூகத்தில் மட்டும் அது கொள்ளப்படுகின்றமை துரதிஷ்டமானதாகும். ஏனைய இனங்களில் இப்படியாக கருதுவதில்லை.

எமது நாட்டை எடுத்துக் கொண்டால் சிங்கள பெரும் பான்மை அரசாங்கத்திற்கும் தமிழ்ப்போராட்டக் குழுக் களுக்குமிடையே யுத்தங்கள் கடந்த 20 வருடமாக நடைபெற்றபோதிலும் இப்போராட்டக்குழு எதனையும் தீவிர வாதிகள் என முத்திரைகுத்தப்பட்டு விழிக்கப்படவில்லை. மாறாக விடுதலைப்போராட்டக்குழுக்களாகவே அழைக் கப்படுகின்றன. ஒரு சில அரசியல் வாதிகள் பயங்கர வாதக் குழுவென்று அழைத்தாலும், தீவிரவாதக்குழுவென்று அழைக்கவில்லை. பயங்கர வாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் கூறப்படுகின்றன. அவைகள் எப்படியாகினும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் எமது சமூக அக்கறையை தீவிரவாதமென்று சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அப்படியானால் தாம் சார்ந்த இனத்திற்காகப் பேசுகின்ற எல்லோருமே தீவிரவா திகளாகக் கருத முடியுமல்லவா?



நமது நாட்டில் ஒரு சிங்கள மகன் பௌத்த மதமக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது தீவிரவாதமல்ல. அதே போன்று ஒரு தமிழ் மகன் தமிழினத் தின் தேவைக்காகப் போராடுவது தீவிரவாதமல்ல. ஒரு முஸ்லிம் தான்சார்ந்த சமூகத்தின் மீது திட்ட மிட்டு நடத்தப்பட்ட அரக்கத்தன மான தாக்குதல் களைத் தட்டிக் கேட்பது, மட்டும் தீவிரமாகச் சிந்திக் கப்படுகின்றன. இது எந்த விதத்தில் நியாயமாகலாம். சிங்கள, தமிழ் மக்களுக்கு ஒரு நியாயம். முஸ்லி ம்களுக்கு வேறு ஒரு நியாயமா? இதில் வேடிக்கை என்னவென்றால் எமது முஸ்லிம் தலைவர்களில் சிலரே இதனைப் பகிரங்கமாகப் பேசு வது தான் விந்தையிலும் விந்தையானது.

இந்தக்கருத்தானது தங்களின் கொள்கைகளில் இல்லாத முஸ்லிம் அரசியல் தலைவர்களை, மக்களைக் கா...க் கொடுக்கக்கூடிய கருத் தாகும். இவ்விடத்தில் நாம் இப்படிக்கேட்டால் பதில் எப்படியாக இருக்கும் அதாவது தீவிரவாதக் கொள்கையை விட மிதவாதக்கொள்கை சிறந்ததென்பதை இவர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. தீவிரவாதமில்லாமல் கடந்த 50 வருடங்களாக தமிழ் இனம் மிதவாதக்கொள்கையைக் கடைப்பிடித்து கண்ட தெளிவுதான் பிரபாகரன் தலைமையில் தீவிரவாதப் போராட்டம் அந்தப் போராட்டம்தான் இன்று 'சமாதானம்' சமத்துவம் பற்றி பேச வைத்திருக்கின்றது.

மட்டுமல்ல முழுவுலகிலும் முஸ்லிம்கள் மீது அநீதிகள் திட்டமிட்டு இளைக் கப்படுகின்றன. அவைகளைத் தட்டிக் கேட்பது எமது முஸ்லிம் சமூகத்தின் கடமை. அதிலும் இளைஞர்களின் கட்டா யக்கடமை. அக்கடமைகளை அவர்கள் செய்ய முற்படும்போது அதனை மட்டம்தட்டிப் பேசி தமது ஆற்றாமையைக்காட்டுவது சமூகத்துரோகமாகும். எமது மக்கள் எந்தவொரு இனத்தையும் அழிக்கவோ, அடக்கி ஆளவோ முற்படவில்லை. எமது சமூகத்திற்கு திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற அநீதிகளுக்காகவே போராடுகின்றனர். இன்றுவரை ஆயுதத்தில் எமது இளைஞர்கள் நம்பிக்கை வைக்கவில்லை. அதற்காக மிதவாதக்கதை கூறி அவர்களைக் கோழைகளாக்கி தமது அரசியலைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளலாமென நமது அரசியல் தலைமைகள் நினைத்தால் அது வெறும் கானல் நீராகும்.

## முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது

இவ்வளவுகாலமாக முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்துவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் தடுத்து உரிமைகளை ஜனநாயக ரீதியாக வென்றெடுப்பதிலேயே அவர் களை நெறிப்படுத்தி வந்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் ஹக்கீம். இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் களின் பரிமாணம் சரிவர கவனத்தில் கொள்ளப்பட்டு நீதி. நியாயம் கிட்டாது போனால் விரக்தியின் விளிம்பில் நிற்கும் முஸ்லிம் இளைஞர்கள் தற்பாதுகாப் பிற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைமைக்கு இயல்பாகவே தள்ளப்படுவதை தவிர்க்கமுடியாது போய்விடலாம் என்றும் எச்சரித்தார்.

(வீரகேசரி. 01.12.2003) - சென்னையில் அமைச்சர் ஹக்கீம் -

புலிகளோ அல்லது அரசாங்கமோ இவர்கள் கூறும் மிதவாத அரசியல் முக்கியமானதென்று முஸ்லிம்களுக்கான சுயநிர்ணய உரிமையை தட்டில் வைத்துத் தருவார்களென்று நீங்களும் சரி நாங்களும் சரி நினைப் போமானால் அதனைத் தவிர முட்டாள் தனம் வேறு எதுவும் இவ்வுலகில் இருக்க முடியாது. அரசாங்கமும். விடுதலைப் புலிகளும் ஆயுதக் குவிப்பில் ஏன் போட்டி போடுகின் றனர். அவைகளுக்கு இந்த மிதவாதக் கொள்கை விளங்கா விடயமா? எனினும் பேச்சுவார்த்தைக்கு சம பலம் அவசியம் என்பதை அவை இரண்டும் உணர்ந்திருக்கின்றனர்.



அப்படியானால் எமது முஸ்லிம்களும் அவைகளைப் போல் ஆயுதக் குவிப்பில் ஈடுபடவேண்டுமா? என்ற கேள்வி எழுவது நியாயமானதுதான்? நாம் அப்படிச் சொல்லவில்லை எனினும் ஏகே. 47 கொண்டு எம்மைத் தாக்க வரும் எமது எதிர்த்தரப்பாரிடம் வெறும் அவல்மெல்லும் வாய்களை வைத்துக் கொண்டிருந்து 'வெள்ளைக் கொடி" காட்டி 'சாமரம்" வீசி அடிமைகளாக மண்டியிட வேண்டிய தொரு துர்ப்பாக்கிய நிலை நமது சமூகத்திற்கேற்படக்கூடாது என்ப தற்காகவே சுட்டிக்காட்டுகின்றோம். நாங்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இறைவனின் நாட்டம் எதுவோ அதன் படிதான் எதுவுமே நடக்கும். எப்படியான மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்து அரசி யலில் உலாவந்தாலும் 'எம்மைத் தாக்கும் பலர்கள்" அந்தக் கொள்கை யிருப்பதற்காக எமது சமூகத்தைத் தாக்க மாட்டார்களா? என்பதற்கு கடந்தகால எமது சமூகத்தின் அழிவு களே சான்றுகளாகும். இவைகளைப் பார்த்துமா இன்னும் நாம் பிதற்று கின்றோம்.

எமது இஸ்லாம் என்ன சொல்கி ன்றது. நம்கண்ணெதிரே அநீதி யொன்று நடைபெறும் போது முதலில் கைகளால் தடுங்கள். அது முடியாத பட்சத்தில் நாவினால் தடுங்கள். அதற்கும் இயலாது போனால் மனதால் வெறுத்து ஒதுங்கிக் கொள்ளுங்கள். இதன்படி பார்த்தால் இன்று எமது நாட்டில்

எம்.எல்.எம். முஸ்தபா - *மருதமுனை*

---

### நம்பிக்கை

எங்கள் வீட்டில்
மாலை களவு போய் விட்டது.

துறிபார்க்க
வைத்தியர் வீட்டுக்குப் போனேன்
வைத்தியர், மனைவி, மக்கள்
வளவுறுதியைக் காணவில்லையாம்
தேடிக் கொண்டிருக்கிறார்கள்!

### காதல்

என்னுடைய காதல்
இன்பமாய் முடிந்தது!
அவளுடைய திருமணத்தில்.

### மன்னிப்பு

கோழியே இன்றுனக்கு
சோறு போடுகிறேன்
உண்டு கொள்
நாளை உன்னைச்
சோற்றில் போடுவேன்
மன்னித்து கொள்

மருதமுனை எம்.எச்.ஏ.கரீம்

---

## முஸ்லிம்களை அணைத்துத்தான் தமிழர்கள் முன்செல்ல முடியும்!

# மதம் என்றால் அவர்களுக்கு வெறி மாதிரி!

"வேண்டிய உறுதி மொழிகளை முஸ்லிம்களுக்குக் கொடுத்து அவர்களையும் அணைத்துத்தான் தமிழர்கள் முன்னுக்குப் போக இயலும் அந்த அணைப்பு இல்லாத இடத்திலே அவர்கள் முரண்டு பிடித்து பிரிந்து போகத்தான் பார்ப்பார்கள்"

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடாதிபதியும், பேராசிரியையுமான மனோ சபாரெட்ணம் கூறினார்.

**பேராசிரியை மனோ சபாரெட்ணம்.**

லண்டன் பிபிசி தமிழோசைப் பணிப்பாளர் மணிவண்ணன் கிழக்கு மாகாணம் வந்திருந்தபோது பேராசிரியை மனோ சபாரெட்ணம் முன்சொன்ன கருத்தை வலியுறுத்தினார். இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக முஸ்லிம்களுக்குள்ள அச்ச நிலை தொடர்பாக அவர் விளக்கமளித்தார். தொடர்ந்து அவர் குறிப்பிடும்போது,

"முஸ்லிம்கள் ஆரம்பத்தில் அமைச்சர் ஹக்கீமுடன் பேச்சுவார்த்தைக்குப் போய் வந்தார்கள். ஆனால் பேந்து போகப்போக தமிழ். முஸ்லிம் உறவிலே நெகிழ்வு எற்படவில்லை. எங்களுக்குத் தனியலகு வேண்டும்! நாங்கள் தனியாகத்தான் கதைக்க வேண்டும் என்றெல்லாம் கதைக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

உண்மையிலே இந்த இடைக்கால நிர்வாகத்திலே இன்றைக்கு இருக்கின்ற கால கட்டத்திலே என்ன செய்ய வேண்டும் என்றால் புலிகள் நேரடியாக முந்திச் சொல்லியிருக்கலாம் நாங்கள் உங்களைப் பார்த்துக் கொள்வோம், நாங்கள் உங்களை கைவிட மாட்டோம் என்று அப்படி இப்படிச் சொல்லியிருந்தாலும், திரும்பவும் இதை மீளப்பதிய வைக்க வேண்டும்.

ஏனென்றால், முஸ்லிம்கள் (அவர்கள்) இன்றைக்கு எங்களை நம்புகிறார்களில்லை. எங்களை என்று சொல்லும்போது தமிழ் மக்களைப், புலிகளை நம்பவில்லை. அப்படியாக சில உறவுகள் குலைந்து போவதற்கு சில நிகழ்வுகள் நடந்திருக்கலாம். அத்தோடு இந்த அரசியல்வாதிகளும் பின்னுக்கு நிற்கிறார்கள்.

இடைக்கால நிர்வாகம் வந்தால்தான் எங்கள் மண்ணை, கல்வியை, எங்கள் பாதுகாப்பை நிச்சயம் செய்ய முடியும். இதே மாதிரித்தான் முஸ்லிம்களும் நினைக்கலாம்.

நாங்கள், எங்கள் தமிழர் பாரம்பரியம், கலாசாரம் என்றெல்லாம் சொல்கின்றோம். முஸ்லிம்கள் (அவர்கள்) தங்களுடைய மதத்தைத்தான் சாடப் பார்க்கிறார்கள். மதம் என்றால் அவர்களுக்கு ஒரு வெறிமாதிரித்தான். அந்தளவுக்கு அவர்கள் வைராக்கியமாக இருக்கின்றார்கள். தமிழ் ஆட்களைப் பொறுத்த வரையில் மதம் அவர்களுக்குப் பெரிதாகத் தெரியவில்லை." என்று தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினார் பேராசிரியை மனோ சபாரெட்ணம் அவர்கள்.

ஹுசைன் பின் ஹமீட்

---

## அசிரியர் சங்கச் செயலாளருக்கு கொழும்பில் விருது வழங்கி கௌரவிப்பு



இவ்வாண்டு ஒக்டோபர் 6ம் திகதி கொண்டாடப்பட்ட உலக ஆசிரியர் தினத்தில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய சமூக சேவை அமைப்பு கொழும்பில் நடாத் திய தேசிய மகாநாட்டில் இலங்கை இஸ்லா மிய ஆசிரியர் சங்கத்தின் தேசிய பொதுச் செயலாளர் மூதூர் மைந்தன் அல் -ஹாஜ் எம்.அனஸ் அவர்கள் "ஸ்லைசோ" அமைப்பால் விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் 50வருட கால வரலாற்றில் முதன் முறையாக தேசிய பொதுச் செயலாளராகப் பதவி வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் :- அ.கா.மு. றிஸ்வின். மூதூர்

---

## நிருவாகிகள் தெரிவு

பொத்துவில் பிரதேச சௌபாக்கியா இளைஞர் அணியினை தெரிவு செய்யும் நிகழ்வு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் திரு. கே. நேசராசா அவர்களின் தலைமையில் அண்மையில் பொத்துவில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு தெரிவு செய்யப்பட்ட நிருவாகிகளின் விபரம் வருமாறு.

சிரேஷ்ட தலைவர் :- ஜனாப் எம்.எம். நௌபல் (பிரதேச செயலாளர்)

தலைவர்கள் :- ஜனாப் எஸ்.எஸ். முகைதீன் (கல்விப் பணிப்பாளர்), திரு. கே. நேசராசா (தலைமைப்பீட முகாமையாளர்), கலைஞர். எம்.எஸ்.எம். றிஸ்வி. (கிராம நிலதாரி), ஜனாப். ஏ.கே.எம். ஹாறூன். (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

செயலாளர்கள் :- திரு. ஈ. சுதாகரன் (ச.அ.உ) ஜனாப் எம்.பி. இஸ்மாலெவ்வை. (கிராமிய இளைஞர் அணி உறுப்பினர்)

அமைப்பாளர்கள் :-ஜனாப் ஏ.எல்.எம். இஸ்மாயீல். (இளைஞர் சேவை உத்தியோ கத்தர்), திரு. ஜே.எஸ்.டி.எம். தயாரத்தின. (விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்), ஜனாப் எம்.ஐ.ஏ. றஸாக். (மஹா சங்கத் தலைவர்), கவிஞர். யூ.எல்.எம். அஸ்மின். (கிராமிய இளைஞர் அணி உறுப்பினர்)

பொருளாளர் :- திரு. எஸ். சிறிநாத். (கிராமிய இளைஞர்அணி உறுப்பினர்)

மேலும் ஐவகை நெறிப்படுத்தல் வட்டங்களாக பொருளாதாரம், சமூகம், தலைமைத்துவம், கலாசாரம், உடல், உளரீதியான இருபது அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் :- **கே. நேசராசா** பிரதேச செயலகம். பொத்துவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியனை நிறுத்துங்கள்

ஆமிர் பின் கைஸ் ஒரு மிகப் பெரிய இஸ்லாமிய அறிஞர். இஸ்லாமிய வரலாற்றில் அவருக்குத் தனி இடம் உண்டு. ஒரு முறை அவரிடம் அவரது நண்பர் ஒருவர் வந்தார். 'வாங்க ஆமிர்! கொஞ்சம் உட்கார்ந்து பேசுவோம்!" என்றழைத்தார். அதற்கு ஆமிர் பின் கைஸ் அளித்த பதில் வீண் அரட்டையில் நேரத்தைக் கழிப்பவர்களுக்கு சவுக்கடி ஆகும்.

# வாழ்வில் முன்னேறுவதற்கு நேரம் ஒரு வெகுமதி!

ஆமிர் சொன்னார் 'அப்படியெனில் கொஞ்சம் சூரியனை நிறுத்தி விடுங்கள்." அதாவது காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை. கடந்து போன காலம் திரும்பி வரப் போவதும் இல்லை. உண்மை நிலை இப்படியிருக்க அரட்டையில் நேரத்தை வீணடிக்க ஏது இங்கே நேரம்?

இஸ்மாயில் பின் இஸ்ஹாக் அல்காழி ஒரு சிறந்த நீதிபதியாகத் திகழ்ந்தவர். அவருக்கு எந்த நேரமும் படிப்புதான். எப்போதும் புத்தகமும் கையுமாக இருப்பார். அவர் தேவையில்லாமல் எவருடனும் ஒரு வார்த்தை பேசியது கிடையாது.

இப்னு ருஷ்த பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். சிறந்த மருத்துவர். விஞ்ஞானி. பன்மொழிப் புலவர். அரிஷ்டாட்டில், பிளேட்டோ போன்றோரின் தத்துவச் சிக்கல்களை விடுவித்தவர். பனிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவரது வாழ்வில் இரண்டே இரவுகளைத் தான் புத்தகம் வாசிக்காமல் கழித்தார். முதலாவது அவரது திருமண இரவு இரண்டாவது அவரது அன்னை இறந்த இரவு.

இமாம் இப்னு ஜரீர் திப்ரி தினமும் 36 பக்கங்கள் எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமது வாழ்வில் ஒரேயொரு நாளையும் அவர் வீணடித்தது கிடையாது.

இமாம் ஃபகருத்தீன் ராஜி குறித்து அறிமுகம் தேவையில்லை. குர்ஆன் விரிவுரையாளர். மருத்துவர், கணித நிபுணர். இயற்பியல் அறிஞர், தத்துவ ஞானி. வார்த்தைச்சித்தர். சிறியதும் பெரியதுமாக நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். அவரது குர்ஆன் விரிவுரை மட்டும் முப்பது தொகுதிகளைக் கொண்டதாக இருந்தது. அந்த மாபெரும் அறிஞரின் ஒரே வருத்தம் என்ன தெரியுமா? 'சாப்பிடவும் பருகவும் செலவாகும் நேரம்தான்."

அல்லாமா ஷஹாபுத்தீன் மஹ்மூத் ஆலூசி குர்ஆன் விரிவுரை எழுதியிருக்கின்றார். அவர் தமது இரவை மூன்று பகுதிகளாகப் பிரித்து விடுவார். ஒரு பகுதியை தூங்கவும் ஓய்வெடுக்கவும் ஒதுக்கியிருந்தார். இரண்டாவது பகுதியை இறைநினைவிலும் தொழுகையிலும் கழிப்பார். மூன்றாவது பகுதியை எழுதுவதிலும் படிப்பதிலும் செலவிடுவார்.



புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞர் இமாம் கஸ்ஸாலிக்கு அறிவுப் பாடம் புகட்டிய ஆசான் இமாமுல் ஹரமைன் அபுல் முஆலி அப்துல் மலிக் ஜுவைனி அடிக்கடி சொல்லும் அனுபவமொழி இது: "தூங்குவதையோ, சாப்பிடுவதையோ நான் பழக்கமாக்கிக் கொள்ளவில்லை. இரவிலோ, பகலிலோ தூக்கம் வரும்போது தூங்கி விடுவேன்." கற்பதும். கற்றுத் தருவதும் தான் அவருக்கு எல்லாமே.

அல்லாமா இப்னு ஜவ்ஸி சிறியதும் பெரியதுமாக ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் எழுதியிருக்கின்றார். அவர் தம் வாழ்நாளில் ஒரு நிமிடத்தையும் வீணடிக்கவில்லை. கடைசிக் காலத்தில் அவரிடம் ஒரு விந்தையான பழக்கம் இருந்தது. எழுதுகோலைச் சீவும் போது அந்த சீவல்களை வீசிவிடாமல் சேமித்து வைத்திருந்தார். அவர் இறந்த பிறகு அவரது உடலைக் குளிப்பாட்டுவதற்காக அந்த சீவல்களைக் கொளுத்தியே வெந்நீர் தயாரித்து விட்டார்கள்.

இப்னு சீனா! விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல சிறு வயதிலேயே அறிவுக் கூர்மையுடன் திகழ்ந்தவர். மருத்துவர். மனவியல் நிபுணர். மருத்துவக் கோட்பாடுகளை வகுத்தவர். அரிஸ்டாட்டிலின் தத்துவங்களைத் திருத்தியவர். நோய் வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருந்த போதும் அறிவுத் தாகம் தீரவில்லை. தன்னை நலம் விசாரிக்க வந்த ஃபிக்ஹு அறிஞரிடம் ஒரு பிரச்சினை குறித்து விளக்கம் கேட்டார். அவர்.

நேரம் வீணாவதற்கான காரணங்கள் :

பொதுவாக நம்மையறியாமலேயே நாம் நிறைய நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம். நேரம் வீணாவதற்கான காரணங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தனிப்பட்ட காரணங்கள்
2. சமூக அமைப்பு நம் மீது திணிக்கும் நிர்ப்பந்தங்கள்.
3. கற்பனைக் காரணங்கள்.

எந்தெந்த விதங்களில் நேரம் வீணாகிறது? எப்படியெல்லாம் நாம் நேரத்தை வீணாக்குகிறோம்? கீழே சில குறியீடுகள் தரப்படுகின்றன.

எல்லா வேலைகளையும் சுயமாக செய்ய முற்படுவது. எல்லாவற்றையும் தாமே செய்ய முயல்வது. மற்றவர்களின் அனுபவங்களைக் கேட்டு பயன்பெறுவதில் நாட்டமில்லாமல் இருப்பது. இது நேரத்தை வீணாக்கும் மனோபாவம் ஆகும்.

மற்றவர்களிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற ஆர்வம் இதனால் யார் என்ன சொன்னாலும் கொஞ்சங்கூட யோசிக்காமல் 'சரி செய்கிறேன்' என்று தலையாட்டி விடுவது. பிறகு செய்ய முடியாமல் டென்ஷனாகித் தவிப்பது. எதைச் செய்யமுடியுமோ அதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயலாத பட்சத்தில் வருத்தம் தெரிவித்து ஒதுங்கிக் கொள்வதில் தவறில்லை.

எல்லாவற்றையும் கச்சிதமாக, அப்பழுக்கில்லாமல Perfect ஆக செய்ய நினைப்பது. இது மோசமான நோய். இதனால் இவர்கள் எந்த வேலையையும் முழுமையாகச் செய்து முடிப்பதில்லை. இன்னும் அழகாகச் செய்ய வேண்டும் என்று நேரத்தை நீட்டிக்கிறார்கள். மனித வாழ்வு நிரந்தரமானதல்ல. எந்தத் தருணமும் அது முடிந்து போகலாம். அழகாக செய்ய நினைத்து முழுமையாக செய்து முடிக்காமல் இருப்பது எந்த விதத்தில் நியாயம் ஆகும்?

திறமையோ, ஆற்றலோ இல்லாத நிலையிலும் கொஞ்சங்கூட யோசிக்காமல் வெறும் ஆசையால் உந்தப்பட்டு எந்தவொரு வேலையை செய்வதும் நேரத்தைப் பாழாக்கும்.

சோம்பல், தட்டிக் கழிக்கும் மனப்பான்மை, பிறகு செய்யலாம் என்ற சிந்தனை - நேரத்தை வீணடிப்பதற்கான மிகப்பெரிய காரணம் இதுவே. 'பிறகு செய்யலாம்" என்ற மனப்பான்மை இருக்கிறதே, அது நேரத்தை கொன்று விடும் ஒன்றாகும்.

'நாளை செய்யலாம்" இது ஒரு மோசடி ஆகும் இதைக் குறித்து ஒரு பெரியவர் சொன்னார்: 'அறிஞர்களின் பதிவேட்டில் நாளை என்ற வார்த்தையே இருக்காது. முட்டாள்களின் குறிப்புகளிலோ அது மிக அதிக அளவில் இடம்பெற்றிருக்கும். அறிவு இந்த வார்த்தையை ஏற்றுக் கொள்வதில்லை. கற்பனைக் கோட்டைகளைக் கட்டுபவர்களுக்குப் பிடித்தமான நெடுஞ்சாலையில் நடந்து சென்று பாருங்கள். எத்தனையோ பேர் கால் ஒடிந்து , கை ஒடிந்து விழுந்து கிடப்பார்கள்; 'நாளை'யைப்பின்பற்றி பாதையைத் தொலைத்துவிட்டு குழியில் விழுந்து விட்டோம் என்று சொல்வார்கள். 'நாளைவரும் நமது கவலைகள் தீரும்; இன்பக் கடலில் நீந்துவோம்" என்ற கனவில் சிந்தையை இழந்து அமர்ந்து விட்டோம். ஆனால் இன்று வரை அந்த 'நாளை' வரவேயில்லை.



உஸ்மான் மரிக்கார்



ஈழத் தமிழ் மக்களின் துன்பம் கேட்டு எத்தனை கவிதை பாடியிருப்பாய்? எத்தனை கட்டுரை வரைந்திருப்பாய்? எத்தனை கவியரங்கு செய்திருப்பாய்? எத்தனை மேடைப் பேச்சு நிகழ்த்தியிருப்பாய்?

ஆனால் ஈழத்து இஸ்லாமியர்களின் துயர் பற்றித் தமிழகத்து இஸ்லாமியனான நீ ஒரு கவிதை? ஒரு கட்டுரை? ஒரு கவியரங்கு? ஒரு மேடைப்பேச்சு? மூச் ஒரு வரி எழுதியிருப்பாயா? ஒரு துளிக்கண்ணீர் சிந்தியிருப்பாயா? சொல்!

ஈழத்து தமிழர்களுக்காக நீ மெழுகுவர்த்தியாக உருகுகிறாயே. ஈழத்து முஸ்லிம்கள் என்றதும் உன் இதயம் கல்லுவர்த்தியாய்ப் போனது ஏன்? தப்பு கல்லுக்குள்ளும் ஈரம் உண்டல்லவா? கல்லிலும் கீழாய்ப் போனாயே. நீ மொழியால் தமிழன் மதத்தால் இஸ்லாமியன். உனக்குள் தமிழ் உயிர் வாழ்கிறது - சந்தோஷம்! ஆனால் உனக்குள்ளிருக்கும் இஸ்லாமியம் செத்துப் போனதே? - பரிதாபம்!

ஈழத்து முஸ்லிம்களை விட்டுத் தள்ளு சகோதரா பலஸ்தீன், பொஸ்னியா, செச்னியா, அனைத்தையும் விட்டுத்தள்ளு. அவர்கள் பயங்கரவாதிகள் அல்லவா? நீ தேசத்தால் இந்தியன் அல்லவா? இலக்கிய முஸ்லிம்களுக்காவது பேசி இருப்பாயா? சொல்!

காஷ்மீரியர்களின் கதறல் உன் காதில் விழவில்லையா? குஜராத்தியர்களின் குருதி உன் முகத்தில் தெறிக்கவில்லையா?

சகோதரா! உனது அகராதியில் யாழ்ப்பாணத்தில் நடப்பது விடுதலைப்போராட்டம், காஷ்மீரில் நடப்பதுவோ பயங்கரவாதம். அது எப்படி சகோதரா? இரண்டும் ஒன்றுதானே! பேரினவாதத்தின் இரும்புப்பிடியில் பூத்த சிற்றினங்களின் போராட்டமல்லவா இரண்டும்? இரண்டையும் 'விடுதலைப் போராட்டம்" என்று சொல்லும் சமதர்மவாதியையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இரண்டையும் 'பயங்கரவாதம்' என்று சொல்லும் முதலாளித்துவவாதியையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ஒன்றை 'விடுதலைப் போராட்டம்' என்றும், மற்றதை 'பயங்கர வாதம்' என்றும் சொல்லும் உன்னைப்போன்ற நயவஞ்சக நாக்கனைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சரி போகட்டும் சகோதரா! காஷ்மீரிகள் தான் பொல்லாதவர்கள் அநியாயமாகத் தனிநாடு கேட்கிறார்கள். குஜராத்தியர்கள் என்ன கேட்டார்கள்? வாஜ்பேயின் ஆசிர்வாதத்துடன் குஜராத்திய மண்ணில் குருதி வெள்ளம் பெருக்கெடுத்தோடிய போதும், குருட்டு பொம்மை போல் குந்தி இருந்தாயே. இப்படியெல்லாம் விபரம் தெரியாதவர்கள் விமர்சிக்கக்கூடும். ஆனாலும் சகோதரா அவர்களுக்குத்தெரியுமா? நீ கருணாநிதியின் அரசவைக் கவிஞன் அல்லவா? உனக்குக் கருணாநிதியின் தயவு வேண்டும். கருணா நிதிக்கு வாஜ்பேயின் தயவு வேண்டும். ஆக வாஜ்பேயைத் திருப்திப் படுத்த வேண்டியது கருணாநிதியின் கடமை. கருணாநிதியைத் திருப்திப்படுத்தவேண்டியது உனது கடமை. ஆக குஜராத்தில் ரத்த ஆறு ஓடினால் என்ன? உன் காட்டில் மழை பொழிந்தால் சரி.

தமிழ்ப் புத்தகங்கள் எரிக்கப்பட்டபோது புலம்பினாயே. மனிதர்கள் - தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் யாராயிருந்த போதிலும் சரி-டயர்களில் போட்டு எரிக்கப்பட்டு புலிகள் நரமாமிசப் பூஜை நடத்தி மகிழ்ந்தபோது மட்டும் நீ மௌனித்தது ஏன்?

சக்கரம் - விஞ்ஞானத்தின் குறியீடு.
டயர் - காட்டுமிராண்டித்தனத்தின் குறியீடு.

அதிசயம்தான். மனிதம் என்றும் மானுடம் என்றும் பீற்றுகிறாயே. பச்சைப் பாலகன் தென்னை மரத்தில் அறையப்பட்டுச் சிதறிய சங்கதி உனக்குத் தெரியாதா? கர்ப்பிணித்தாயின் வயிற்றுத்தசைகிழிக்கப்பட்டு, கண்திறவா இளஞ்சிசு வெளியில் எடுக்கப்பட்டுத் தரையில் அறையப்பட்டு கொலைசெய்யப்பட்ட கொடூரம் உனக்குத் தெரியாதா?

தெரியாது என்று எப்படிச் சொல்வாய்?

மனிதர்களைவிடவும் புத்தகங்களை நேசிப்பவனே! இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு நீ இலங்கை வந்தபோது உனக்கு ஒரு புத்தகம் தரப்பட்டது ஞாபகமா? 'மீசான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்' மறந்திருக்கமாட்டாயே. அதைப்படித்தும் உன் இதயம் துடிக்கவில்லையா? சொல்.

ஓர் இஸ்லாமியனுடைய இதயம் மீசான் தராசு முட்போல் கூர்மையாக இருக்க வேண்டும். உனது இதயமோ மீசான் கட்டைபோல் இல்லையில்லை, அதன் கீழே இருக்கும் மையித்தைப்போல் இருக்கிது.

அற்ப உயிரினங்களும் அடக்கம். அனைத்தின் மீதும் அன்பு காட்ட வேண்டும் என்று போதித்த நவீன போதிமாதவன் நீயல்லவா? மயிர் கொட்டிக்காகத் துடிக்கின்றாயே. மயிர் கொட்டிகளைப்போல் மனிதர்கள் எரிக்கப்பட்டபோது மட்டுமே மௌனித்தது ஏன்? ஈழத்து இஸ்லாமியரான நாம் மயிர் கொட்டிகளைவிடவும் இழிந்தவர்களா என்ன? ஆயின் உனது மனிதம், மானுடத்துக்கு அர்த்தம் என்ன சகோதரா?

ஆக சகோதரா இது உன்னை மட்டும் சுட்டும் கட்டுரையல்ல. உன்னையும் உன்னைப்போன்றவர்களையும். போன்றவர்களையும் சுட்டும் 'குறியீடு' - நீ உன் கலாநிதிப் பட்டத்துக்கு எடுத்துக்கொண்ட கரு. ஐயா! டாக்டரே! நீயே ஒரு குறியீடாகிப்போனாயே. நோயாளிகளின் குறியீடு. இஸ்லாத்தின் ஈரத்தையும் சாரத்தையும் இழந்து பிரபாகர மயமாகிப் போனவர்களின் குறியீடு.

இன்னுமொரு விடயத்தையும் நான் சொல்லியாக வேண்டும். இந்தக் கடிதத்தை நான் ஓர் அனாமோதயனாக எழுதவில்லை: புனைப் பெயரில் ஒளிந்து கொண்டு எழுதவுமில்லை என் சொந்தப் பெயரில்தான் எழுதியிருக்கிறேன். அதற்காகத் தமிழ் மக்கள் என்னை நிராகரித்து விடுவார்களோ என்ற அச்சம் அணுவளவும் என்னிடமில்லை வேண்டுமானால் 'வேங்கையின்' ஆதரவாளர்கள் என்னை வெறுக்கலாம் அப்படி அவர்கள் என்னை வெறுத்தால் அது எனக்கு அவமானமல்ல வெகுமானமன்றோ?

சகோதரா! நீ தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு ஒரு தகுந்த காரணம் உண்டு. நீ வாழும் சமூகத்தில் - தமிழகத்தில் அவர்கள் தான் பெரும்பான்மையினர். ஆயினும் நீயோ சிறுபான்மையினன். பெரும்பான்மையின் அங்கீகாரத்துக்காக ஆலாய்ப்பறக்கின்ற சிறுபான்மையினன் ஆகவேதான் இலங்கைத் தமிழ் மக்களுக்காக நீ குரல் கொடுக்கின்றாய். (ஒருக்கால் நாம் சிங்கள வெறியர்களால் கோரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தால் குரல் கொடுத்திருக்கக் கூடும். ஆனால் தமிழ் வெறியனான பிரபாவினால் இனசம்ஹாரம் செய்யப்படுவதனால் நீ அதை 'அடக்கி" வாசிக்கிறாய்)

நீ இந்தோனேஷியாவில் பிறந்திருந்தால் அங்கே இஸ்லாமிய இராணுவத்தால் அடக்குமுறைகளுக்காளான சிறுபான்மைக் கிறிஸ்தவர்களுக்காக ஒரு போதும் பேசி இருக்க மாட்டாய். நீ இஸ்ரேலில் பிறந்திருந்தால் யூத அரசால் ஒடுக்கப்படுகின்ற பலஸ்தீனர்களுக்காக ஒரு போதும் குரல் கொடுத்திருக்க மாட்டாய். வேங்கைகளால் வெங்கொடுமைக்காளாகும் ஈழத்து இஸ்லாமியருக்காகவும் நீ குரல் கொடுக்கப் போவதில்லை.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா டயறி

23 நவம்பர் - 2003
*கிரனைட் வீச்சு*
*இடம் - பைசல் நசர்*
*ஒருவர் மரணம்*
*இரண்டுபேர் படுகாயம்*

மரணமடைந்தோர்
01. எம்.எச். நசூருதீன் (30)

காயமடைந்தோர்
01. எம். ஜமால்தீன் (51)
02. எ.எஸ். ஜும்ஹான் (26)

28 நவம்பர் - 2003
*வெட்டிக் கொலை*
*இடம் - நடுவூற்று*
*மூவர் மரணம்*

மரணமடைந்தோர்
01. எ.எம். சுபைர் (56)
02. எம்.எப்.ஏ. ஹசன் (61)
03. என். பளீல் (52)

24 நவம்பர் - 2003
*மரக்கறி லொறிக்கு குண்டு வீச்சு*
*இடம் - கச்சக்கொடித்தீவு*
*இருவர் மரணம் இருவருக்கு படுகாயம்*

மரணமடைந்தோர்
01. ஐ. நூர்தீன் (40)
02. ரீ. அப்துல் அசாம் (26)

காயமடைந்தோர்
01. எம்.எஸ். ஹிதாயத்துல்லா (27)
02. என்.எம். முஜீப் (32)

30 நவம்பர் - 2003
*கிரனைட் தாக்குதலும், துப்பாக்கிச் சூடும்.*
*இடம் - பைசல் நகர்*
*ஒருவர் மரணம் மூன்று பேர் காயம்*

மரணமடைந்தோர்
01. எம்.எஸ். சக்கரியா (51)

காயமடைந்தோர்
01. கே.எம். ஹபீப் (37)
02. கே.எம். சு. உம்மா (72)
03. எம்.எஸ். செய்னம்பு (35)

25 ஒக்டோபர் (ஆரம்ப சம்பவம்)
எம்.பி. மஃறூப் (44)
(மின்சார சபை ஊழியர்)

1 டிசம்பர் 2003
*துப்பாக்கிச் சூடு*
*இடம் - கச்சக்கொடித்தீவு*
*ஒருவர் படுகாயம்*
காயமடைந்தவர்: 01. ஜெலீல்

# அதிசயம் ஆனால் உண்மை

இவ்வருட ரமழான் மாதம், முதல் நோன்பில் இருந்து பெருநாளைத் தாண்டியும் திருகோணமலை மாவட்டத்தில் திருமலை நகரத்திலும் கிண்ணியாவிலும் முஸ்லிம்கள் மீதான புலிகளின் போக்கு இன்றளவும் தொடர்ந்த வண்ணமேயிருக்க, இதனிடையே பல சுவரஸ்யமான நிகழ்வுகளும் இடம்பெறாமலில்லை.

புலிகளின் கொலை, கொள்ளை, தீவைப்பு, ஆட்கடத்தல் என அடாவடித்தனங்கள், அடக்குமுறைகள் அத்தனைக்கும் முஸ்லிம்கள் ஆட்பட்டுக் கொண்டிருக்க, அப்பிரதேச தமிழ் மக்கள் மாத்திரம் இடம்பெயர்ந்து அகதிகளானது அதிசயம்.

அத்தனை கொடுமைகளையும் புலிகளே செய்துவிட்டு வழமைபோல குறித்த சம்பவத்திற்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்புகளுமில்லை என்ற பாணியில் மறுத்துவிட்டு "கோழி திருடியவனும் கூட நின்று தேடியது போல" கிண்ணியாச் சம்பவங்களுக்குக் காரணமானவர்களை புலிகள் கண்டுபிடிக்கப்போகிறார்களாம். அதிசயம்தான்.

வதந்திகள் தீங்கானவை. அவை பொதுமக்கள் மத்தியில் பிறந்து அவர்கள் மத்தியிலேயே உலாவரும். ஆனால் வழமைக்குமாறாக இம்முறை பாராளுமன்றத்திலும் வதந்தி பிறந்துள்ளது. 2003-12-03 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் மகேஸ்வரனின் உரை இவ்வாறிருந்தது. "மூதூரில் தமிழ் மக்கள் அகதிகளாகியுள்ளனர். அவர்கள் நிவாரணப்பொருட்கள் இன்றியும், குறிப்பாக குழந்தைகளுக்குப் பால்மா இன்றியும் வாடுகிறார்கள். எனவே உடன் நிவாரணம் வழங்கவேண்டும்" என்றார்.

ஐயா! அமைச்சர் அவர்களே, தற்போதைக்கு மூதூரை புலிகள் தற்காலிகமாக சுமுகமாக விட்டு வைத்திருக்கிறார்கள், இந்நிலையில் எங்கே இருக்கிறார்கள் தமிழ் அகதிகள்? அப்படியாருமே இல்லை. இப்படியிருக்க அதியுயர்சபையில் ஏனையா! அப்படி இந்த வதந்தியைக் கூறினீர்கள்? நீங்கள் இவ்வாறான வதந்தியைப் பரப்புவதன் உள்நோக்கம்தான் என்ன? அச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் மூதூர் எம்.பி இருந்திருந்தால் நிச்சயம் பதிலடி தந்திருப்பார். ஆனால் அவர் பாராளுமன்றத் தேநீர் விடுதியில் அப்போது இருந்திருக்கலாம்...?

(மூதூர் செய்தியாளர்)

# கிண்ணியா வயல் வெளியில் கொல்லப்பட்டவர்கள் தங்கியிருந்த இடம்



# முஸ்லிம் பாடசாலைகள் கலண்டர் . 2004

முதலாவது தவணை

| மாதம் | வாரம் | திங் | செவ் | புதன் | வியாழ | வெள்ளி |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 05 | 06 | X | 08 | 09 |
| ஜனவரி | 2 | 12 | 13 | 14 | X | 16 |
| ஜனவரி | 3 | 19 | 20 | 21 | 22 | 23 |
| ஜனவரி | 4 | 26 | 27 | 28 | 29 | 30 |
| பெப்ரவரி | 5 | 02 | 03 | X | X | 06 |
| பெப்ரவரி | 6 | 09 | 10 | 11 | 12 | 13 |
| பெப்ரவரி | 7 | 16 | 17 | X | 19 | 20 |
| பெப்ரவரி | 8 | 23 | 24 | 25 | 26 | 27 |
| மார்ச் | 9 | 01 | 02 | 03 | 04 | 05 |
| மார்ச் | 10 | 08 | 09 | 10 | 11 | 12 |
| மார்ச் | 11 | 15 | 16 | 17 | 18 | 19 |
| மார்ச் | 12 | 22 | 23 | 24 | 25 | 26 |
| மார்ச்/ஏப்ரல் | 13 | 29 | 30 | 31 | 01 | 02 |
| ஏப்ரல் | 14 | X | 06 | 07 | 08 | 09 |

மொத்தம் 63 நாட்கள்

இரண்டாவது தவணை

| மாதம் | வாரம் | திங் | செவ் | புதன் | வியா | வெ |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 1 | 19 | 20 | 21 | 22 | 23 |
| ஏப்ரல் | 2 | 26 | 27 | 28 | 29 | 30 |
| மே | 3 | 03 | X | X | 06 | 07 |
| மே | 4 | 10 | 11 | 12 | 13 | 14 |
| மே | 5 | 17 | 18 | 19 | 20 | 21 |
| மே | 6 | 24 | 25 | 26 | 27 | 28 |
| ஜுன் | 7 | 31 | 01 | X | 03 | 04 |
| ஜுன் | 8 | 07 | 08 | 09 | 10 | 11 |
| ஜுன் | 9 | 14 | 15 | 16 | 17 | 18 |
| ஜுன் | 10 | 21 | 22 | 23 | 24 | 25 |
| ஜுன்/ஜுலை | 11 | 28 | 29 | 30 | 01 | X |
| ஜுலை | 12 | 05 | 06 | 07 | 08 | 09 |
| ஜுலை | 13 | 12 | 13 | 14 | 15 | 16 |
| ஜுலை | 14 | 19 | 20 | 21 | 22 | 23 |
| ஜுலை | 15 | 26 | 27 | 28 | 29 | 30 |
| ஆகஸ்ட் | 16 | 02 | 13 | 04 | 05 | 06 |

மொத்தம் 76 நாட்கள்

மூன்றாந் தவணை விபரம் அடுத்த இதழில்...

# அரேபியத் தொலைக்காட்சிக்கு ஈராக்கில் தடை



ஈராக்கில் அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதை ஒளிபரப்பியதற்காக ஈராக்கிலுள்ள அமெரிக்க நிருவாகம் அல்-அரேபியா தொலைக்காட்சியைத் தடை செய்துள்ளது. உலகளவில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கு பரந்த அளவில் பெருமளவு முதலீட்டுடன் அமெரிக்க சார்பு ஊடகங்களை உருவாக்கிவரும் அமெரிக்கா, அரபுலக மக்களின் நியாயமான உரிமைகளை தடுத்து வருகின்றது. அல் ஜெசீரா தொலைக்காட்சியும் அமெரிக்காவால் தடைசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது


**மனித வள ஆற்றல் தேவைப்படுகிறது!**

மொழிபெயர்ப்பாளர்கள்
ஆங்கிலம் - சிங்களம்
செய்தி ஆசிரியர்கள்

வீடியோ படப்பிடிப்பாளர்கள்

**டிசம்பர் 15 ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.**

181/1, ஆனந்தமாவத்த,
கொழும்பு - 10.

தொ.பே.இல : 011 4734507
பெக்ஸ் : 011 473508



நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

**சந்தா விபரம்!**

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்)- 500/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org